ACL-ETS
00438

உ

சிவமயம்

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

கந்தரந்தாதி

அவர்காலத்திற்றானே அதற்கு

வில்லிபுத்தூரார் செய்த உரையும்

சென்னை கிறிஸ்டியன் காலேஜ்

மாஜி தமிழாசிரியர்

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்

புதிதாக எழுதிய

விருத்தியுரையும்

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

ரிஜிஸ்டர் காபிரைட்] 1937 [விலை அணா 1

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்ற வர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுவது யாதெனில்:—கந்த ரந்தாதி என்னும் இந்நூலுக்கு, சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழாசிரியர் T. C. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களைக்கொண்டு 30-பாட்டுக்கு விருத்தியுரை எழுதுவித்து ஷை அய்யங்காரிடம் சர்வ சுதந்திரமும் பெற்று யான் அச் சிட்டு மகாகனம்பொருந்திய கவர்ண்மென்டார் அவர்கள் சட் டப்படிக்கு காபிரைட் செய்து வெளிப்படுத்தி யுள்ளேன். ஆகையால் இதனை என் உத்தரவின்றி வேறு யாரும் அச்சிடக் கூடாது என்பதை தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

முகவுரை

"ஓம் நமஸ்தே சததேதே ஜகத் காரணாய
நமஸ்தே சிதே சர்வ லோகாச் ரயயாய
நமோ த்வைத தத்வாய முக்திப் பிரதாய
நமோ பிரஹ்மணே வ்யாபினே சாச்வதாய"

எனச் சொல்லியபடி தோற்றக் கேடுகளற்று விளங்கு பவனே முதல்வனென்று வேதசிவாகமங்களாகிய அருநூல் கள் அறையாநிற்கும். இவ்வாறு வேதாகமாதி பிரமாணங் களினாலே பரம்பொருளெனக் கூறுவது திரிபுரமெரித்த பரம சிவன் ஒருவனுக்கே அல்லாமல் வேறொருவனுக்கில்லை எனச் சித்தாந்திகள் கூறுவர். அதற்கு முரணாக இப் பிரபந்தத்தி னகத்து முருகனையே பரப்பிரம்ம சுரூபமெனக் கூறிச் செல்லு வது முன்னோர் கொள்கைக்கு வேறுபட்டு நிற்பதாகத் தோன் றினும், புராண திலகமாகிய காந்தத்தில் திரிபுரமெரித்த பரம சிவமூர்த்தி பார்வதி தேவியாருக்கு உண்மைநிலை உபதேசிக் குங்கால் தானே குகனெனவும் குகனே தானெனவும் கூறிச் செல்லுவது ஈண்டு அறியற்பாலது. அன்றி சித்தாந்த உப நிடதமும் குகனே சிவன் என்னும் கூற்றை வலியுறுத்தா நிற்கும். எங்ஙனேயெனில், முதல்வனாகிய சிவபரஞ்சுடர் காரண காரிய நிமித்தங்களினாலே வேஷதாரியை யொப்ப சமையவாற்றால் பலப்பல வேஷம்பூண்டு நடித்தனனேனும், அப்பிரான் இயல்பான தன்மையானது திரிந்து மறைந்து விடுமோ? ஒருக்காலும் மறைந்துவிடாதென்பது ஆகமாதி களின் கொள்கையல்லவா? இதனால் அம் முழுமுதற்கடவுள் விகாரப்பட்டான் என்னும் குற்றம் எவ்வாற்றானும் பொருந்தா தென்க. பதிநூல்களில் இக்கூற்றைப் பரக்கக் காணலாம்.

"ஈச னேயவ னுடலான் மதலையா யினன்கா
ணூசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
றேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்"

என்று கூறிற்று கந்தபுராணமும். உற்று நோக்கின் சத்தியுடன் கூடிய சிவபரத்தின் அவயவாதிகளைக் கணக்கிட முப்பான் பத்தாறுற் போலவே, முருகப்பிரான் அவயவாதிகளும் கணக்கிட்டுநோக்கின்முப்பான்பத்தாதலும், அடியவர்களுக்குப் பேரருள் புரியவே முக்கண்மூர்த்தி திரிபுர மெரித்து திகழ்ந் தாற்போல சுப்பிரமணியக்கடவுளும் மாயையில் வல்ல அசுரர் களைக் கட்டழித்து அகமிகமகிழ்ந்து அமரர் போற்ற விளங்கி ஞன். பரமசிவத்திற்கு முச்சத்தியும் துணையிருந்து உதவியது போல முருகப்பிரானுக்கும் வள்ளியம்மையார் இச்சாசத்தியா யும் தெய்வயானை அம்மையார் கிரியாசத்தியாயும் வேற்படை ஞானசத்தியாயும் விளங்கும் ஒற்றுமை நயம் ஈண்டு காணற் பாலது.

பரம்பொருளாகிய சிவபரம்பொருள் யோக போக வேக மூர்த்தங்கள் கொண்டு அருவமும், உருவமும், அருவுருவ மும் திகழ முத்திறத் திருமேனியோடு பொலிந்து பஞ்ச கிர்த்தியத்தொழில் நடாத்தி வருவதுபோலவே இம்முருகப் பெருமானும் மேற்கூறியவண்ணம் யாவும் பெற்றிருப்பதால் அவன் இவனேயெனச் சொல்லத் தட்டில்லை.

இம் முருகப்பிரானது தோற்றத்தைப்பற்றிப் பலர் பல வகையாகக் கூறுவரேனும், அவைகளெல்லாம் உபசாரவாயி லாகச் சொல்லியதேயல்லாமல் வேறில்லை. இங்ஙனம் விளங்குங் குகப்பெருமானின் பிரபாவங்கள் மனம் வாக்குகட்கு எட்டா தன. அவைகளுள் ஒரு சிறிதே ஆன்மாக்கள் உய்யும்பொரு ட்டு வேத சிவாகம புராண இதிகாச முதலியவற்றில் கூறப்

பட்டன. பண்டைத் தமிழ் நூல்களின்கண் முருகனே முழு முதற்கடவுளாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. ஐந்திணைகளுள் முதற்றிணையாய்க் கூடலானே இன்பமுறுத்த வல்ல சிறப்புடைய குறிஞ்சிநிலத்திற்கு உரிய தெய்வம் சுப்பிரமணியக் கடவுளே என்பது. அதனாலன்றேசெந்தமிழ்ப்பரமாசாரியரும் ஆன்றோரும் பல்லாற்றானும் தமிழ்ப்பெருங்கடவுள் முருகப் பெருமானெனவேதெளிந்து ஒழுகிவழிப்பட்டுவருவாராயினர்.

இத்துணைச் சிறப்புடைமைபற்றித் தமிழ்நாட்டகத்தார் பெரும்பாலும் முருகப்பெருமானையே தொழலும், அவன்புகழையேபேசலும், அவன்சரிதமேகேட்டலும், நலமெனக்கருதி உய்ந்து வருவாராயினர். பாவத்திற்குக் கொள்கலமாகிய இக் கலியுகத்தே இம்மை மறுமை என்னும் இரண்டுவகை இன்பத்தையும் பெறவேண்டின், அங்ஙனம் வேண்டியார் வேண்டுவன எல்லாம் அளித்து உதவும் ஆற்றலுடையான் அக்குகப்பெருமானே யாதலால் அவனடி தொழுதலே எவ்வாற்றானும் இன்றியமையாததாம்.

இக் கந்தரந்தாதிக்கு ஏற்கனவே செந்தமிழ்ப் புலமையும் தெய்வபக்தியும் சேரப்பெற்ற பெரியாராகிய வில்லிபுத்தூரார் இயற்றிய உரை ஒன்று குன்றின்மேலிட்ட விளக்கெனவிருக்க, இந்நூற்கு யான் விருத்தியுரை எழுதத் துணிந்தது, "கானமயிலாடக் கண்டிருந்தவான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச்சிறகை விரித்தாடினாற் போலும்". இந் நூல் பக்திரஸம் ததும்பிய அந்தாதிகளில் ஒன்று. இதனை இயற்றியருளியவர் தெய்வ அருளும் செந்தமிழ் ஞானமும் சிறக்கப்பெற்று விளங்கிய மெய்ஞ்ஞானானுபூதிச் செல்வரான அருணகிரிநாதரே யாவர். இப்பெருந்தகையார் இந்நூலுள் சிற்சில விசித்திர பாக்களைப்பாடி அவைகள் இலக்கண இலக்கியப்

பயிற்சி இல்லாதவர்களுக்கும் பொருள் விளங்கத் தக்கவையாக வும், மற்றவை இலக்கணப் பயிற்சியுடையாரையும் கலக்கத் தக்கவையாயும் திருவாய்மலர்ந்திருக்கின்றனர். இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களை யும் ஒருங்கேகூறிச் செல்லுவதாம். அறத்தை அறிதல் அருமை. பொருளை அறிதல் அதனினும் அருமை. இன்பத்தை அறிதல் அதினினும் மிக அருமையினும் அருமை. இவை களையே சில நூல்கள் கூறுமே யல்லாது இவ்வந்தாதியைப் போல் வீட்டினை அறிதற்குத் துணைபுரிகின்ற செயல் வேறு தோத்திரப் பாக்களில் இல்லையென்பது திண்ணம். இதில் முருகன் திருவிளையாடல் ஒவ்வொன்றும் விளங்கக் கூறி, அப் பெருமான் திருவடித் துணையாலேயே நண்ணுப்பதம் நண்ண லாம் என்பதைத் தெற்றென உவமானவாயிலாகவும் உபமேய வாயிலாகவும் தலைவன் தலைவிக் கூற்றுகவும் விளக்கிப்போவது எவ்வவர்க்கும் இன்பத்தையும் நுண்ணிய ஆராய்ச்சியையும் கொடுக்க வல்லதாம். திருப்புகழ் பாடிய முத்தமிழ்ப்புலமை யும் வித்தகக் கவியும் வல்லவரான அருணகிரிநாதர் மிகவும் பெருமையோடு வாழ்ந்து வருங்கால் வில்லிபுத்தூராரென்னும் புலவர் அண்ணமலை யடைந்தனர். அவர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர். முடுகு, வண்ணம், சந்தவிருத் தம் முதலிய பாக்கள் பாடுவதில் மிக்க சமர்த்தர். அவர் பல விடங்களுக்குச் சென்று செந்தமிழ்ப் புலவர்களோடு வாது புரிந்து கடுவினுக்களை யெழுப்பி விடையிறுக்க இயலாதா ருடைய செவிகளைத் துறடுகொண்டு அறுத்தல் வழக்கம். அத் தகையார் அண்ணமலைக்கு வந்ததும் அங்குள்ள சிறந்த புல வர்கள் யாரென்று வினவினர். அப்பொழுது யாவரும் ஒரே படியாக அருணகிரிநாதரே அண்ணமலைக்கு உண்ணுவமுதாய் விளங்கும் உத்தமப் புலவர் என மொழிந்தனர்.

அதுகேட்ட வில்லிபுத்தூரார் மெய்ஞ்ஞானுபூதிச் செல்வ ராகிய அருணகிரிநாதரின் பாடல்களுக்குக் குற்றங்கூறத் தொடங்கி, அப்பெருந்தகையாரோடு வாதுசெய்யவும் விருப்ப முளதாக வெளியிட்டனர். அவரது செருக்கடைந்த வார்த்தை யைச் சிலபெரியார்கேட்டு மனம் துடிதுடித்து அருணகிரியாரை அணுகி, முருகப்பிரானின் அருள்பெற்ற புலவரேறே! நீர்தான் அவ்வில்லியின் செருக்கைப் போக்கவேணுமென்று வேண்டிக் கொள்ள, அவர் அவ்வாறே வில்லிபுத்தூராரைக்குறுகிநோக்கித் தமது பாடல்களுக்கு உரைகூற வல்லீரோ என்று கேட்க, அவர் அவ்வாறே ஒப்புக்கொள்ள, அருணகிரியார், இக்கந்த ரந்தாதியின் 54-வது செய்யுளாகிய,

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்தித்ததா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாதத்தது
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

என்னும் பாட்டை இயம்பினர். அதற்கு வில்லிபுத்தூரார் பொருள்கூற இயலாது மயங்கினர். உடனே அருணகிரியார் வில்லியின் ஒடுக்கங்கண்டு உள்ளமுவந்து, இனிப் புலவர்கள் மாட்டுத் துயர்கொடாதொழிவீர் என, அவரும் அவ்வாறே ஒத் துக்கொண்டு இரியல் சென்றனர் என ஒரு சாரார் கூறுவர்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த உரையொன்றிருக்க யான் இதற்கு விருத்தியுரை எழுதியதற்குக் காரணமென்னையோ வெனில், இந்நூலின் பேரழகும் மணிப்பிரவாள நடையும் இறைப்பொருளும் கண்டு பேராவல்கொண்டு இதற்கு ஒரு விரி வுரையிருப்பின் மக்கள் உணர்ச்சியை மேன்மேலும் உற்சாகப் படுத்தும் எனநினைத்து முதல் முப்பது பாடல்களுக்கு மாத்தி ரம் எனது எளியமதியில் விளங்கியவற்றைவிரித்து எழுதியுள்

ளேன். அங்ஙனம் எழுதுவதற்கு முருகன் அன்புவேண்டும். அவ்வன்பும் அப்பெருமானது மெய்ப்புகழ்களாகிய வைபவாதிகளைச் செவ்வனே அறிதலால் மேன்மேலும் அதிகரித்து நிலையுறும். ஆகலான் அளவிறந்து விளங்கும் முருகப்பிரானது புகழ்களையெல்லாம் உள்ளபடி எடுத்துரைத்தலும், உரைத்தவழி உணர்தலும் சிற்றறிவினோர்க்கு இயலாதென்பது யாவரும் உணர்ந்ததொன்றே.

அங்ஙனமிருக்க, அப்பெருமான் பொன்றுப்புகழ்களில் சிலவற்றையாயினும் வெளிப்படுத்தி அவனருள்பெற நினைத்துக்கொண்டிருந்த என் அவாவைப் பூர்த்திசெய்ய இவ்வந்தாதியை, சென்னை பூமகள்விலாசஅச்சுக்கூடத்தலைவரும் வேளாளகுலதிலகரும் பண்டைத் தமிழ்நூல்களை வருவாயினை நோக்காது குறைந்த விலைக்கு அச்சிட்டுத் தமிழுலகுக்குப் பரோபகாரம்செய்யும் சீலரும், உலகின்கண்ணுள்ள உண்மைச்சைவத்திருக்கூட்டத்தார் யாவரும் உவகைக்கடலில் திளைக்கும்படி சைவசித்தாந்த மார்க்கத்தை அபிவிர்த்திசெய்வதே கடமைகொண்டவருமாகிய ஸ்ரீமந். அ. முத்துவடிவேல் முதலியார் அவர்கள் இவ்வந்தாதியை என் மனோபீஷ்டப்பிரகாரம் அச்சிட்டு வெளிப்படுத்தியது மிகவும் பெருமையுடைத்தேயாகும். இதில் குற்றங்குறைகளிருப்பினும் அவைகளை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்

T. C பார்த்தசாரதி அய்யங்கார்.

கந்தரந்தாதி

இது, இரண்டு சொற்றொடரா லமைந்தது. விரியு மிடத்து கந்தரது அந்தாதி என விரியும்; கந்தப்பெருமான் விஷயமாக அந்தாதித் தொடையாற் பாடப்பட்ட பிரபந்தம் என்பது பொருள். இத்தொகைமொழித்தொடரில் ஆறும் வேற்றுமை யுருபின் பொருளாகிய சம்பந்தமே, விஷயமாக வுடைமையாம். இனி, கந்தனைப்பற்றிய அந்தாதியெனப் பொருள் உரைத்து, இத்தொடர் மொழியை இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொகையாகவுங் கொள் ளலாம். அவ்வாறு கொள்ளின், கந்தபிரானது திவ்யசரிதத் தைப்பற்றிக் கூறுவதாகிய ஒருநூல் என்பதே திரண்ட பொருள். கந்தன் - ஸ்கந்தன் என்னும் வடசொல்லின் திரிபு; பகைவர்களை வற்றச்செய்பவன் என்பது அவயவப்பொருள் என்று ஒருசாரார் கூறுநிற்பர். இதற்கு உதாரணமாகக் கந்தபுராணம் திருவிளையாட்டுப் படலத்திலே, "சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாச் செய்தா, யாயதனாலே கந்தனுமெனு நாமம் பெற்றான்" என்று சொல்லுகிற வண்ணம், சக்திசொரூபமான உமாதேவியினாலே சேர்க்கப்பட்டவ னென்றும் பொருள் கொள்ளல் தகும். இதற்கே பலவாறு பொருள் கூறுவர். கந்தன் - பரமசிவன்குமாரன்; அந்தாதி- அந்தத்தை ஆதியாகவுடையது; இது, வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அந்த + ஆதி = அந்தாதி; வடமொழி தீர்க்கசந்தி. அந்தாதியாவது- ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும், அல்லது, அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்த செய் யுளுக்கு முதலாக அமையும்படியாகப் பாடுவது. இவ்வாறு வருவதை இப்பிரபந்தத்தின் அகத்துள் காண்க.

உ

குகன் துணை

கந்தரந்தாதி

மூலமும்-விருத்தியுரையும்

காப்பு

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

பதப்பொருள்

வாரணத்தானை - அயிராவதத்தை யுடைய இந்திரனையும்
அயனை-பிரமாவையும்
விண்ணோரை-தேவர்களையும்
மலர்க்கரத்து—தாமரைமலர்போன்ற கையில்
வாரணத்தானை-சங்கையுடைய விஷ்ணுவையும்
மகத்து-(தக்கனது) வேள்வியில்
வென்றோன்-(வீரபத்திர முகூர்த்தங்கொண்டு) செயித்தவனாகிய பரமசிவனது
மைந்தனை-புதல்வனும்
துவச வாரணத்தானை - கோழிக் கொடியையுடைய குமாரக் கடவுளை
துணை நயந்தானை-தம்பியாகவிரும்பியவனும்
வயல் சூழ்-பழனஞ் சூழ்ந்த
அருணை-அருணாசலத்தில்
வாரணத்தானை-கயமுகாசுரனை
திறைகொண்ட-வெற்றிகொண்ட
யானையை - யானை முகனுமாகிய கணபதியை
வாழ்த்துவன் - (யான்) வணங்குகிறேன்.

(கருத்துரை) தக்கனது வேள்வியில் இந்திரன் பிரமா விஷ்ணு விண்ணோர் இவர்களை வீரபத்திர முகூர்த்தங்கொண்டு வென்ற பரமசிவன் மைந்தனும், குமாரக்கடவுளுக்குத் துணைவனும், கயமுகாசுரனை வென்றோனுமாகிய அருணகிரியில் வீற்றிருக்கும் யானைமுக விநாயகனை யான் வணங்குகின்றேன் என்பதாம்.

(விரித்துரை) யான்-தோன்றா எழுவாய், வாழ்த்துவன்-பயனிலை, ஏகாரம் - ஈற்றசை. காப்பு - காத்தல்; 'பு' விகுதிபெற்ற தொழிற்பெயர்; அது-இவண், பாதுகாக்கின்ற கடவுளின் விஷயமாகிய வணக்கத்திற்குத் தொழிலாகுபெயர். இவ்வாறு கூறினமையாலே, இந்நூலாசிரியராகிய அருணகிரிநாதர் தமக்குச் சம்பவிக்கத்தக்க இடையூறுகளைப் போக்கித் தமது எண்ணத்தை நிறைவேற்றவல்லதொருபொருளின் விஷயமாகச் செய்யுந் தோத்திரமென்பதே கருத்து.

இங்கே சொல்லிய காப்பு இவ்வாசிரிய சிகாமணிக்கு இஷ்டதேவதையும், இந்நூலுக்குத் தலைவனுமான சுப்பிரமணியக்கடவுளுக்குத் திருத்தமையனும், தன்னைப் போற்றுபவர்களுக்கு உண்டாகும் துன்பத்தையெல்லாம் துடைப்பவருமான விநாயகமூர்த்தியின் விஷயமானதினாலே, இதனை வழிபடுகடவுள் வணக்கமாகக் கொள்ளுவதுவுமல்லாமல், ஏற்புடைக்கடவுள் வணக்கமாகவுங் கொள்ளவும் இடமுண்டு. வழிபடுகடவுள்-தம்மாலே பூசிக்கப்படும் தெய்வம். ஏற்புடைக் கடவுள்-தாம் பாடப்புக்கதான நூலுக்குப் பொருந்திய தெய்வம்.

தேவர்கோன்முதல் திருமாலீறாகவுள்ள தேவர்களையெல்லாம் தக்கன் வேள்வியகத்தே வீரபத்திர வுருவங்கொண்டு வென்ற பரமசிவன் முதற்குமாரனும், தன்னடியார்க்கு அருள்பவனும், தன் அடியாரது புலமைத் திறத்துக்கு இடையூறு நேரிடாதபடி பரிபாலிப்பவனும், ஒருகால் இடையூறு நேர்ந்தாலும் அதனை உடனே ஒழிக்க வல்லவனுமாகிய கணபதியை யான் வழிபடுகடவுளாகக்கொண்டு

அன்போடு தியானிக்கின்றேனாகையால், அவன் யான் நினைத்த வண்ணமாய் வந்து எனது மனோபீஷ்டத்தைத் தலைக்கட்டிக் கொடுப்பான் என்றும், யான் இயற்றத் தொடங்கிய இவ்வந்தாதிக்கும் நற்பேறுகளுக்கும் இடையூறொன்றும் வரமாட்டாதென்றும் துணிந்து வாழ்த்தியவாறும்.

வாரணம் - பலபொருளொருசொல்; அது இங்கே வெள்ளை யானையையும், சங்கையும், கோழியையும், யானையையும் காட்டி நின்றது. தக்ஷனது யாகத்தை யழிக்கும்பொருட்டுச் சிவபிரான் சங்கற்பித்தமாத்திரத்தில் அப்பெருமானது நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணினின்று தோன்றினவனும், அக்கடவுளின் வடிவானவனும், ஆயிரந்தலைகளை யுடையவனுமான பெருங்கோபமுடைய தேவனையே இங்கு, 'மகத்து வென்றோன்' என்றார். துவசம்-கொடி; துவசவாரணம்-கோழிக்கொடி; இக்கொடி முருகப்பிரானுக்கு உரித்தென்பதைப் பரிபாடலில், "நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலோய் என்றுகூறி, பயந்தோளுக்கு இடிக்கண் விளைக்காத அப்புள்ளாகிய சேவலை எழுதிய மிக வோங்கிய கொடியெனப் பொருள் விரித்தமையுங் காண்க. துணை-தோள்; இரண்டு என்பதாம். அது, சகாயம் என்னும் பொருளில், தம்பியை உணர்த்தியதாம். விநாயகமூர்த்தியின் இளையோனாகிய முருகப்பிரான் என்பது. மைந்தனை-என்பதில், மைந்து - பகுதி. முன்னம் கஜமுகாசுரனென்னும் தீய அவுணனை விநாயகமூர்த்தி வென்றமையாலே, 'வாரணத்தானை திறைகொண்ட யானைய' என்றார். திறைகொண்ட விநாயகமூர்த்தியின் வன்மையினையும் போர்த்திறமையினையும் கண்டு அச்சமடைந்து அப்பெருமான் முன்னர் தானே வந்து திறையளந்து போந்தமை. 'அருணைவாரணத்தானை' என்றது, அக்கயமுகாசுரன் என்னும் அசுரன் திருவண்ணாமலையென்னுமிடத்தே யிருந்தவனென்றும் புகலுதற்கு இடமுண்டு. அன்றி, திருவண்ணாமலையில் கருணைகொண் டெழுந்

தருளியிருக்கும் யானைமுகக்கடவுளால் வெற்றிகொண்டவ னென்பது. அருணை-அருணாசலம்; அதாவது, தேயுலிங்கத்தானமான திருவண்ணாமலை; இம்மலை கிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதாயுகத்தில் சுவர்ணமலையாகவும், துவாபரயுகத்தில் தாமிரமலையாகவும், கலியுகத்தில் கன்மலையாகவுங் காணப்படுகின்றதெனவும் நூல்கள் சொல்லும். இது, தன்னை நினைத்தார்க்கு முத்தியளிக்குந் தலம்; (திருவாரூர் தன்னிற் பிறந்தார்க்கு முத்தியளிக்குந் தலம்; சிதம்பரம் தன்னைத் தரிசித்தார்க்கு முத்தியளிக்குந் தலமும், காசி தன்னில் மரித்தார்க்கு முத்தியளிக்குந் தலமுமாம்.) இத்தலத்தின் ஒப்புயர்வற்ற நீர்வள நிலவளத்தின் மகிமையினை நன்குவிளக்க. 'வயன் அருணை' என்றனர். 'அருணை யானையை வாழ்த்துவேன்' என்றது என்னையோவெனில், "துவக்கற வறிந்து பிறக்கு மாறுருந் துயர்ந்திடா தடைந்துகாண் மன்று, முவப்புடன் நிலைத்து மரிக்குமோர்பதியு மொக்குமோ நினைக்கும் நின்னகரைப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படர்பவர் திகைப்பற நோக்கித், தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநாயகனே" என்று **சிவப்பிரகாச சுவாமிகள்** கூறிய சிறப்புடைமையாலே இவரும் இங்ஙனம் கூறினர்போலும். யாவற்றுக்குங் காரணமாக விருப்பது வயலே யாகையால், அஃதொன்றனையே அருணைக்கு அடைமொழியாக வெடுத்துச்சொல்லி மற்றையவெல்லாம் விளங்க வைத்தனர்போலும். மகம் + அத்து = மகத்து; அத்து-சாரியை, மகம்-யாகம். இங்கு தக்ஷனது யாகத்தை யுணர்த்தியது.

மகத்துவேன்றன் என்கிற கதை:—தம் திருமகளாய்த் திருவவதரித்த உமாதேவியைப் பரமசிவனுக்குத் திருமணஞ்செய்து கொடுத்த பிரம புத்திரனாகிய தக்ஷனென்னும் முனிவன் பின்னர் ஒருகால் அவ்வுமாபதியின்மேல் மாமனாகிய தனக்குத் தக்க மரியாதை செய்திலன் என்னுங் காரணத்தாற் சினங்கொண்டு அப்பார்வதீ

பரமேசுவரர்களை அழையாது அவிர்ப்பாகமுங் கொடாமல் அவமதித்து மற்றைத் தேவர் முனிவராதியோருடனே பெரியதொரு யாகத்தைச் செய்யாநிற்கையில், தாக்ஷாயணி தாய் தந்தையரையுந் தங்கை தமக்கை முதலிய சுற்றத்தாரையும் ஒருங்குகண்டு கூடிக் குலாவலாமென்னுங் கொள்கையால், தான் மாத்திரம் அவ்வேள்விக்குச் சென்று அம்முனிவன் அங்குத் தன்னை அலக்ஷியஞ்செய்து தன் பதியையும் பழித்ததினால் அக்கினிப் பிரவேசஞ் செய்து மறைய, அது கேட்டுச் சுடுசினங்கொண்ட உருத்திரமூர்த்தி தமது நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரனென்ற ஒரு குமாரனை உண்டாக்கித் தக்கன் வேள்வியை அழித்து வரும்படிக் கட்டளையிட, அக்கடவுள் அங்ஙனமே அழித்துவந்தா னென்பதே கதையாம். (1)

இதுவுமது

உண்ணு முலையுமை மைந்தா சரணம் பாருயிர்சேர்
உண்ணு முலையுமை மைந்தா சரண மருணை வெற்பாள்
உண்ணு முலையுமை மைந்தா சரணந் தனமு மொப்பில்
உண்ணு முலையுமை மைந்தா சரணஞ் சரணுனக்கே.

பதப்பொருள்

உண்-(கன்றுகள்) உண்ணும்
ஆ-பசுக்களையுடைய
முலை-முல்லை நிலத்திற்கு
உ-இறைவனாகிய விஷ்ணுவினது
மை-மேகநிறத்தையும
மைந்து-வலிமையையும்
ஆசு - (உவர்ப்பாகிய) குற்றத்தையுமுடையதாய்
அரண்-காவலாயிருக்கிற
அம்பார்-சமுத்திரத்திலிருந்த அசுரரது
உயிர்சேர்-ஆவியை மாய்த்து
உள்-தேவர்கள் மனத்திருந்த
நாம்-அச்சத்தை
உலையும்-கெடுத்தருளும்
ஐ-சுவாமியே!
மை-ஆட்டுவாகனத்தை
தா-ஏறும்

சர் - (உஷ்ணத்தையுடைய) அக்கினி
அண்-சேர்ந்திருக்கும் [கிய
நம்-நாமடைக்கலம் புகுதற்கிடமா
அருணை வெற்பாள்-அருணகிரியில் வாழும் அம்மையாகிய
உண்-மிகுதியாகிய
ஆம்-பெருகும்
முலையும்-கற்புடைமைக்கும்
ஐ-அழகிய
மை-அஞ்சனந்தீட்டிய
தா-குழையை யெட்டுகின்ற
சர-அம்புபோன்ற கண்ணினது
நந்தனமும்-கிருபைக்கும்
ஒப்பில்-இணையில்லாத
உண்ணாமுலையுமை - உண்ணாமுலை யென்னும் பெயரை யுடைய பார்வதியினது
மைந்தா-புதல்வனே!
சரணஞ் சரணுனக்கு-உன்னிடத்தே யான் சரணம் புகுந்தேன், சரணம் புகுந்தேன்.

(க-ரை) திருமால் நிறம்போற் கறுத்து உவர்ப்பை யுடையதாயும் வலிய அரணுமிருக்கிற சமுத்திரத்திருந்த அசுரரைத் தேவர் அச்சந் தீரும்படி வதைத்தவனே! அக்கினி சொரூபமாகிய அருணகிரியில் அமர்ந்தருளிக் கற்பிலுங் கடாக்ஷத்திலுந் தனக்கொப்பில்லாத உண்ணாமுலையம்மை புதல்வனே! யான் உன்னடைக்கலம் புகுந்தேன் என்பதாம்.

(வி-ரை) யான்-தோன்றா எழுவாய், சரணம் சரணம்-பயனிலை, ஏ-அசை. விநாயகமூர்த்தியைச் சரணமடைந்தார்க்கு அவனருளால் இம்மைக்கண் உண்டாகும் இடையூறுகளும் நீங்கி, மறுமைக்கண் முத்தியுங் கைக்கூடுகிற சக்தியை நோக்கி இவ்வாசிரியர் இதில் சரணாகதியை வெளியிட்டார். "மாயோன் மேய காடுஉறை யுலகமும்" என்று சொல்லிய **தொல்காப்பிய** சூத்திரத்திற்கு, உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் கூறிய, 'கடல்வண்ணன் காதலித்த காடுறை யுலகமும்' என்று பொருள்விளக்கிப், பின்பு, முல்லைநிலத்துக் கோவலர், 'பல்லாபயன் தருதற்கு மாயோன் ஆகுதி பயக்கும் ஆபலகாக்கவெனக் குரவைதழீஇ மடைபல கொடுத்தலின் ஆண்டு அவன் வெளிப்படும்' என்றதையுட்கொண்டே இவரும்

திருமாலை முல்லைநிலத்துக் கடவுளாகச் சொல்லுவான் வேண்டி, 'உண்ணுமலைஉ' என்றார். முல்லை என்பதன் இடைக்குறைவு, முலை என்றது. முல்லை-காடுங்காடு சார்ந்தவிடம். அந்நிலமே ஆடு மாடுகள் மேய்ந்து உலவுதற்கு ஏற்றவிடமாகையாலே, 'உண்ணுமுலை' என்றார். நாற்புறமும் நீராணுலே சூழப்பட்டவிடத்திலே சிறிதும் அச்சமின்றி மதோன்மத்தர்களாய்த் திரியும் வன்மையுடைய அசுரர்களென்பார், 'மைந்தா சரணம் பார்' என்றார். அம்பு - தண்ணீர். அம்பார்-அத் தண்ணீரிடையிலுள்ளவர். குற்றமாகிய உவர்ப்புத் தன்மைபூண்ட தண்ணீரை யுடைத்தான கடலுக்கு உற்றதையும், அஃது மகா தீயர்களாகிய அசுரர்களுக்குத் துணையாகவிருக்கும் இரண்டினையும் எடுத்துப் புகலவே, 'ஆசு அரண் அம்பு' என்றார். நல்லவர்களுக்கு நன்மையை நாடியுந் தேடியும் செய்யும் வன்மையுடையவன் என்பதை, 'அம்பரர் உயிர்சேர் உண்ணு முலையுமை' என்றார். ஐ-அழகு, ஐயனே எனவும் பொருள். "பேநா முருமெனு வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள" என்னுந் **தொல்காப் பியச்** சொல்லதிகாரம் உரியியல், 359-வது சூத்திரத்தின் விதிப் படியே இங்கு, 'நாம்' என்னும் சொல்லுக்கு, 'அச்சம்' என்று பொருள்கொண்டனர். இச்சூத்திரத்திற்கு **இளம்பூரணர்**, "நாம் வருந் துறைசேர்ந்து" என்று மேற்கோள் காட்டிப் போந்தமையு மறிக. திருவண்ணுமலையானது அக்கினிமலையாகையாலே, 'மைந்தா சரண மருணை' என்றார். அக்கினிதேவதையின் வாகனம் ஆடு ஆகையால், 'மைந்தாசர்' என்றது. அண்மை யென்னும் பண்புச் சொல்லின் மைவிகுதி செட்டு, அண் என்று நின்றதாயினும், அது விகுதியுடனே சேர்ந்த பண்பேயாம். 'நம' என்னும் தன்மைப் பன்மைச்சொல், தன்னோடு சம்பந்தப்பட்டாரையுங் குறித்ததாம். தா-தாவுதல். அருணை வெற்பாள்-அருணைமலையின்கண்ணே எழுந் தருளியிருக்கும் உமாதேவி. பார்வதிதேவியின் அறக்கற்பையும்

அருண்மடை திறந்து பாயும் அழகிய திருநேத்திரத்தையும் புகழ வந்தவர், 'உண்ணுமுலையுமை மைந்தாசரணந் தனமுமொப்பில் உண்ணுமுலை' என்றார். தா-தாவுதல். மை-கருமை, மேகம், அஞ்சனம். சாபம்-அம்பு; அது, சாவென்று நின்றது. "சாவ்வென் மொழியீற்று மெய்சாதலும்விதி" (நன்-சூ-உயிரீற்றுப் புணரியல்-169) நந்தனம் - நம் முடைய பரமகிருபை. மைந்தா-விளி; மைந்து-பகுதி; வலிமை, அழகு என்பதுவுமாம். முலை உமை - இரண்டாம் வேற்றுமைத் தொகை. உமை என்னுந் திருநாமம் பார்வதியாருக்கு உண்டா யதன் காரணம் என்னையெனில்? பார்வதிதேவி ஐந்து பிராயமான வுடனே பரமசிவனை மணஞ்செய்தற்குத் தவஞ்செய்ய விரும்பியவ ளாய்த் தன்கருத்தைப் பெற்றோர்க்குத் தெரிவிக்க; அவர்களால், "அன்னைகே ளெம்மினீங்கி யருந்தவ மாற்றற்கொத்த, தின்ன தோர் பருவமன்று வியாண்டுமோ ரைந்தேசென்ற, நின்னுடல் பொருதா லீண்டிந் நிலைமையைத் தவிர்தி" என்று கூறி முதலில் மறுக்கப்பட்டதினால், அவளுக்கு உமையென்று ஒரு திருநாமம் உண்டாயிற்று; உ, மா என்பதற்கு - அம்ம, வேண்டாம் என்று பொருள். (2)

நூல்

திருவாவி னன்குடி பங்காள ரெண்முதுச் சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே.

பதப்பொருள்

திரு-மகாலக்ஷ்மிக்கு
ஆவி-உயிராகிய (திருமாலும்)
நன்குடி-நற்றேவியை
பங்காளர் - பாகத்திலுடைய பரமசிவனும்
எண்-மதிக்கத்தக்க
முது-பழமையாகிய
சீர்-சிறப்புப்பொருந்திய
உரை - (வேதாகமப் பொருளைச்) சொல்லிய
சதிர்-சதுர்ப்பாட்டையுடைய
உவாவினன்-இளையோனாகிய(கந்தசுவாமிக்கு)
குடி-உறைவிடமாகிய
வான்-ஆகாசத்தை
ஆர்-அளாவிய
பரங்குன்று - திருப்பரங்குன்றையும்
சீரலைவாய்-திருச்செந்திற் பதியையும்
திரு-செல்வநிறைந்த
ஆவினன்குடி-பழனியையும்
ஏரகம்-சுவாமிமலையையும்
குன்றுதோறாடல் - (அக்கடவுள்) திருவிளையாட்டியற்றும் பல குன்றங்களையும்
சென்று-நடந்து
அதிர்-முழங்கும்
உவா-யானைகளின்
இனன்-கூட்டங்கள்
குடிகொண்ட - நீங்காதுறைகின்றதும்
தண் கார்-குளிர்ந்தமேகந் தவழ்வதுமாகிய
வரை-பழமுதிர்சோலையையும்
செப்புமின்-துதிசெய்யுங்கள்.

(க-ரை) (பார்வதி சமேதரான பரமசிவனும்), லக்ஷ்மி சமேதரான திருமாலும், புகழ்கின்ற கீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக் கடவுளுக்கு உறைவிடமாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலைமலை ஆகிய இவ்வாறு தலங்களையுந் துதியுங்கள் என்பதாம்.

(வி-ரை) நீவிர் - தோன்று எழுவாய், செப்புமின் - பயனிலை, ஏ-அசை. இதில் சுப்பிரமணியக் கடவுளின் எல்லையற்று உயர்ந்த பெருமையும் பரத்வமும், அவன் திருவிளையாடல் புரிந்து பக்தர்களுக்கு அருள்புரிவதற்கென்றே எழுந்தருளியிருக்கும் ஆறு படைவீடுகளையும் போற்றவந்தவர் முன்னோர் கூறியுள்ள முறையையே பின்பற்றி நிறுத்திப் புகழ்ந்தார். முருகப்பிரானின் அதீதமான புகழைச் சொல்லவந்த ஆசிரியர் தாம் அவர்மீது கொண்டிருக்கும் பக்தியை மிகுத்துக்கூறவே தனது வழிபடுங்கடவுளினும் மேம் படுத்தி, 'நன்குடிபங்காளர் எண்முதுச்சீர் உரைசதிர் உவாவினன்' என்றார். இதனால் இவ்வாசிரியர் முழுவதும் முருகப்பிரானே என்னும் நிச்சயவறிவுடையவர் என்பதே தெற்றெனப் புலப்படுகின்றது. "நாரணன் முதலினோர் நாடிக்காணொணு, வாரணமுதல்வனு முமையுமன்னவர், சீரருளடைந்தனர் சிலருமல்லதை, யாருன தாடலை யறியுநீரினர்" என்று கந்தபுராணம் திருவிளையாட்டுப் படலத்திற் சொன்னதிற் கிணங்கவே இங்கும் முருகப்பிரானை, 'திரு ஆவி' என்றார். திருவாவினன்குடி எனப் பதப்பிரிவு செய்யாமல் கொண்டு பொருள்கொண்டால், முன்னம் ஆவி என்னும் குறுநிலமன்னன் பெயர்ப் பெருவழக்கு நன்குதேறப்படும். இனி ஆய் என்னும் வள்ளலிருந்த ஊர் 'ஆய் குடி' என வழங்கப்பட்டவாறுபோல, என்றும் வற்றாத வாவியிருந்த நல்லூர் ஆவிநன்குடி என வழங்கப்பட்டதாகும். இது இப்போது முருகக்கடவுள் திருப்பதிகளுள் ஒன்றாய் இக்காலத்தே ஆவினன்குடி எனவும், பழனிமலை எனவும் வழங்கப்படுவதே. "சிவன் சத்தியோடுறின் செகம் விரிந்திடும், சிவன் சத்தி நீங்கிடிற் செகம தில்லையே" என்றபடி சிவபிரான் தன்னுடைய பராசக்தியான உமையாளுடைய உதவியைக் கொண்டே யாவற்றையுஞ் செய்து வருகின்றமையால், 'நன்குடி பங்காளர்' என்றார். இல்லறதருமத்தில் இல்லாளும் ஒரு பங்கிருந்தே

அவ்வறத்தைப் பழுதுறுவண்ணம் நடத்தும் நியமமுடைமையாலே, 'நன்குடியிங்கு' என்றார். 'நன்குடி பங்காளர்' என்றதற்கே, பிருங்கி யென்னும் மகாமுனிவர் பரமசிவனைமாத்திரம் பிரதக்ஷணஞ் செய்யக்கண்ட பார்வதிதேவி, தன் பதியை நோக்கி, "முனிவர் என்னைப் பிரதக்ஷணஞ் செய்யாமைக்கு ஏது என்ன? என்று வினவ, உருத்திரமூர்த்தி, 'இஷ்ட சித்திபெற விரும்புவர் உன்னையும், மோக்ஷம் பெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி, பெருமானினின்று பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகத்தைப் பெற்றார் என்பதையுஞ் சொல்லாநிற்பர். "முகத்திலொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருகன்" என்று **கந்தபுராணத்துள்** சொன்னமைபோலவே, முருகப்பிரான் பிரணவ மந்திரமாகிய ஓரெழுத்தும், சிவபிரானது பஞ்சாக்ஷர மந்திரத்துள்ள ஐந்தெழுத்துக்களுங்கூடி முருகக்கடவுள் ஆறுமுகங்களுடன் பொலிபவனாகையாலே, 'முதுசீர் உரைசதிர் உவாவினன்' என்றதுவுமாம். "வான் ஆர் குன்று' என்பதால், அத்திருப்பரங் குன்றினது காம்பீரியம் விளங்கிற்று. பரங்குன்று என்பதனால், மேலான குன்று எனவும், பரத்தைத் தாங்கியிருப்பதினாலே மேன்மையடைந்த குன்று எனவுமாம். 'குடி' என்பது இங்கு மத்திமதீபம்போல் நின்று, ஆறு படைவீடுகளுடனும் பொருந்திப் பொருள்தருதலை அறிக. "சேயோன் மேயமை வரையுலகமும்" என்ற **தொல்காப்பியத்தால்**, மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்துக்கு முருகக்கடவுள் தெய்வமென்பது பெறப்படுதலால், 'குன்றுதோறாடல்' என்றதாம். ஏரகம்-சுவாமிமலை. ஏர்-அழகு. பழமுதிர் சோலையானது துகில் போல நுடங்கும் அருவியை யுடையதாய் இருப்பதினாலே, ஆண்டு மரங்கள் அடர்ந்து புகைந்து இருள்தூங்கி யானைகள் அங்குமிங்கும் உலவிக் களித்துக்கொண் டிருப்பதற்கும், மேகமண்டலத்தோடு பொருந்தி அதியுன்னதமாக விருப்பதினாலும், 'உவாவினன்குடி

கொண்ட தண்கார்வரை' என்றார். கார் - கருக்கொண்ட மேகம்; கார்காலத்து மேகமுமாம்; கார் - கருமையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர். வரை - இருமடியாகுபெயர். செப்புமின் - முன்னிலை ஏவற்பன்மை. செப்பு-திசைச்சொல். இது, தான்பெற்ற பேற்றைப் பிறரும் பெறும்படியாக இதோபதேசம் செய்தலுமாகும். (1)

செப்புங் கவசங் கரபா லகதெய்வ வாவியம்பு
செப்புங் கவசங் கரிமரு காவெனச் சின்னமுன்னே
செப்புங் கவசம் பெறுவார்க ணுந்தெய்வ யானைதனச்
செப்புங் கவசம் புனைபுயன் பாதமென் சென்னியதே.

பதப்பொருள்

செ-ரிஷபத்தையுடைய
புங்கவ-தேவாகிய
சங்கரபாலக-சங்கரன் பாலனே!
தெய்வ-தெய்வீகமாகிய
வாவி-சரவணப்பொய்கையின்
அம்பு-ஜலத்தில்
செ-உற்பவித்த
புங்கவ-உயர்ந்தோனே!
சங்கு-சங்கையுடைய
அரி-விஷ்ணுவுக்கு
மருகா-மருகனே!
என-என்று
சின்னம்-திருச்சின்னமானது
முன்னே-முதலில்தானே
செப்பு-சொல்லி யார்க்கின்ற
உங்கு-உவ்விடத்திலேயே(கேட்டு)
அவசம்பெறுவார்-மயக்கம் அடையும் (பவனி) மாதராது
கணும்-விழிப்பார்வையையும்
தெய்வயானை-தெய்வயானையினது
தனச்செப்பும் - கொங்கையாகிய கலசத்தையும்
கவசம் புனை-சட்டையாக வணிந்த
புயன் - தோளை யுடையவனாகிய முருகக் கடவுளின்
பாதம்-திருவடி
என் சென்னியது-என்றலைமீதுற்றது.

(க-ரை) பரமசிவன் மைந்தனே! சரவணோற்பவனே! திருமால் மருகனே! என்று சின்னம் ஆர்ப்பதைக் கேட்டு மயங்கும் பெண்களின் பார்வையையுந் தெய்வயானையின் கொங்கையையுங் கவச

மாகத் தரித்த குமாரக்கடவுள் திருவடி என்றலேயின் கண்ணது என்பதாம்.

(வி-ரை) பாதம்-எழுவாய், சென்னியது-பயனிலே, ஏ-அசை. "அரன் தன்னிகர் திருமகன் சரவணத்திடை, மன்னுபு குழவியாய் வளரநல்கினன்" என்பதனல், முருகப்பிரானை இங்கு, 'சங்கரபாலக' என விளித்தார். "பத்மஷண்டே பத்மநிபம் பத்ம காந்தார ஸௌரபம்" என வடமொழி ஸ்காந்தபுராணத்துள் கூறியது போலவும், "ஆரணன் விண்ணக மச்சுதன் புவி, வாரணன் முதலிய மாதிரத் துளோர், ரோண வமரர்க ளெண்டிக் காகியே, சீரணி சரவணஞ் சேர்ந்து போற்றினர்" என்று கந்தபுராண நூலாரும் அச்சரவணப் பொய்கையினைப் போற்றி யுரைத்ததை யொப்பவே இங்கும், 'தெய்வ வாவியம்பு செப்புங்கவ' என்றார். ஒரு தனி முதலாகிய முருகனைத் தன்னிடத்தே வைத்துக் கொடுத்தமையால், 'தெய்வவாவி' என்றார். வாபி என்னும் வடமொழி தமிழில், 'வாவி' எனத் திரிந்தது. சரவணம்-சரம் வநம் என்று பிரியும்; நாணற் காடென்று பொருள்; இது-நாணல் தொகுதியாற் சூழப்பட்டதும் கங்காநதியி லுள்ளதுமான ஒரு பெரிய மடு. புங்கவன்-மேலானவன். நீர்தான் யாவற்றையும் உண்டாக்கும் வன்மை யுடைத்து ஆணவர் என்பதும், அது பஞ்சபூதங்களில் ஒன்ருகியும், பிறவற்றுடன் கலந்து முள்ளமை தோன்றவே, 'அம்பு செப்புங்கவ' என்றார். அன்றி யோனிலயம் மந்தமற்ற வவதார விசேஷமுடைமையால், 'புங்கவ' என விளித்த மையுமாம். மருக-மருமகனே; மருமகன்-உடன்பிறந்தவள் மகன்; உமாதேவியினது ஒரு ரூபபேதமான துர்க்கை திருமாலுக்குக் கிருஷ்ணுவதாரத்தில் தங்கையாய்த் தோன்றி 'மாலுக்கிளையாள்', எனப் பெயர் பெறுதலால், சிவகுமாரன், 'மால்மருகன்' எனப்பட்டான். இனி, திருமாலின் புதல்வியரான சுந்தரி அமுதவல்லி என்றவர்கள், வள்ளி, தெய்வயானையென்று பெயர்கொண்டு வளர்கையில், முருகக்

கடவுள் திருமணஞ் செய்தல்பற்றி, அக்குமரனை, 'சங்கரிமருகா' என்றார். இதற்கே, பார்வதிதேவியாரை எப்போதும் விட்டுப் பிரியாமலிருந்து மகிழ்விப்பவனே எனவும் பொருள்விளக்கல் பொருந்தும். சின்னம்-கொடி, குடை, சாமரம், பேரிகை முதலியனவும், கட்டியங் கூறுவதுவுமாம்; இராஜசின்னம் என்பதுபோல. அரசர்கள் வெளிப்பாட்டின் கண்ணும், தெய்வ வெளிப்பாட்டின் கண்ணும், அவ்வவற்றிற்குரிய சின்னங்கள் முன்னே சென்று வருகையினை முன் அறிவிக்கும். அவ்வாறே முருகப்பிரானது பவனியிலும் பற்பல சின்னங்களும் அவனது பெருமையை முழங்கிவரும்போது அதைக் கேட்ட பெண்கள் அவனது பெருமையினையும் பேரழகினையும் தெய்வத்தன்மையையும் கண்டு மனம் விண்டு மயக்கமடைந்து இவனருள் எம்போலியர்கள் அடையமுடியுமோ என்று தியங்குகின்றன ரென்பதை, 'சின்ன முன்னே செப்புங் கவசம் பெறுவார்கணும்' என்றார். அன்றி, அப்பெருமான் வெளிப்பாட்டின் சின்னம் கேட்டவுடனே தத்தம் தனங்களை யெல்லாம் இறுகப்பிணித்தும். கண்களும் ஒரே வழியாகக் காணும்படி செய்து நிற்பார்கள் எனவும் பொருள் கூறுவர் ஒரு சாரார். முருகக்கடவுள் தெய்வயானையினது கொங்கையாகிய கலசத்தைச் சட்டையாக அடைந்த தோளையுடையவன் என்றது என்னையோவெனின்? அஃது, காடாலிங்கனப் புணர்ச்சியினிடத்தேகாணும் வைபவக் காட்சியினைச் சுட்டுவதாம். 'என் சென்னியது' என்றது, என்னை அவன் ஆட்கொண்டு பரிபாலித்தான் என்பதாம். அன்றி, தலைபெற்றதின் பயனை யான் பெற்றேனென்று புகழ்ந்தபடியுமாம். கடவுண்மாட்டு பக்தியுடைய அடியவர்களுக்கெல்லாம் அவனது திருவடியே எல்லாப் பேற்றையும் அளிக்க வல்லதாகையால், 'பாதம் என் சென்னியது' என்றார். இதுபற்றியன்றோ நமது **பெருநாப்புலவர்** பெருமானும், 'மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார்-நிலமிசை நீடுவாழ்வார்" என்றனர். (2)

சென்னிய மோகந் தவிரா முதோகண் டிகிரிவெண்ணெய்ச்
சென்னிய மோகம் படவூ தெனத்தொனி செய்தபஞ்ச
சென்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சென்னிய மோகம் பணிபணி யேரகத் தேமொழிக்கே.

பதப்பொருள்

சென்னி-சிரசின்கண்ணே
அம்-(கங்கா) சலத்தின்
ஓகம்-ஆரவாரம்
தவிரா-நீங்காத (பரமசிவன்)
அமுதோ-உண்ட நஞ்சுதானோ
கண்-விழியானது
திகிரி-சக்கரத்தை யேந்தி
வெண்ணெய்-நவநீதமுண்ட
சென்னிய-கீத மிசைக்கின்ற திருமாலே
மோகம் பட-(தேவரும்) மயல்கொள்ளும்படி
ஊது என-ஊதென்று சொல்ல
தொனி செய்த-முழக்கின
பஞ்சசென்னியமோ-பாஞ்ச சன்னியமென்னுஞ் சங்கந்தானோ
கந்தரம்-கழுத்தானது
புனத்தேன் - (தினைப்புனத்தின் கண்) மதுரபாஷணியாகிய வள்ளிநாயகியை
புணர்-தழுவும்
தேவை-குமாரக்கடவுளை
தெய்வச்சென்னி - தெய்வத் தன்மையயுடைய சோழராஜன்
அமோகம்-அதிக ஆசையுற்று
பணி-வணங்கிய
பணி-கட்டுவித்த
ஏரக-சுவாமிமலைச்சார்பில் வாழும்
தேமொழிக்கு-இனிய மொழியையுடைய பெண்ணுக்கு.

(க-ரை) தெய்வச் சோழனானவன் கந்தக்கடவுளை வழிபட்ட சுவாமிமலையினில் வாழும் பெண்ணினுடைய கண் பரமசிவனுண்ட நஞ்சோ! அவள் கழுத்து திருமால் முழக்கின சங்கமோ.

(வி-ரை) கண்-கந்தரம்-இரண்டும் எழுவாய், அமுது-பஞ்சசன்னியம்-இரண்டும் பயனிலை, ஏ-அசை. இதில் ஏரகத்தின் ஏற்றஞ் சொல்லப்பட்டுள்ளது. ஏரகம் என்னுந் திருப்பதியானது ஓதல் முதலிய ஆறுவகைச் செயல்களையும், சிறந்த குடிப்பிறப்பையும்

நாற்பத்தெட்டுப் பிராயம் வரையிற் பிரமசரிய விரதங்காத்த கொள்கையையும், முத்தீச் செல்வத்தையுமுடைய அந்தணர்கள் நீராடி ஈரமாகிய உடையினைப் புலர உடுத்து மலரேந்திக் கந்தனை வழிபடும் தன்மையினை யுடையதென்பார், 'அமோகம் பணிபணி ஏரகம்' என்றார். பரமசிவமூர்த்தியானவர் கங்காநதியினைத் தனது சடாமகுடத்தின்மேற் றாங்கிப் பகீரதன் என்னும் அரசனை அகங்குளிர்வித்து அனைத்துலகையும் பாதுகாத்தமையால், 'சென்னி மோகம் தவிரா' என்றார். பெண்களின்கண் காமிகளுக்குத் துன்பத்தையும், மற்றவர்களுக்கு இன்பத்தினையுங் கொடுத்தல்பற்றி, 'அமுதோ' எனப் பொதுவாக்கிச் சொல்லினர். சுவாமிமலையின்கண் வாழும் பெண் என்றமையால், மலைநாட்டின்கண் வாழும் குறவர் மடமகள் என்றுபொருள். இதனால், வள்ளிநாயகியின் திருநேத்திரமானது, அடுத்தாரைக்காக்கும் அமுதமோ வென்றதாம். கண்ணைக் கடல் நஞ்சுடன் ஒப்பிட்டுச் சொன்னது எங்ஙனம் பொருந்துமெனின், இவ்வள்ளிநாயகியின் கண்கள் பரந்து தனக்கு இன்பத்தைச் செய்யுந் தகைமைத்து என்பது கருதியேயாம். அன்றி, அக்கடல் விடம் தன்னுடன் தோன்றிய அமுதத்தால் அனைவரையுங் காத்தமை. கடாக்ஷத்தின் வீக்ஷண்யம் கருதி, இங்ஙனம் வியந்து கூறியதுவுமாம். நவநீதம்-வெண்ணெய். கந்தரம்-கழுத்து. கம்-தலை; தாம்-தரித்தல். சங்கத்தைப் பெண்களின் கழுத்துக்கு உவமையாக்குவது உருவக வுவமை. இங்கு, வள்ளிநாயகியின் இனிய மெல்லிய கண்டத்வனியையும் உடன் புகழ்தற்காகவே, 'மோகம் ஊதென' என்றார். கண்ணபிரான் தமது செம்பவளத் திருவாயிடையிலே வேய்ங்குழலை வைத்து ஊதின் தேவர்களும் மயங்குந் தன்மைத்து, அதனையும் மேம்படச் செய்யும் வள்ளிநாயகியின் கண்டத்வனி என்பதே தேர்ந்த கருத்து. புனத்தேன் - புனத்தைக் காவல் புரிந்துவந்த தேன்; இங்கு, தேன் என்பது உவமையாகுபெயராய்த் தேன்

போலும் இனிமையான பேச்சையுடைய வள்ளி. தேவை-தெய்வத் தன்மையுடைய முருகப்பிரான். தே - தெய்வம். தே - ஒருமொழி. சென்னி என்னும் சொல் பொதுவாகச் சோழவரசர்களை யுணர்த்துவ தாயினும், இங்கு, முருகப்பிரான் திருவடியின்கண்ணே மிகவும் பக்திபூண்டு அத்திருப்பதியினைக் கட்டுவித்தவன் என்னும் பொருள் பட, 'தெய்வச்சென்னி அமோகம்பணி' என்றார். இங்கே சொல்லிய சென்னியை ஆராய்ச்சியாளர்வாய் கேட்டுணர்க; விரிப்பின் பெருகும். தேன்+மொழி=தேமொழி; "தேன்மொழி மென்மை மேவினிறுதி யழிவுமா மிருவழி" என்றமையால் இயல்பாதலே யன்றிக் கெடுதலுமாம் என்னும் நன்னூல் விதிபற்றிப் போந்ததாம். ()

தேமொழி யத்தம் பெறவோங் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினு லுலகுமங் தித்ததொன்றே.

பதப்பொருள்

தேமொழி - இனிய மொழியை யுடையவளாகிய பார்வதியின்	தேம்-இடமாகிய சமுத்திரத்தில்
அத்தம்-பாதியாகிய (பரமசிவன்)	மொழி-கணுக்களையுடைய
பெற-உபதேசம் பெற்றுக்கொள்ள	அத்தம்-கரங்களும்
ஓம் தனக்கு-பிரணவத்திற்கு	புயம்-தோள்களும்
அன்று-பூர்வத்தில்	அவர்-அவர்களுடைய
சேணுலக-தேவலோகத்தின்	சூடிகை-கிரீடங்களும்
தேம்-நன்மை யெல்லாம்	சிந்த-சிதற
ஒழிய-அற்றுப்போகும்படி	வென்ற-சங்கரித்துச் செயித்த
தம்-தங்கள்	தே-குமாரக்கடவுளானவர்
சினம்-கோபத்தை	மொழி-உரைத்தருளிய
காட்டு-காட்டிய	அத்தம்-பொருள்
அவுணரை-அசுரரை	பதினுலுலகும் - ஈரேழுலோகத்திலும்
	அந்தித்தது-பொருந்திநின்றது
சேமகர-ஆண் சுறாமீனுக்கு	ஒன்று-ஒரேதன்மையாக.

(க-ரை) விண்ணுலக நன்மையை யொழித்துவந்த அசுரரைச் சமுத்திரத்திற் சங்கரித்து வென்ற குமாரக்கடவுள் பரமசிவனுக்கு உபதேசித்த பிரணவப் பொருளானது பதினாலுலகத்தினு மொரே தன்மையாய்ப் பொருந்தினது என்பதாம்.

(வி-ரை) அத்தம்-எழுவாய், அந்தித்தது-பயனிலை, ஏ-அசை. "மைந்த வெமக்கருண் மறையி னென்னாத், தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலையென்னு, மொன்றொரு பதத்தினுண்மை யுரைத்தனன்" எனக் **கந்தபுராணம்** அயனைச் சிறைநீக்கு படலத்தில் அருளியதை யொப்பவே இங்கும், 'தேமொழியத் தம்பெற ஓம் தனக் கன்று' என்றார். அதாவது, சண்முகக்கடவுள் பரமசிவமூர்த்திக்குப் பிரணவமாகிய 'ஓம்' என்னும் அக்ஷரத்தின் உட்பொருள் விளக்கியது. தேமொழி அத்தம் என்றது, பார்வதிதேவியார் பரமனது இடது பக்கத்தே பொருந்தியது. 'அர்த்தம்' என்னும் வடமொழி, 'அத்தம்' எனத் திரிந்தது. தேவலோகத்தில் உள்ளதான பல்வகைச் செல்வங்களையும் அழித்தொழித்தும், அத்தேவர்கள் இயற்றும் யக்ய யாகாதிகள் முதலிய நற்காரியங்களைச் செய்ய வொட்டாமற் றடுத்தும் வந்தவர்கள் அசுரர்களே யாகையால், அத்தீயோர்களான தாரகன் முதலியோரின் அகங்கார மமகாரமும் அரிய தவங்களும் அறவே ஒழியும்படியாகப் போர்செய்து சங்கரித்தவன் முருகப்பிரானே யாதலால், 'சேணுலகத்........சிந்தவென்றதே' என்றார். 'அஸ்தம்' என்னும் வடமொழி, 'அத்தம்' என்றாயிற்று. தம்-தன்மைப் பன்மை. 'சூடிகா' என்னும் வடமொழி தமிழில், 'சூடிகை' என்றாயிற்று; இது, கங்கா என்பது, கங்கை என வந்ததுபோல, ஆவீறு ஐகாரமாயிற்று. அந்தித்தது-பொருந்தி நின்றது. அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழித்திரிபு; ஸந்த்யா-சந்தியை, சந்தி, அந்தி எனக் காண்க. இது - இரவோடு பகல் சேருங் காலமாகிய காலைச்சந்திக்கும், பகலோடு இரவு சேருங்

காலமாகிய மாலைச்சந்திக்கும் பொது. இனி, பகற்பொழுதின் அந்தமாகவுள்ளது அந்தி, (அந்தம்-முடிவு) எனவுங் கொள்ளலாம். "ஆங்குறு குமரப்புத் தேளருமறைக் காதியாகி, மோங்குமெய்ப் பொருட்குமேலா மோரெழுத் துரையினுண்மை, தீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக் குதவிமற்றும். பாங்குறு மிறைவன்றூலும் பரிவின லுணர்த்தினுல்" என்றதினலே, இவ்வாசிரியர் பெருமா னும், 'ஷேமொழி யத்தும் பதினலுலகு மந்தித்த தொன்றே" என்ருர். (4)

தித்தவித் தார மனித்தரைத் தேவர் வணங்கமுன்போ
தித்தவித் தாரகை மைந்தர்செந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே.

பதப்பொருள்

தித்தவித்தாரம் - தித்தவென்னுந் தாளவிரிவினல்
மன்-நிலைபெற்ற
நித்திரை - நடனமிடும் பரமசிவ னுக்கு
தேவர்-அமரர்கள்
வணங்க-வந்திக்கும்படியாக
முன்-முற்காலத்தில்
போதித்த-உபதேசித்தவராகிய
வி-விசேஷமான
தாரகை-கார்த்திகைப்பெண்களின்
மைந்தர்-புதல்வரும்
செந்தூர்க் கந்தர்-செந்திற்பதிவாழ் கந்தவேளும்
சிந்துரம்-திலகத்தை
ஆதித்த-சூரியனைப்போலுடைய
வி-நல்ல
தாமுடையார் - (வள்ளி தெய்வயானை யென்னுந்) தேவிகளையுடை வருமாகிய குமாரக்கடவுள்
அருள் வெள்ளம் - தமது கிருபா நதியை
தேக்கி-என்னுள்ளத்து நிறைத்து
அன்பு-பத்தியை
உதித்து-தோற்றுவித்து
அவித்தார்-தணித்தார்
அம்-அழகிய
தனி-ஒப்பற்ற
வீடு-மோட்சம்
உற-அடையும்படி

துக்கம் - இடும்பையை (விளைக்கின்ற) | செ-செனனமாகிய அனல்-அக்கினியை.

(க - ரை) முற்காலத்திற் பரமசிவனுக்கு உபதேசித்தவரும், கார்த்திகேயரும், வள்ளிதெய்வயானை பாகருமாகிய செந்தூர்க்கந்தர் என்னுள் கருணைவெள்ளத்தை நிறைத்து யான் கதியடையும்பொருட்டாகக் கொடிய அக்கினிபோன்ற துன்பத்தை விளைக்கும் என் பிறப்பை யொழித்தார் என்பதாம்.

(வி-ரை) மைந்தர் முதலிய - எழுவாய், அவித்தார் - பயனிலை, ஏ-அசை. அறுமுகப்பிரான் தன்மேற் பரம கருணைபூண்டு, பிறவிப் பெருங்கடலில் உண்டாகிய இருவினைச் சுழியில் அகப்பட்டுத் தாம் வருந்தாதபடி காத்தருளினன் என்பதைப் போற்றுகின்றார். பரம சிவமூர்த்தியார் தமது பக்தர்களை மகிழ்விக்கவேண்டித் தில்லையில் திருநடம் புரிந்த வைபவத்தை, 'மன்நித்தனர்' என்றார். நித்தனர்-உலக மழிந்தவிடத்தும் தாமழியாத தன்மையுடையார். தித்த, த்த, தித்த என்னும் சொற்கள், தாளத்தின் அறுதியைக்கூற வெழுந்தது. தாரகை - நக்ஷத்திரம், இங்கு, கார்த்திகைப் பெண்களைச் சுட்டி நின்றது. நக்ஷத்திரங்களெல்லாம் பெண்பாலாகையாலும், கிருத்திகா நக்ஷத்திரம் ஆறுதலாலும் பன்மையாகப் பொருள் விளக்கியது. "ஆறுரு வாதலோடு மறுவரு மகிழ்ந்துவேறு, வேறுதா மெடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென்கொங்கை, யூறுபா லமுதமன்னோற் குதவலு முறுவல்செய்து, மாறிலா வருளாலாற்ற வருந்தினன் போல வுண்டான்" என அறுமுகக்கடவுள் கார்த்திகைப் பெண்களின் முலையுண்டு வளர்ந்தமைகொண்டு இங்கே, 'தாரகை மைந்தர்' என்றார். கதிரவன் குணதிசைச் சிகரத்தின் தோற்றுங்காலுண்டாகிய பால சூரிய வடிவத்தினை யொத்துச் சிவந்த திலகமென்பார் 'சிந்தூர வாதித்த வித்தார முடையார்' என்றார். சிந்தூரம்-காவிக் கல். முருகபக்தி வேண்டுவதற்கும் அவனது அருள் வேண்டுமெனச்

சொல்ல வந்தவர், 'அருள் வெள்ளம் தேக்கி' என்றார். அருளாவது-தொடர்பு பற்றாமல் இயல்பாக எல்லா வுயிர்களின்மேலுஞ் செல்லுங் கருணை. (5)

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி னீடுமுற் றாத திமிரமுமே.

பதப்பொருள்

செவ்வந்தி - செவ்வந்தி என்னும் பூமாலையையும்
நீலம் - கருங்குவளை மாலையையும் (புனைந்திடும்)
புயம்-புயங்களையுடைய
முருகா-முருகக்கடவுளே!
பத்தர்-அன்பரது
சித்தமெய்யில் - இருதய வுண்மை நிலையில்
செவ்வு-செம்மையாக
அந்தி-பொருந்தியிருக்கின்ற
நீ—நீ
லத்தையுற்று-கிருபைகூர்ந்து
அருள்வாய்-(அம்மாலையை) எனக்குத் தந்தருளவேண்டும்
திங்கள் சேய்-குழவித்திங்களை
புனைந்த-அணிந்த
செவ்வந்தி - சிவந்த மாலைக்காலமானது
நீலத்து ஒரு பாகர் - நீல நிறத்தை யுடைய பார்வதிபங்கரை
போன்றது-தோன்றி விளங்குகின்றது
இனி-இனிமேல்
சிந்தியார் - (உன்னை) தியானியாதவர்கள் (அடையும்)
செ-செனனமாகிய
வந்தி-வருத்தத்தை (விளைக்கும்)
நீலத்தின் - அஞ்ஞான விருளைப் போல
நீடும்-நீடித்துநிற்கும்
முற்றாத-தொலையாத
திமிரமும்-இருட்டும்.

(க-ரை) செவ்வந்தி நீலோற்பலமாலிகை யணியு முருகா! பரமசிவனைப்போல இளம்பிறையுஞ் செவ்வானமுந் தோன்றிய மாலைக் காலமும் உன்னை நினையார் அடையுஞ் செனனவிருளைப்போல

இருட்டும் வந்தது; அன்பரது சித்தத்தில் வீற்றிருக்கின்ற நீ கருணை யுற்று அம்மாலையை யெனக்கு அருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-எழுவாய், அருள்வாய்-பயனிலை, ஏ-அசை. இச் செய்யுள் மாலை வேண்டி நிற்கும் தலைவியின் வார்த்தையாகவும் பொருள் கொள்ளலாம். செம்மை + அந்தி = செவ்வந்தி; இது, சிவந்த நிறத்தினையுடைய புஷ்பம்; இதனை அல்லிமலர் என்பாரும் உண்டு. நீலம் - நீலோத்பலம்; இது கருங்குவளையுமாம். முருகப் பிரான் சிவந்த செவ்வல்லிப் பூவினுற் றொடுத்த மாலையினையும் கருங்குவளைப் பூவினுற் றொடுத்த மாலையினையும் புயத்திலே அழகுபெற வணிந்து பொலிகின்றானென்பார், 'செவ்வந்திநீலப் புயமுருகா' என விளித்தனர். தன்னை நியமமுடன் எவனொரு வன் வழிபடுகின்றானோ அவனது இருதய கமலத்திலே தானாகவே வந்து எழுந்தருளியிருக்கும் இயல்புடையவன் என்பதை, 'பத்தர் சித்த மெய்யிற் செவ்வந்தி' என்றார். திங்கள்சேய்-பிறைச் சந்திரன். செவந்தி - சிவந்த மாலைக்காலம்; அதாவது, ஸந்த்யா காலம். "அந்தி வெள்பிறை சூடும் அம்மானே" எனச் **சுந்தர மூர்த்திகள்** பணித்த பாசுரத்திற் கிணங்க இவரும், 'திங்கட்சேய் புனைந்த செவ்வந்திநீலத் தொருபாகர்' என்றார். மாலைக்காலத்தே தோன்றும் பொன்னிறத்திலே நீலநிறங் கலந்து பிரகாசிப்பதை யொத்துப் பரமசிவன் பார்வதியுடன் பொலிந்திருந்தனர் என் பதற்கு, 'செவ்வந்திநீலத் தொருபாகா' என்றார். "பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேரா தார்" என்ற **பெரு நாவலர்** வாக்கினை யொப்ப, உன்னைப் போற்றாதவர்களாகிய புல்லர் கள் அடையும் அஞ்ஞானத்தைப்போலப் பேரிருள் வந்தது என்பார், 'நீடும் முற்றாத திமிரம்' என்றனர். அன்றி, கடவுளை வழிபடாத வர்கள் அடைவது நரகமே யாகையால் இவ்வாறு கூறினதுவுமாம். திமிரம்-இருள்; அஞ்ஞானம். (6)

திமிரத் திமிரக் கதரங்க கோபசெவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் குலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமென் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே.

பதப்பொருள்

திமிர-இருள்நிறத்ததும்
திமி-திமிங்கல மீனை
ரக்க-இரட்சிப்பதுமாகிய
தரங்கம்-சமுத்திரத்தை
கோப-கோபித்தவனே!
செவ்-சிவந்த
வேல - வேலாயுதத்தை யுடையானே!
கை வேல் - கையின் வேலாயுதமும்
திமிர-திமிராகும்படி
திமி-குற்றுகின்ற
ரக்க குலாந்தக-அசுரர் குலத்துக்கு யமனே!
வரைத்தேன் பெருகு - மலையினின்று வீழுந் தேனாற் பெருகிய
உந்திமிர் - கான்யாற்றை யுடைய புனத்தில்வாழும் வள்ளிநாயகி!
அத்திமிர்-அயிராவதத்தால் வளர்க்கப்பட்ட தெய்வயானைநாயகி!
அத்தனை-அவ்வளவு
ஆவி-(என்) பிராணனை
ஆளும்-ஆண்டுகொள்ளுங்கள்
என்-என்றிங்கிதம் பேசும்
சேவகனே-வீரனே!
திமிரத்திமிர-பூசப்பூச
அனலாய-அக்கினிபோ லிருக்கின்றன
சந்தன சீதளம்-(யான் திமிர்ந்திருக்கின்ற) சந்தன முதலிய குளிர்ந்த வஸ்துக்களும் (ஆதலால், வந்து தழுவி யருளவேண்டும்).

(க-ரை) திமிங்கலமீனையுடைய இருண்ட சமுத்திரத்தைக் கோபித்தவனே! வேலவனே! அசுரர் குலாந்தகனே! வள்ளி தெய்வயானை யென்னு நாயகிமார் தழுவும்படி இதம் பேசும் வீரனே! யான் பூசுஞ் சந்தன முதலிய குளிர்ந்த வஸ்துக்கள் இப்போது உன் விரக தாபத்தால் எனக்கு வெப்பத்தை விளக்குகின்றன என்பதாம். ஆதலால், என்னைத் தழுவவேண்டுமென்பது குறிப்பு.

(வி-ரை) தரங்க கோப முதலியன-எழுவாய், என்னைத் தழுவ வேண்டும் என்னும் பயனிலையைக் குறிப்பாய்க் காட்டி நின்றன,

ஏ-அசை. கீழ் ஏழு பாட்டுக்களில் சுப்பிரமணியப் பெருமானுடைய பலவகைப் பிரபாவங்களைக் கூறி அப்பெருமானது திவ்ய குணானுபவங்களில் ஈடுபட்டு அவனது உத்தமபுருஷத் தன்மையைக் கருதியதனாலே, அப்பொழுதே அவனைக் கிட்டவேண்டும்படியான ஆசையுண்டாய், அங்ஙனம் அவனைக் கிட்டப் பெறாமையாலே, இவ்வாசிரியர் ஆற்றாமை மீதூர்ந்து தளர்ந்தார்; அத்தளர்ச்சியாலே தானான தன்மை குலைந்து ஆண் பெண்ணாம்படியான நிலைமை தோன்றி ஒருதலைவியின் நிலையடைந்தார். அடைந்தும் அவனது அநுக்ரகம் கைக்கூடாமற்போகவே, அம் முருகப்பிரானிடத்தில் அன்புற்று இன்ப மனுபவித்து உறையும் வள்ளிநாயகியின் மையலில் ஆழ்ந்து நிற்கும் நீ என்னைக் கடைக்கண் நோக்காமலிருக்கின்றனையேயென வருந்தி, அவனது சேர்க்கையினை அகங்குழைந்து வேண்டி விரகதாபத்தால் மெலிகின்றார். விரகவேதனையுற்றார்க்குப் பூசுஞ் சந்தனம் முதலிய குளிர்ந்த வஸ்துக்கள் எல்லாம் காமோத்தீபகப்பொருளாய் அக்காதல் நோயை மிகுவித்தல்பற்றி, அவைகளை அனலெனச் சொல்லினர். "முத்தும் களபமும் தண்பனிநீரும் முயங்குமலர்த், தொத்துங் குளிரும் தூய்மலர்ப் பாயலும் சூழ்ந்துபுறங், கத்துங் கடலும் கதலியும் ஆலியுங் கங்குலும் இப்பத்தும் பெரும்பகையாய் விட்டவா மொருபைந்தொடிக்கே" என்ற இரத்தினச்சுருக்கம் இங்குக் காணத்தக்கது. கூடியநிலையில் இன்பந்தரும் பொருள்கள்யாவும் கூடாதநிலையில் துன்பம் விளைக்குமென்க. இதுபற்றிக் குளிர்ச் சந்தனமும் மற்றுமுள்ளனவும் அவர் கொண்டுள்ள காமதாபந்தணிய விரகில்லை யாகவே, வரையறையின்றி மேன்மேலும் வளர்கின்ற அக்காதல் மிகுதியால் வெப்பத்தை மிகுவிக்கின்றமையாலே, இனி நீ என்னைப் பாராமுகஞ் செய்யாமல் வள்ளி தெய்வயானை முதலியோரைத் தழுவுவதை யொப்ப என்னையும் தழுவவேண்டி விரும்புகிறார். தலைவனோடுகூடி யுறைகிற தலைவியரைக்கண்டு பொறாமை

கொள்ளுதல், தலைவனைப் பிரிந்து உறைகிற தலைவியர் இயல்பு. அக்குறிப்பு இப்பாட்டில், "வரைத்தேன் பெருகுந் திமிரத் திமிரத் தனையாவியாளும்" என்ற வார்த்தையில் தோன்றுதல் காண்க. வள்ளி நாயகியும் தெய்வயானையும்போலத் தானும் எம்பெருமானுக்குரிய ஒரு பிராட்டி நிலையைப் பெறுமாறு வேண்டினனென்பதும் அவ் வார்த்தையிற் புலனாம். இங்ஙனம் கூறிய இவ்வாசிரியரது அந்தரங்கபத்தியும் உட்கருத்து மென்னையோவெனில், முருகப்பெருமானது தலைமையும், ஜீவான்மாவினது அடிமையும், ஜீவான்மா பரமான்மாவுக்கே உரியதாயிருக்கையும், புருடச் சிரேஷ்டனாகிய அம்முருகப்பிரானது பேராண்மைக்குமுன் உலகம் முழுவதும் பெண்தன்மையதாதலும், ஜீவான்மாவினது ஸ்வாதந்த்ரிய மின்மையும்,பாரதந்திரியமும், தான் அம்முருகப்பிரான் சேர்க்கையால் இன்பத்தையும் பிரிவினால் துன்பத்தையும் அடைதலும், அவனையே தம் அவயவங்க ளெல்லாவற்றாலும் அனுபவித்து ஆனந்தித்தலும் முதலிய காரணங்களால், தம்மைத் தலைவியாக வைத்துச் சொல்லுவது தகுதியேயாகும்.

ஆயின், இங்ஙனம் பொருள்விரித்துச் சொன்னதில் சில பக்தருக்குத் தாங்கல் உண்டாகலாம். அது, நமது அறியாமையினையும் கல்வியின் குறையினையுமே புலப்படுத்தும். ஏனெனில், தோத்திரப் ரபிபந்தங்கள் பலவற்றுள்ளும் அகப்பொருள் கிளவித் துறைகளை இடையிடையே கூறுதல் கவிசமயமாதலை இலக்கியங்கள் கொண்டுணர்க. சிருங்கார ரசப்பிரதானமான அகப்பொருட் கிளவிகளை ஞானநூலுட் கூறுவது பிசகென மொழிவரேனும், அது சிற்றின்பங்காட்டிப் பேரின்பத்தில் இறங்கும் வண்ணஞ் செய்தலாம். அஃதெவ்வாறெனில், ஒப்பாரு மிக்காரு மில்லாதவனாகிய கடவுளினுடைய சேர்க்கையை விரும்புகின்ற பேரின்பக்காதல் வேதாந்தக் கொள்கையின்படி அன்பு செலுத்தவேண்டிய இடத்தில் அன்பு செலுத்திய

தாதலால், சிற்றின்பக் காதலைப்போலல்லாமல், சகல பாபநிவ்ருத்திக்கும் வீடுபேற்றுக்குங் காரணமாம். இதனை, பிரிவாற்றாத தலைவியின் வார்த்தையாகவும் வைத்துச் சொல்லலாம்.

கடலின்நீர் கருமையுற்று இருத்தலினாலே, 'திமிர தரங்க கோம' என விளித்ததாம். அவ்வருள்பெற்ற கடலும் தன்னை அடைந்தவரைப் பாதுகாக்குந் தன்மையுடைத்து என்பார், 'திமிரக்க' என்றார். இதனால், நீயும் அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருக்கும் ஆன்மாக்களின் பேரிலுங் கோபங்கொள்ளாதபடி ரக்ஷித்தல் வேண்டுமென்பதைக் குறிப்பாகச் சொன்னபடியாம். நீ துஷ்டர்களைச் சிக்ஷித்துச் சிஷ்டர்களுக்கு அருள்புரியுந் தன்மையாளன் என்பதை அறிந்துணர்ந்தேன் என்பார், 'கைவேல் திமிரத் திமிரக் கருலாந்தக' என்றார். அசுரகுலத்தை வேருடன் களைந்தொழித்தவனே என்பார், 'குலாந்தக' என்றார். அந்தகன்-எமன்; குருடன். இங்கு எமன் என்றே கொள்ளத்தக்கது. விரிப்பிற் பெருகும். (7)

சீதனங் கோடு புயங்கைகொண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு ணிதருமென் பார்தொழுந் தேவிபெறுஞ்
சீதனங் கோடு கொடிவேன் மயூரஞ் சிலையரசே.

பதப்பொருள்

சீ-மகாலக்ஷ்மியினது	சீதன்-சந்திரனை
தனம்-கொங்கையையும்	அம்-அழகிய
கோடு-சங்கத்தையும்	கோடு-கோணல்வடிவாகத்(தரித்த)
புயம்-திருத்தோளிலும்	முடியாளர்-பரமசிவன்
கை-திருக்கரத்திலும்	சேய்தனக்கு - மைந்தனுமாகிய குமாரக்கடவுளுக்கு
கொண்டார் தம் - தரித்த விஷ்ணுவினது	ஏதுளதோ-உள்ளதென்னெனில்
திருமருக-சிறந்த மருகனும்	சீ-இகழத்தக்க

தனம்-திரவியம்	யாகிய
கோள்-குற்றத்தையும்	கோடு-கொம்பினோடு
துனி-துன்பத்தையும்	கொடி-கோழிக்கொடியும்
தரு-கொடுக்கத்தக்கது	வேல்-வேலாயுதமும்
என்பார்-என்று நீக்கிய அன்பர்கள்	மயூரம்-மயில் வாகனமும்
தொழும்-வணங்குகின்ற	சிலை - குறிஞ்சிநிலமாகிய மலைக
தேவி-வள்ளிநாயகியால்	ளின்
பெறும்சீதனம்-கிடைத்த வரிசை	அரசு-ஆளுகையுமாம்.

(க-ரை) திருமாலுக்கு மருகோனும் பரமசிவனுக்கு மைந்தனுமான குமாரக்கடவுளுக்கு வள்ளிநாயகி சீதனத்தாற்பெற்ற கொம்புடன் கோழிக்கொடியும் வேலாயுதமு மயில்வாகனமும் மலைகளின் ஆளுகையும் உடைமைகளாம் என்பதாம்.

(வி-ரை) ஏதுளது-எழுவாய், இவைகளுடைமையாம்-பயனிலை, ஏ-அசை. "சேயோன் மேய மைவரை யுலகமும்...........குறிஞ்சி.........என.........சொல்லவும் படும்" என்ற **தொல்காப்பியத்தின் படி** மலையும் மலையைச்சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்துக்குக் குமரக்கடவுள் தெய்வமாதலால், 'சிலை அரசு' என்றார். சைலரூபமானது, சைலம்; அதாவது மலை என்பதாம்; சிலை-கல். "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்றும், "குன்றுதோறாடலு நின்றதன் பண்பே" என்றும் **திருமுருகாற்றுப்படையில்** கூறியவாறும், "குன்றுதோ றாடிய குமாற் போற்றுவாம்" என்றும், "குன்றுதொ றாடல் செய்யுங் குமரவேள்" என்றதும் இங்கே காண்க. திருமால் சேதனவர்க்கத்தை அருளிச்செய்யுமாறு ஸ்ரீமகாலக்ஷ்மியைத் தமது திருவக்ஷஸ்தலத்திலே அகலகில்லாது அனவரதமும் வைத்துளான் என்பதைக் குறித்து, அன்றி, வீரங்குன்றுமற்பகைவர்களைக் களைந்தொழிக்கும் கருத்தினையுட்கொண்டு தமது திருத்தோளினிடத்தே வீரலக்ஷ்மியைப்பெற்று விளங்குகின்றானென்

றும் இருபொருளும்படவே, 'சீதனங் கோடு புய்ங்கை கொண்டார்' என்றதாம். 'திருமருக' என விளித்ததின் விருத்தி முன்னர் விளக்கியுள்ளது. சீதன் - சீதளத்தைக் கொடுப்பவன் என்பதனுல், இது சந்திரனுக் காரணப்பெயர். உலகில் சாமான்யமாகக் காணப் படும் செல்வங்கள் அழியப்படுந் 'தன்மையனவாகையால் அவைகளை அவன் வழிபடும் அடியார்கள் துச்சமாக வெண்ணுகின்றனர் என்னும் அபிப்பிராயத்தைக் குறிப்பாக, 'சீதனங் கோடு னிதரு மென்பார்' என்றதாம். சீதனம்-கலியாண காலத்தில் மாமனுல் கொடுக்கப்படும் வரிசைகள். முருகன் தெய்வயானையின் திருக்கலியாண மஹோத் ஸவத்திலும், வள்ளிதேவியின் கலியாண மஹோத்ஸவத்திலும் சேவையின் பொருட்டு அவண் குழுமியவர்களான தேவதைகளி ஞலே அளிக்கப்பட்டதானவற்றையெல்லாம் சீதனமாகவே கருதி யதாம். அங்கியங்கடவுள் கோழியைத் தந்தான்; இந்திரன் மயிலைத் தந்தான்; யமன் வெள்ளாட்டு மறியைத் தந்தான். பிறருமுவந்து தத்தம் மெய்யின் வாங்கிப் படையாகத் தந்த மறிமுதல் மணியீருகச் சொல்லிய வேறு வேறு உருவினவாம் என்றறிக. இதனைப் பரி பாடலில், "அனலன் றன்மெய்யிற் பிரித்துச், செல்வ வாரணங் கொடுத்தோன் வானத்து, வளங்கெழு செல்வன்றன் மெய்யிற் பிரித்துத், திகழ்பொறிப் பீலி யணிமயில் கொடுத்தோன், திருந்து கோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவித், திருங்கண் வெள்ளாட் டெழின் மறி கொடுத்தோ, ஞஅங், கவரும் பிறரு மமர்ந்து படையளித்த, மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும், பொறிவரிச் சாபமு மானும் வாளுஞ், செறியிலை யீட்டியுங் குடாரியுங் கணிச்சியுந், தெறுகதிர் கனலியு மாலையு மணியும்" என்றமை காண்க. இவைகளை இப் பெருமான் சீதனமாகப் பெற்றனவாம். இங்ஙனம் புகழ்படக் கொண் டவையே சிறந்தவையே யன்றிப் புகழ் குன்றும் சீதனம் பயன் பெறுவதன்றென்னும்' நீதியுங் குறிப்பால் தேர்ந்தபொருளாம். (8)

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவெச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதென்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே.

பதப்பொருள்

சிலை-கருப்புவில்லையுடைய
மதன்-மன்மதனது
அம்பு-புஷ்பபாணம்
அடுமாறு எழும் - கொல்லும்படி வருகின்றன
சேய்மயில்-குமாரக்கடவுளின் மயிலினது
உச்சிட்ட-எச்சிலாகிய பாம்பினது
எச்சிலை-எச்சிலாகியதென்றற் காற்றையும்
மதனம்படு-கடையப்பட்ட
சிந்துவை-சமுத்திரத்தையும்
இந்துவை-சந்திரனையும்
செய்வதென்யான் - நானென்ன செய்து கடப்பேன்?

சிலை-ஆர்ப்பரிப்போடு
மதம்-ஆங்காரத்தை
நம்படு-நம்மிடத்திலே
காட்டுவர் - அலர்தூற்றிக் காட்டாநின்றார்கள்
கேளிரும்-சுற்றத்தாரனைவரும்
செங்கழுநீர்-குவளைமலர் நிறைந்த
சிலை-திருத்தணிகை மலையின்கண்
மது-தேனும்
அனம்-அன்னப்பட்சியும்
படு-உண்டாகிய
தாமரை-தாமரைகளையுடைய
வாவி-பொய்கையில் (வாழும்)
திரள்-கூட்டமாகிய
சங்கமே-சங்கினங்களே!

(க - ரை) குமாரக்கடவுளினது தணிகையங்கிரித் தாமரைத் தடாகத்தில் வாழுஞ் சங்கினங்களே! என்மேல் மன்மதன் பாணப் பிரயோகஞ் செய்யாநிற்கின்றான்; தென்றலும் சந்திரனும் கடன் முழக்கமும் வருத்துகின்றன; சுற்றத்தாரது கோபதாபமும் உண்டாயிருக்கின்றன; இவற்றை என்ன செய்து கடப்பேன்? என்பதாம்.

(வி-ரை) யாம்-எழுவாய், செய்வதென்-பயனில்லை. இது, தலைமகள் சங்கினத்தை நோக்கி இரங்கிக் கூறியது. அல்லது, தலைவனைப்

பிரிந்த தலைவி, இங்ஙனஞ் சொல்லி, தலைவனிடத்துச் சங்கினங்களைத் தூது செல்லுமாறு வேண்டுகிறாள் என்றுமாம். எனது பிராண நாதனான தலைவன் என்னை விட்டுப்பிரிந்து சென்றபோதே எனது உள்ளத்தின் உணர்வு முழுதும் அவன் பின்னேயே சென்றுவிட்டபடியால், உயிர் நீங்கிய உடல்போல் பொலிவிழந்து யான் மாத்திரம் இங்குத் தனித்து இருந்து, இவன் விரக வேதனையால் அயர்ப்பும் மயக்கமுமாக இடையிடையே மூர்ச்சையடைந்து, சங்கினங்காள்! இது தலைவனுள்ள இடம்; நீங்கள் அவனது சம்பந்தத்தை அனவரதம் பெற்று ஆரவாரஞ் செய்துகொண்டு அம்மலையின் சுனைகளிலே வசித்து வருகின்றவர்கள். அப்பெருமானின் அருள்பெற்ற நீவிர் என்மாட்டுச் சிறிது கருணைபுரிந்து, மதன் அம்பாலும், தென்றற்காற்றாலும், கடலாலும், சந்திரனாலும், சுற்றத்தாராலும் படுந்துயரத்தை அவனுக்கு எடுத்துச் சொல்லி என் துயரத்தைப் போக்கி ஆட்கொள்ளும் வண்ணம் பேரருள் புரிமின் என்றனளாம். இதில், சங்கினங்களைச் சம்போதனை செய்தது பொருந்துமோ? இலக்கண வழுவாகாதோவெனில், பேசாதது பேசுவது போலவும், கேளாதது கேட்பதுபோலவும் சொல்லப்பட்டது வழுவமைதி. "ஞாயிறு திங்க ளறிவே நாணே, கடலே கானல் விலங்கே மரனே, புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே, அவையல பிறவும் நுதலிய நெறியாற், சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ், சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்" என்ற **தொல்காப்பியச் சூத்திரம்** காணத்தக்கது; பிரிந்த நிலையிலே தலைவி மதிமயக்க முடையளாதலால், இங்ஙனம் புலன் குறைந்தவற்றையும் முன்னிலையாக்கிப் பேசுவள். தன் வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டுத் 'திரள் சங்கமே' என்று கொண்டாடி யழைப்பவளாய், இங்ஙனம் இனங்கூட்டி விளித்தாள். அன்றி, உங்களுள் ஒருவராயினும் என்மேல் கிருபைகூர்ந்து யான்படு துயரத்தை அப்

பெருமானிடம் அறிவிப்பீர் என்னும் கருத்துக்கொண்டெனவுமாம். "பூவிற்குத் தாமரையே" என்றபடி தாமரை சிறத்தலால், 'தாமரை வாவி' எனப்பட்டது. அருணகிரிநாதர் தமது ஆற்றாமையை ஆரியன் மூலமாக அம்முருகப்பிரானுக்குத் தெரிவித்துத் தமது துயரந் தணியக்கருதி அவர்களைத் தமக்குப் புருஷகாரமாகும்படி வேண்டுதல், இதற்கு உள்ளுறைப் பொருள்.

பிறர்க்கு இன்பத்தைத் தருவதான இளந்தென்றல் இனிது வீசும்போதும், ஸாகரம் குளிர்ச்சியைத் தரும்போதும், சந்திரன் காயும்போதும் இவள் தம்மை அவைகள் வருத்துகின்றனவென்பது, கூடினார்க்கு இன்பந்தரும் பொருள்களெல்லாம், பிரிந்தார்க்குத் துன்பம் விளைக்குமென்பதனாலாயதாம். இங்ஙனம் துயர்படும் அத் தலைவியின் ஆற்றாமையினைக்கண்ட, அவளது உறவினர்கள் அண்டி வந்து அவளுக்குப் பலவகையான சைத்தியோபசாரங்களை இடைவிடாமற்செய்து வரவும், இவள் சிறிதுந் தாபந்தணிந்திடாமல் மேல் மேலும் வருந்த, இப்படியும் ஒரு ஆற்றாமையுண்டோவென்று அவர்கள் வெறுத்துரைத்தலேயன்றி, இத்தலைமகள் ஒரு தலைமகனோடு தொடர்புடையளென்று ஊரார் சொல்லும் பழமொழியைக் கேட்டுத் தாய்மாரும் வெகுண்டு 'இங்ஙனம் நமது குடிக்குப் பழி விளையுமாறு ஒரு நிகழ்ச்சியுண்டோ' என்று சொல்லுகின்ற வெஞ்சொற்களும் தாளமாட்டாதவளாய், 'தேளிரும்சிலைமதம்நம்படுகாட்டுவர்' என்றதாம்.

திரளக் கரக்கரை வெண்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைந்தர்புந் திக்கொக்குமே.

பதப்பொருள்

திர-உறுதியான
ளக்க-லட்சமான
ரக்கரை-அசுரர்களை
வென்கண்ட-புறங்காட்டச்செய்த

வேலன்-வேலாயுதனே
திசைமுகன்-பிரம்மாவுக்கும்
மால்-மாயோனுக்கும்
திரள்-அநேக
அக்கர் - கண்களையுடைய இந்திரனுக்கும்
அக்கர் - உருத்திராட்ச மாலையையுடைய பரமசிவனுக்கும்
ஐ-சுவாமியாகிய குமாரக்கடவுளை
யான் பாட நாடுதல்-நான்பாடும்படி கருதுகின்றது
செய்ய-அழகிய
சங்கு-சங்குகள்
அதிர்-முழங்கும்
அளக்கர்-சமுத்திரத்தை [ம்படி
அக்கரை காண்பான்-கரை காணு
கைந்நீத்திசைவார் - கையினால் நீந்திப்போவாரது (புத்திக்கும்)
பனிக் கதிர்-தண் கதிரையுடைய சந்திரனை
அள-பிடித்துக்கொள்ளும்படி
கரக்கரை-கையளவை
வான் நீட்டு மைந்தர்-ஆகாசத்திலே நீட்டுஞ் சிறுவர்களது
புந்திக்கு-புத்திக்கும்
ஒக்கும்-ஒப்பாகும்.

(க-ரை) அசுரர்களைச் செயித்தவரும், பிர்மன் முதலியோருக்குச் சுவாமியுமாகிய குமாரக்கடவுளை யான் பாடக் கருதுதல், கையினாற் கடலை நீந்தவும், கையை நீட்டிச் சந்திரனைப் பிடிக்கவும் நினைப்போர்புத்திக்கு ஒப்பாயிருக்கின்றது என்பதாம்.

(வி-ரை) நாடுதல்-எழுவாய், ஒக்கும்-பயனிலை, ஏ-அசை. இச் செய்யுளின் இந்நூலாசிரியராகிய அருணகிரிநாதர் தனது புத்தியின் இழிவையும், அம்முருகப்பிரானின் அவாங்மனச கோசரமான பெருமையினையும் எடுத்துச்சொல்லித் தமது அறியாமை காரணமாக வியசனப்படுகின்றார். "அம்புவிமுதலாம் பல்பேரண்டமு, மங்கங்குள், வும்பருமுயிர்கள் யாவுமுயிரிலாப் பொருளுமாலுஞ், செம்பதுமத்தினோனுஞ் சிவனொடுஞ் செறிதல்கண்டோ, மெம்பெருமானின் மெய்யே வகிலமுமிருப்ப தம்மா" என்கிறவண்ணம் ஸர்வவியாபகனாகிய தேவரீரைத் தேவர்களெல்லாம் போற்றியும் ஏற்றியும் கண்டும் உண்மைநிலையறியாமையாலே என்போன்ற பேதையன் கண்டறிந்து, கையில்லாதவன் கரங்கொண்டு வானத்துலவும் சந்திரனைப் பிடிக்க முயலுவதுபோலும், காலில்லாத ஒரு முடவன் கண்கண்டறியாத

பரப்பினையுடைய ஸாகரத்தைக் கடப்பேனென்று சொல்லுவது போலவும் பரிகாஸத்திற்கு இடனாக விருக்கின்றதென்றனர். இதனால் போந்தபொருளென்னையோ வெனில், ஸாகரத்தினும் பெரியதொரு குணக்கடலான முருகப்பிரானென்பதும், சந்திரனைக் காட்டினும் தன்னடியாரிடத்து மனங்கசிந்து தண்ணளிசெய்பவனென்பதுவுமாம். "தாரகன்றன்னைச் சேயத்தடம் பெருமுகத்தினனைச், சூரபன்மாவை யேனையவுணரைத் தொலைவுசெய்தவன்" என்பார், 'திரளக்கரக்கரை வென்கண்ட வேலன்' என்றார். 'வென்கண்ட' என்பது, போரில் பகைவரைப் புறங்காட்டி யோடும்படியாகச்செய்த வென்பதாம். வேலன் - வேலாயுதத்தை யுடையவன். திசைமுகன்-பிரமன்; "நான்கு திசைமுகமும் நண்ணுதலால்" என்று பெரியார் பணித்தமையால் திசைமுகனெனப் பிரமனைச் சொன்னது காரணப்பெயர். திசாவென்னும் வடமொழியின் திரிபு திசை என்றதாம். திசை-திக்கு. மால்-மயக்கத்தைச் செய்பவன்; திருமால். சிவசின்னங்களில் ஒன்றாகிய உருத்திராக்கமாலையைக் குறித்தவை மற்றவைகளுக்கும் உபலக்ஷணம். யான் பாட-அகங்கார மமகாரங்களை யுடையவனாகிய நான் என்றதாம். நாடுதல்-பிரவர்த்தித்தல். (10)

திக்கத் திக்கோடி படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கத் திக்கோடு கடடக் கடறடி சேப்படைச்சத்
திக்கத் திக்கோடு துறைத்திறத் தற்ற குறக்குறச்சத்
திக்கத் திக்கோடு பறித்துக் கொடாதி சிறைபிறப்பே.

பதப்பொருள்

திக்க-திகைக்கும்படி
திக்கோடு-திசைதோறும் படர்ந்த
படி-பூமியின்கண்
புடை-நீக்கியருள்வாய்
சூத-மாமரமாய் நின்ற சூரனை
தெறி-தெறித்த
படபத்தி-ஆயிரம் பணமகுடத்தை யுடைய ஆதிசேடனது

கத்து-தலையிலே
இக்கோடு-இந்தச் சங்குகள்
உகள-ஊரும்படி யாழ்ந்த
தடக்கடல்-பெரியசமுத்திரத்தின்
தடி-கொன்ற [கண்ணே
சேப்படைச்சத்தி - சிவந்த வேற்படையை யுடையவனே!
கத்தி-கதறி
கோடு-மாறுபட்ட
துறைத்திறத்து-பரசமய வழியில்

அற்ற-மறைந்து நிற்பவனே!
குற-குறச்சாதியிற் பிறந்த
குறச்சத்திக்கு-வள்ளிநாயகிக்கு
அத்திக்கோடு-ஆனைக் கொம்பை
பறித்து-பிடுங்கி
கொடு-கொடுத்த
ஆதி-முதல்வனே!
சிறை-பஞ்சேந்திரியங்களால் கட்டுண்டிருக்கிற
பிறப்பு-(எனது) ஜெனனத்தை.

(க-ரை) சமுத்திரத்தின்கண் மாவுருக்கொண்டு நின்ற சூரனை வென்ற வேலாயுதனே! மாறுபாடுடைய பரசமயவழிக்கு எட்டாதவனே! வள்ளியம்மைக்கு யானைக்கோட்டைப் பிடுங்கி விளையாடக் கொடுத்த முதல்வனே! பூமியின்கண் எனது பிறப்பை யொழித்துவிடு என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்று எழுவாய், புடை-பயனிலை. ஏ-அசை. காசியபமாமுனிவரிடந் தோன்றிய அசுரர் குழுவினருள் ஒருவன் தீயவனுகிக் கடலிடையில் தமது மாயையால் மரமாகின்றவசுரனைத் தொலைத்த பிரானே என்பார், 'சூதத்தெறிபடத் திக்கத் திக்கோடு கடடக் கடறடி சேப்படை சத்தி' என்றூர். பன்முகச் சமயநெறி படைத்தவரையும், யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும், வாததர்க்கமிடும் படிறரும், ஆகிய விதண்டாவாதிகளுக் கெட்டாதவன் என்பார், 'கத்திக் கோடுதுறை திறத்தற்ற' என்றூர். இங்கே முக்கூற்று பரசமயத்தவர் ஒருவர் சென்ற நெறியே மற்றொருவர் செல்லாது தங்கள் தங்கள் வழியே மேலெனக் கடைப்பிடித்து ஒருவரை யொருவர் விரோதித்து உண்மை தேராது வாழ்கின்றவர் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர். அன்றி, அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயுள்ள அனுதிமுத்தனுகிய பரமான்மாவையும் ஏக

தேச வியாபகமுற்ற அனாதி பெத்தனாகிய ஆன்மாவையும் ஒன்றெனக் கூறுகின்ற ஏகாத்மவாதிகள். இங்கே தார்க்கர் என்று சொன்னது தார்க்கீகரையன்று; காரியத்தினை ஒப்புக்கொண்டு அதன் நியத காரணத்தினை யொப்புக்கொள்ளாமல் மறுக்கின்ற பொய்வாதிகளாய், இல்லையென்ற காரணாபாவத்தினை வியாப்யமாகவும், உண்டென்ற காரியத்தினை அபாவமாகவைத்து, அதனை வியாபகமாவுங்கொண்டு, 'நெருப்பில்லையாயிற் புகையுமில்லை' என்று பொய்யனுபவத்துள் ஒன்றாகக்கூறிய தர்க்கத்தினை மேற்கொண்டார் தர்க்கராவார்களென்பதாம். இவ்வகையாகச் சொல்லப்பட்டவையல்லாமல், உலகாயதம், பௌத்தம், சமணம், மீமாஞ்சை, மாயாவாதம், பாஞ்சராத்திரம், இப்புறச்சமய மாறினையும் கடைப்பிடித் தொழுகுபவர்களினாலே நீ காணமுடியாதவனென்பார் அவ்வண்ணங் கூறியதுவுமாம். "உவலைச் சமயங்க ளோவ்வாத சாத்திரமாஞ், சவலைக் கடலுள ளாய்க்கிடந்து தடுமாறுங், கவலைக் கெடுத்துக் கழலிணை கடந்தருளாஞ், செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" எனவும், "சாவிபோ மற்றச்சமயங்கள் புக்குநின், றாவியருதே யென்றுந் தீபற, அவ்வுரை கேளாதே யுந்தீபற' எனவும் வருவனவற்றாற் காண்க, தனது ஆவிக்கமுதாகிய வள்ளியம்மையாரின் திருவிளையாடலின் காரணமாக வலிமைபொருந்திய யானையின் தந்தத்தை முறித்துக் கொடுத்தவனே என்பார், 'குறச் சத்திக்கு அத்திக்கோடு பறித்து கொடு ஆதி' என்றார். அஸ்திகிரி-யானைமலை; அதாவது, காஞ்சீபுரம். கோடு-தந்தம். ஆதி-முழுமுதற்கடவுள். பிறவிப் பெருங்கடலி லுண்டாகிய இருவினைச் சுழியிலகப்பட்டு வருந்துகின்ற என்னை மற்றும் ஐம்பொறிகள் வந்து தாக்கி வருத்தாதபடி காத்தருளுவாய் என்பார், 'திக்கத் திக்கோடு கொடாத சிறைப்பிறப்பே' என்றார். சிறை-காவலிடம். சிறை பிறப்பு - பஞ்சேந்திரியங்களினாலே கட்டுண்டிருக்கிற ஜனனம். பிறப்பு-தொழிற்பெயர். (11)

சிறைவர வாமையி லேறிச் சிகரி தகரவந்து
சிறைவர வாமையில் கூப்பிடத் தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே.

பதப்பொருள்

சிறை-தோகையையும்
வர-வரப்பிரசாதத்தையுமுடைய
வாமையில் ஏறி-தாவு மயிலேறி
சிகரி-கிரவுஞ்சகிரி
தகர-பொடியாகும்படி
வந்து-எழுந்தருளி
சிறை-கரையினுல்
வர-சூழப்பட்டும்
ஆமை ஆமைக்கு
இல்-இருப்பிடமுமாகிய (கடல்)
கூப்பிட இரங்க
தானவர் சேனை - இராக்ஷதசேனைகள்
கொண்ட-கொண்டுபோன
சிறை வர-தேவர் சிறை மீளும்படி
ஆம்-தகுந்த
ஐயில்வாங்கிதன்-வேலெடுத்தகுமாரக்கடவுளது
தேங்கழல் - இனிய பாத தாமரையை
யாம்-நான்
கழலா-அணுகாமற் பிரிந்ததனுல்
சிறு-சிறிய
ஐவர்-பஞ்சேந்திரியங்களின்
அவா-ஆசையாகிய
மையில்-இருளில்
நெஞ்சு-என் இருதயம்
உடனே நின்று - அவ்விருளோடு நின்று
தேங்குவது-திகைக்கின்றது.

(க-ரை) கிரவுஞ்சகிரி பொடிபடவும், சமுத்திர முறையிடவும், அசுரரினின்று தேவர் சிறைமீளவும், வேற்படை யெடுத்து மயின்மீதெழுந்தருளிய குமாரக்கடவுளினது பாததாமரையை நண்ணுது பிரிந்ததனுல் என்னிருதயத்தில் ஐம்புல வாசைகளும் அகலாது நிறைந்திருக்கின்றது என்பதாம்.

(வி-ரை) நெஞ்சு-எழுவாய், தேங்குவது-பயனிலை, ஏ-அசை. இதில், அருணகிரிநாதர் தாம் அம் முருகப்பிரான் திருவடிகளில் சரணமடையாததினுல் உண்டான குற்றத்தினை வெளியிடுகின்றூர்.

குற்றமற்ற மெய்யடியார்கட்குப் பேரானந்த மழையைச் சொரிதல், பரமகுருவான நினது இயல்பு. அங்ஙனமான நீ, தானாக என் பக்கல் கருணைசெய்து, கொடிய சிந்தனைக்கு இடமான என் மனதில் வலிய வந்து எழுந்தருளியிருக்க, யான் அத்திருவருளின் தகுதிக்கு ஏற்பக் குற்றங்களை விலக்கிக் குணங்களை மேற்கொண் டொழுகாமல், வஞ்சனைக்கும் ஐம்புலவாசைக்கும் இடமாக வுள்ளேன். இவ்வாறான யான் வாழ்வது எங்ஙனே என்று அநுதாபத்தோடு கூறுதலாம். தெய்வத் தன்மையுடையதான மயிலென்று சொல்ல வந்தவர், 'சிறைவர' என்றார். சிறை-சிறகு; அது தோகையாம். வரம் என்றது கடைக் குறை. வாவும்-இது செய்யுமென்னும் முற்று. சிகரம்-மலையின் முடி. சிகரி-சிகரத்தையுடைய கிரவுஞ்சத்தை யுணர்த்திற்று. சிறை-தடுத்தல்; அதாவது, கரையுமாம். ஆமை இல்-ஆமைகள் வசித்தற்கு இடமானகடல். இல்-ஏழனுருபு. தன்னை இடமாகக்கொண்ட இராக்கதர்கள் அநவரதமும் நல்லோர்களுக்கெல்லாந் தீமையினையே செய்வதை அறிந்து, 'கூப்பிட' என்றார். கூப்பிடுதலாவது - அந்தக் கடலில் இயல்பான கோஷத்தை அவ்வாறு வியப்பு தோன்றச் சொன்னது. தாரகன் முதலியோர் தேவர்களையும் அவர்களது செல்வப் பெருக்குகளையுங் கவர்ந்து சென்றும், சிறைவைத்தும் துன்புறுத்தி வந்தமையினை அறிந்த முருகப்பெருமான் அன்னவர்களது சிறையை மீட்டமையாலே, 'தானவர் தானைகொண்ட சிறைவர' என்றார். தானைகொண்டது, தேவர்கள் அத்தீயர்களுடன் எதிர்த்துப் போர்புரிகையில், அவர்களுடைய படைஞர்களைக் கொண்டு போய்க் காவலில் வைத்தது. சிறை-காவல். அயில்-கூர்மை; வேலாயுதம். தமது அடியார்களுற்ற துயரங்களையெல்லாம் போக்கியருளுவதும், அவர் வேண்டுவனவற்றையெல்லாம் அளிப்பதும் அவனது திருவடித் தாமரைகளே யாதலால், 'தேங்கழல்' என்றார். தேன் + கழல் = தேங்கழல்; "தேன்மொழி வலிவரின், ஈறுபோய்வலி

மெலிமிகலுமாமிருவழி" என்னும் விதியாலேவந்தது. தேன்+குடம்= தேக்குடம், தேங்குடம் எனவும், தேன்+குழம்பு=தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும் வருதல் காண்க. அன்றி, "பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தா, ரிறைவனடி சேராதார்" என்றபடி சரண மடைகின்ற உயிர்கட்கெல்லாம் உஜ்ஜீவந காரமாயிருப்பது அப்பெரு மான் திருவடியாதலால் அங்ஙனங் கூறியதுமாம். ஜீவாத்மாவாகிய நான் பரமாத்மாவாகிய உன்னைச் சேரவேண்டுமென்று நாள்தோறும் நினைத்துக்கொண்டிருக்கையிலும், தேகாபிமானம் ஒருபுறத்தில் நீங்கா துள்ள எனது உடம்பிலே உட்பகையாகிய பஞ்சேந்திரியங்கள் அடங் காது தம்தம் புலன்வழி செல்லத் தொடங்குகின்றன. ஆதலால், இந்திரிய நிக்ரகமின்றி ஐம்பொறி வயத்துடன் கூடிநின்று நின் னிடம் பக்தி செய்கின்ற மெய்யடியவனல்லாத யான் உனது திரு வருளைப் பெறுந் தகுதியுடைய னயினேனில்லை யென்பதாம். யான் ஒருகால் ஐம்பொறி வயப்படுதலை யொழித்து என்னை மெய்யடிய னாக்கி ஆட்கொண்டருளவேண்டு மென்பது குறிப்பெச்சம். ஐவர்- தொகைக்குறிப்புச்சொல். மெய், வாய், கண், மூக்கு, செவி என் னும் ஐம்பொறிகளை 'ஐவர்' என உயர்திணையாகக் கூறியது, இழிபு பற்றிய திணைவழுவமைதி; (நன்-பொதுவியல்-28) **தொல்காப்பிய** வுரையில் நச்சினார்க்கினியர் 'தாம் வந்தார் தொண்டனார்' என்பது, உயர்சொல் குறிப்புநிலையின் இழிபு விளக்கிற்று என்றது இங்கு உணரத்தக்கது. ஐவர் அவா-ஐம்பொறிகள் வழியாகச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களையும் வேண்டியபடி யெல்லாம் அனுபவிக்க விரும்பும் ஆசை. (12)

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்தவிண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேபிடமேல்
தேங்கா வனமுந் தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீரி லஞ்சியுஞ் செந்திலுமே.

பதப்பொருள்

தேங்கு-நிறைவாகிய
ஆவன-பசுநிரை மேய்த்த திருமாலையும்
மும்மத-மும்மதம் பொழியும்
கரி-அயிராவதத்தையுடைய
வேந்துடன்-இந்திரனோடு
சேர்ந்த-கூடிய
விண்ணோர்-தேவர்களையும்
தேம் - அத்தேவர்கட் கிடமாகிய (அமராபதியையும்)
காவல்-காப்பது
நம்-நமது
முனை-கூர்மையையுடைய
அ வேல்-அவ்வேலாயுதத்தின்
பணி-தொழில்
எனும்-என்று கட்டளையிட்ட
சேயிடம்-குமாரக்கடவுளின் வாசஸ்தலம்
மேல்-முன்னே யிருக்கின்றன
தேங்கா-திகைத்து
அனமும்-அன்னப்பட்சியும்
தளர் நடையாய்-தோற்கின்றநடையையுடையவளே!
அஞ்சல்-பயப்படாதே
செண்பக-(அவை) செண்பகவிருட்சத்தால்
பூம்-பொலிந்த
தேந்தாவனமும்-இனிய பூஞ்சோலையும்
கழுநீரிலஞ்சியும் - செங்கழுநீர் மடுவும்
செந்திலும்-திருச்செந்தூருமாம்.

(க-ரை) அன்னமுந் தோற்கு நடையை யுடையவளே! விஷ்ணு முதலிய தேவர்களையும் அமராபதியையுங் காக்கும்படி வேலையனுப்பிய குமாரக்கடவுளினது திருச்செந்திற்பதியும் பூங்காவனமும் செங்கழுநீர்ச்சுனையும் அணித்தாயிருக்கின்றன, பயப்படாதே என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், அஞ்சல்-பயனிலை, ஏ-அசை. இச்செய்யுள் **இடமணித்தென்னுந் துறையாம்.** அதன்பொருள், தலைவனூர் சேய்த்தோ அணித்தோ என்று தலைமகள் கவலைப்பட்ட வதனைக் குறிப்பினாலறிந்த தலைவன் இடம் அணித்தென்று கூறுத லென்று **தஞ்சைவாணன் கோவையில்** பொருள்விரிப்பர். இத் துறைக்கே திருக்கோவையாரில் அருட்குணமுரைத்து வற்புறுத்தவும் ஆற்றாமை நீங்காத தலைமகட்கு, நம்மூரிடத்திற்கு எம்மூரிடம்

இத்தன்மைத்தெனத் தன்னூரின் அணிமைகூறி வற்புறுத்தா நிற்ற லென்பர்.

இவைநிற்க, இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்பனவற்றாற் களவுநெறியில் தலைமகளோடு கலந்த தலைமகன் அங்குப் பழி பரவுதலின் தோழியால் உணர்த்தப்பட்டுத் தலைமகளை உடன்கொண்டு தன்னூர்க்குச் செல்லுதலுண்டு. அது **அகப்பொருளிலக்கணத்தில்** 'உடன்போக்கு' எனப்படும். இங்ஙனம் தலைவன் தலைவியை இடையிலுள்ள பாலைவனத்தின் வழியாக உடன்கொண்டு போதல்பற்றி, உடன்போக்கு, பாலைத்திணையின் பாற்படும். "போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி, ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் - நோக்குங்கால், இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல் சொல்லிருக்கும் ஐம்பால்தொகை" என்பது காண்க. அவ்வாறு தலைமகளை உடன்கொண்டு இடைச்சுர நெறி கடந்து தன் ஊருக்குச் செல்லுகின்ற தலைமகன் அவளுக்கு வழி நடத்தல் துன்பம் தோன்றாதிருத்தல் பொருட்டுத் தன் நகரணிமையைக் கூறுதல் இப்பாட்டிற் குறித்த விஷயம். இத்துறையை, புணர்ந்துடன்போன தலைமகன் நடந்து இளைத்த தலைவியைக் குறித்து இடந்தலைப் பெய்தமை சொன்ன பாசுரம் என்பர் **அழகிய மணவாள சீயர்**. இதன்பயன், இடமணித்தென்று தேற்றுதல். தலைமகனும் தலைமகளும் தாம் ஒருவர்க்கொருவர் தனிநிழலா யிருக்கையாலே இவர்களுக்கு இந்நிலத்தின் கொடுமையா லுண்டாகும் இளைப்பு இல்லையேயாகிலும், பொழுது போக்குக்காகத் தலைவன் தலைவியை நோக்கி இங்ஙனம் கூறுவதென்றலும் உண்டு. "தேங்காவனமும் மதகரிவேந்துடன் சேர்ந்தவிண்ணோர் தேங்காவனமுமனையவ்வேற்பணியெனுஞ் சேய்இடம்" என்று கூறியும், 'தேங்காவனமுந் தளர்நடையாய்' என்று கூறியும், பாட்டுடைத் தலைவனது சம்பந்தமுடைய பொருளைச் சொல்லி அவ்வகையால் தலைவியைச் சிறப்

பித்ததும், 'தேங்காவனமும், கழுநீர் இலஞ்சியும்' என்றது, அவ்விடம் இவ்வழி நடை வருத்தத்தை இனிது தணிக்குந் தன்மையது என்றதாம். காவாது உதவிய முருகன் என அறுமுகப்பிரானின் வள்ளன்மையி லீடுபட்டு, "தேங்காவனமும் மதகரிவேர்துடன் சேர்ந்த விண்ணோர், தேங்கா வனமுனை யவ்வேற்பணி யெனுஞ் சேய்' எனக் கூறியதாம். பிறர்க்கு அரிய காரியங்களையெல்லாம் இம்முருகப்பிரான் தான் எளிதிற் றுயர்தீர்த்துக் காத்தனனென்பதை எளிதிற்கண்டு என்றபடி. 'தேங்கா அனமும் தளர் நடையாய்' என்றது உவமையணி. (13)

செந்தில கத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
செந்தில கத்தலர் துண்டமென் னுநின்ற சேயசங்க
செந்தில கத்தல ராசிதந் தானைச் சிறையிட்டவேற்
செந்தில கத்தலர் தூற்றிடுங் கேடு திவாகருளே.

பதப்பொருள்

செம்-சிவந்த
திலகத்து-பொட்டினால்
அலர்-பரந்த
வாள்-ஒளிபொருந்திய
நுதல்-நெற்றியையுடைய
வேடிச்சி-வள்ளிநாயகியினது
முகம்-வதனம்
பங்கசெம்-தாமரையாகும்
திலகத்து-எள்ளினது
அலர்-பூ
துண்டம்-மூக்காகும்
என் னுநின்ற - என்று நலம் புனைந் துரைக்கும்
சேய-குமாரக்கடவுளே!
சங்க-கூட்டமாகிய
செந்து-சீவராசிகட்கு
இலக-இருப்பிடமான
தலராசி தந்தானை-அண்டங்களைப் படைத்த பிரமனை
சிறையிட்ட வேல்-சிறைப்படுத்திய வேலாயுதத்தையுடைய
செந்தில்-செந்திற்பதியோனே!
அகத்து-அகங்காரத்தினால்
அலர் தூற்றிடும்-அலர் தூற்றுகின்ற
கேள்-சுற்றத்தாரும்
துதி-(யாவரும்) துதிக்கத்தக்க
வாகு-(உனது) புயத்தை
அருள்-கிருபை செய்யவேண்டும்.

(க-ரை) வள்ளிநாயகியினது முகத்தைத் தாமரை யென்றும், மூக்கை எட்பூவென்றும் வியக்குங் குமாரக்கடவுளே! பிரமனைச் சிறையிட்ட செந்திநாயகனே! சுற்றத்தார் மிகவும் அலர் தூற்றுகின்றார்கள்; (அது நீங்க) உனது திருப்புயந் தந்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், அருள்-பயனிலை, ஏ-அசை. இச்செய்யுள் தலைமகனது சௌந்தரியத்திலே ஈடுபட்ட தலைவி மீண்டும் அவ்வெம்பெருமான் தோள்வேண்டி நிற்றல். கூடிய நிலையில் தலைமகன் உடம்பின் பரிசத்தால் இன்பந்தந்த அத்திருத் தோளானது, பிரிந்த நிலையில் அவ்வின்பத்தை ஞாபகப்படுத்தி ஆற்றாமையை மிகச்செய்யவும், அதனைக்கொடுத்து என்னைத் தாங்கிக் கொள்ளுதல் வேண்டுமென வேண்டிக் கொள்ளுகின்றாள். இதில், வள்ளிநாயகியினது முகத்தைத் தாமரையென்றும், மூக்கை எட்பூவென்றும், வியக்குங் குமாரக்கடவுளே என விளித்தமை யென்னையெனில், அகப்பொருளிலக்கணத்திற் சொன்ன நலம்புனைந்துரைத் தல் என்னுந் துறையின்பாற்படும். இத்துறை, திருக்கோவையாரில் 'நலம்புனைந் துரைத்தல்' என்ற பெயராலும், **தஞ்சைவாணன் கோவையில்** 'புகழ்தல்' 'பெருநயப் புரைத்தல்' என்ற பெயர்களாலும், **தணிகைப் புராணத்தில்** 'நயப்புரைத் தயிர்ப்பொழித்தல்' என்ற பெயராலும், **இறையனாரகப்பொருளுரையில்** 'நயப்புணர்த்தல்' என்ற பெயராலுங் கூறப்பட்டுள்ளது. வாள்நுதல்-அல்வழித்தொகை. பங்கஜம் - காரணப்பெயர். தலராசி - அண்டங்கள்; ராசி - கூட்டம். அலர்-பூ. அலர்வது, அலர்; கர்த்தாப்பொருள் விகுதி புணர்ந்து கெட்ட காரணப்பெயர்; மலர், தளிர், அரும்பு, காய், கனி, திரை, நுரை, அலை என்பனவும் இவ்வாறே. "மறைபுரிந்திடுஞ் சிவனருள் மதலை மாமலர்மே, லுறைபுரிந்தவன் வீழ்தரப் பதத்தினு லுதைத்து, நிறைபுரிந்திடு பரிசனரைக் கொடே நிகளச், சிறைபுரிந்திடு வித்த

னன் கந்தமாஞ் சிலம்பில்" என்று கந்தபுராணமுடையார் கூறியதற் கிணங்கவே, இங்கே, 'தலராசி தந்தானைச் சிறையிட்ட' என்றார். (14)

திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ றீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல்கொடென்புந்
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே.

பதப்பொருள்

திவா-பகலிலே
கர கன்ன-கன்னனைப்போற் கொடுக்குங் கரத்தோனே!
கொடைப் பாரி - வள்ளலைப்போற் கொடுக்குங் கொடையோனே!
என்று - புல்லரிடஞ்சென்று சொல்லி
உழல்-வருந்தச்செய்யும்
தீன-வறுமையாகிய
அல்-இருளை
ஈர்-நீக்கும்
திவாகர-ஞானசூரியனே!
கன்னபுரக்குழை-கன்னபுரக்குழையென்னும் பணியணிந்த
வல்லி-வள்ளிநாயகி
செருக்கு-களிப்புறத் தழுவும்
உர-மார்பையுடையோனே!
அந்தி - மாலையின் செவ்வானம்போலும்
வாகு-அழகையுடைய
அர-பரமசிவனது
கன்ன-திருச்செவிக்கு
சுக வாசக - இனியவசன முபதேசித்தவனே!
திறல்-வலிமையையுடைய
வேல் கொடு - வேலாயுதத்தைக் கொண்டு
என்-எனது
புந்தி-இருதயத்தில்
வா-வரக்கடவாய்
கர-ஒளித்துநின்று
மறலிகன்னம் இடாது-இயமனைவன் கொள்ளைகொள்ளாமல்
உயிர்-என்னுயிரை
சேவலுக்கு-காப்பாற்றும் பொருட்டாக.

(க-ரை) வறுமையினால் பிறரிடத்துச் சென்று கொடையிற் கன்னனே! வள்ளலே! என்று புகழ்ந்திரப்பதை யொழிக்கும் ஞான சூரியனே! வள்ளிநாயகி தழுவு மார்பனே! பரமசிவனுக் குபதேசித்

தவனே! என்னுயிரை யமன் கைப்பற்றிக் கொள்ளாதபடி யென்னை வந்து காத்தருள் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்ற எழுவாய், வா-பயனிலை, ஏ-அசை. இது முருகப்பிரான் திருவடிக்கு ஆட்படுவார் அடையும் பயன் கூறியதாம். முருகப்பிரானே! எல்லா வுயிர்களையும் நற்கதி புகுவிக்கவேண்டு மென்று இயல்பா யெழுந்த பெருங்கருணைத்திறத்தால், அவற்றிற்குக் கைகால் முதலிய உறுப்புக்களைத் தந்து, வாழுமிடத்தையும் உண்டாக்கி, மற்றும் அவை வாழ்தற்கு வேண்டிய உணவு முதலிய நுகரப் படும் பொருள்களும், அவை உய்யும் வகையை உணர்த்துகின்ற தத்வநூல்களும் முதலிய பலவற்றையும் அமைத்தருளிய வுன்னைப் போற்றாது அற்பரைப் போற்றி யடைவதென்னே என்பார், 'திவாகர கன்ன! கொடைப்பாரி யென்றழ நீனவல்லீர் திவாகர' என்றார். சூரியன் அமிசமாய்த் தோன்றியவன் கன்னனனமையைக் குறித்து, 'திவாகர கன்ன' என்றார். திவாகரன்-சூரியன். கர கன்ன-காத்தை யுடைய கன்னன்; அது அவன் செய்த கொடையை யுணர்த்தி யது. "எத்தலங்களிலு மீகையா லோகை வாகையா லெதிரிலா வீரன்" என்று கன்னன் கொடையினைப் புகழ்ந்து பேசியது காண்க. "புலங் கந்தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு, நன்கல னீயு, முரைசால் வண்புகழ்ப் பாரி" "மாரிவண் பாரி" "பாரி யொருவனு மல்லன், மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே" "பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடாதாயினுங், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி" "ஊருட னிரவலர்க் கருளித் தேருடன், முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப், படுமணியானைப் பறம்பிற் கோமா, னெடுமாப் பாரி" "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய...பறம்பிற் கோமான் பாரி" "முல்லைக்குத் தேரும்......தொல்லை யிரவாமலீந்த விறைவர்" "முந்நூறூர்த்தே தண்புறம்புநாடு, முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்"

"கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்பனவற்றால் அப்பாரியின் வரையா வண்மையினையே இங்கும், 'கொடைப்பாரி' என்றார். "தீனை அல் ஈர் திவாகர" என்றமை - அஞ்ஞானமாகிய இருளைப் போக்கடித்து ஞானவொளியைத் தருபவனே என்றதாம். அன்றி, மெய்யாகவே தத்துவ ஞானத்தை யுண்டாக்குகின்ற பேரொளியே என்றதுவுமாம். வல்லி-கொடி; அது, உவமையாகுபெயராய் வள்ளிநாயகியாரை யுணர்த்தும். உரம்-மார்பு. அந்தி-ஸந்த்யா என்னும் வடமொழித் திரிபு; ஸந்த்யா-சந்தியை, சந்தி, அந்தியெனக் காண்க. இது இரவோடு பகல் சேருங் காலமாகிய காலைச்சந்திக்கும், பகலோடு இரவு சேருங் காலமாகிய மாலைச்சந்திக்கும் பொது. இனி பகற்பொழுதின் அந்தமாகவுள்ளது அந்தி [அந்தம்-முடிவு] எனக்கொண்டு, மாலைச் சந்தியைக் குறிப்பதென்னவுமாம். அந்தி என்பது - இங்கே, அக்காலத்தில் செந்நிறமாய் விளங்கும் வானத்துக்குக் காலவாகுபெயர். "பவளம் தடவரையே போல்வான்" "ஆரழலாய் நீண்டுகந்த வன் கண்டாய்" என நாவுக்கரசு நவின்ற நன்மொழிகொண்டே இங்கும், 'அந்திவாகுவர' என்றதாம். "மைந்த வெமக்கருள் மறையினென்னுத், தன் றிருச்செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னு, மொன்றொரு பதத்தினுண்மை யுரைத்தன னுரைத்தல்கேளா, நன்றருள் புரிந்தா னென்ப" என மூலமந்திரமான பிரணவத்தைக் குமரவேள் தமது பிதாவான பரமசிவனுக் குபதேசித்ததை இங்கே, 'கன்னசுக வாசக' என்றார். சுகவாசகம் - இனிமையான வார்த்தை. கரத்தல்-மறைந்து நிற்றல்; அது, முதனிலையாய் நின்றது. நமன் தமர் நரகத்தி லஞ்சி யிடுக்கணுற்றனன் உய்வகை யருளாய் என்று சொல்ல வந்தவர், 'திறல்வேல் கொடென்புந் திவாகர னன்ன மறலியிடா துயிர்ச் சேவலுக்கே' என்றார். "வேல்கொடு" என்பதனால், உன் தந்தை தன்னை அடைக்கலம் புக்க மார்க்கண்டேயனுக்கு அருள்

பாலிக்க வந்துதவினர். அதுபோல நீயும் என்னைக் காத்தருளல் வேண்டுமென்றுமாம். உயிர் சேவல் - உயிர்களைக் காத்தல். அலர் என்பது பழிமொழி; அதாவது, தலைவியின் நிலையினை அறிந்த ஊரார் கூறும் வார்த்தையாம். இதனை, "அம்பலு மலருங் களவு" என்னும் இறையனர் அகப்பொருளிற் காண்க; அலரென்பது இன்னனேடு இன்னளிடையதுபோலும் பட்டதெனை விளங்கச் சொல்லி நிற்பது. இவ்வலரென்பது காப்புக் கைம்மிக்க விடத்து நிகழுமென்பது. காப்பு என்பது இரண்டுவகை. அவை நிறைகாவல் சிறைகாவல் என்பதாம். அவற்றுள், நிறைகாவல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகு மொழுக்கம். இங்கே சொன்ன சிறைக்காவல் என்பது, தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை முதலியன. அகம்-உள், அகங்காரம். அகம்+அத்து=அகத்து; "அத்தின் அகரம் அகரமுனை இல்லை" என்ற விதியாற் போந்தது. (15)

சேவற் கொடியும் பணிசாங் தகனுங் திருக்கரத்துச்
சேவற் கொடியுங் கொடியகண் டாய்தினை சூழ்புனத்துச்
சேவற் கொடியுங் திவளத் தவளுந்தங் திக்களபச்
சேவற் கொடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே.

பதப்பொருள்

சேவற்கு-இடபவாகனத்தையுடைய பரமசிவனல்
ஒடியும் பல்-பல்லுதிர்க்கப்பட்ட
நிசாந்தகனும் - இருட்கூற்றாகிய ஆதித்தனும்
திருக்காத்து - (உனது) அழகிய கையினிடத்திலிருக்கின்ற
கொடியும்-கொடியாகிய
சேவல்-சேவலும்
கொடிய கண்டாய்-பொல்லாதவைகளா யிருக்கின்றன
தினை சூழ் புனத்து-தினை நிறைந்த புனத்தை
சேவல்-காப்பவளும்
கொடி-நீண்ட
உந்தி-கான்யாற்றின்

வளத்தவளும்-வளப்பத்தை யுடையவளுமாகிய(வள்ளியம்மையும்)
தந்தி-அயிராவதம் வளர்த்த
களப-சந்தனமணிந்த
சே-சிவந்த
வல்-சொக்கட்டான் காய்போன்ற கொங்கையையும்
கொடியும்-கொடிபோன்ற விடையையுமுடைய (தெய்வயானையையும்)
உடையாய் - இருபாகத்தும் வைத்திருக்கின்ற கந்த சுவாமியே!
பிரியினும்-உன்னைப்பிரிந்த(பகல்) காலத்தும்
சேரினும் - உன்னை யடைந்த (இராக்) காலத்தும்.

(க-ரை) வள்ளிநாயகியையுந் தெய்வயானை நாயகியையுமுடைய கந்தனே! உன்னைத் தழுவியகாலத்து இரவு நீடியாமல் கோழி கூவியும், உன்னைப் பிரிந்தகாலத்து மாலை விரைந்து வராமல் பகல் நீடித்தும் கொடுமை செய்வனவா யிருக்கின்றன என்பதாம்.

(வி-ரை) நிசாந்தகனும் சேவற்கொடியும் - எழுவாய், கொடிய-பயனிலை, ஏ-அசை. இதனை வரைவு நீடித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லிய கூற்றாகவும், அல்லது, தலைவனைப் பிரிந்த தலைவியின் வார்த்தையாகவுங் கொள்ளுதல் பொருந்தும். தன் தலைவனோடு அளவளாவிக் கலந்து இன்பம் அநுபவித்துக் கொண்டிருக்கையில் அதற்குப் பேரிடையூறாக வந்து நிற்பது பகற் காலமாகையால், அதனை வெறுத்துக் கூறுவாள், 'பிரியினும்' என்றும், அன்றி, தன் கணவன் நீக்கத்தை அடைந்து வருந்த வேண்டியிருப்பதனாலே அங்ஙனம் கூறியது. தலைவி தன் நாயகனை அனுபவித்துக்கொண்டிருக்கையில், அவ்வநுபவம் மேன்மேலோங்கி நிற்பதற்கு இடையூறாய்க் கோழி கூவியதை, 'சேரினும்' என்றார். இதனால் தலைவியானவள், தலைவனை எக்காலும் இடைவிடாமல் அநுபவித்துக்கொண்டிருக்கும் பரம ப்ரீதியையே கொண்டவளானமையால், அவள் தனக்கு நேர்ந்துள்ள இடையூற்றையும் விலக்கி, என்னையும் வள்ளியம்மைபோலும், தெய்வயானைபோலும் வைத்தருள் புரிதல் வேண்டுமென்று இச்சிக்கிறாள். இங்கே இவர்

இச்சித்து நிற்பது இரவுபகலற்ற விடமென்க. அதாவது, இறப்பும் பிறப்பும் அற்றவிடம். பக்தராகிய இந்நூலாசிரியர் பகற்காலத்தில் பதின்மரோடுகலந்து உறவாடி தியானநிலைகலைந்து முருகன் உருவம் மறந்து போவதற் கிடமாக நிற்கும் பகற்காலத்தை வெறுத்துச் சொல்லியும், தியானநிலை குலையாமல் ஓரிடத்திருந்து முருகனருட் பொலிவில் மூழ்கி யிருக்கையில் அக்காலத்தை வளரவிடாமல், விரைந்துவரும் வைகறையாமத்தைத் தனது குரலினாலே கூவிப் பலவரையும் எழுப்பும் ஆற்றலுடைமை பெற்ற சேவலை வெறுப் பாரைப்போலவே இங்கு, 'சேவற் கொடியும் கொடிய கண்டாய்' என்றார். பிரிதல்-தனித்து நிற்றல்; அதாவது, பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறாக நிற்றல். சேருதல் - பரமாத்மாவினிடம் சேர்ந்து இருத்தல். தக்கயாகத்தில் ஆதித்தன் பல்லுதிர்ந்த கதையினை இங்கே, 'பல்லொடியும் நிசாந்தகனும்' என்றார். புனத்துச் சேவற் கொடியும், களபச் சேவற் கொடியும் உடையாய் என்று முருகப் பிரான் வைத்திருக்கும் வள்ளி தெய்வயானை ஆகிய இச்சாசத்தி, கிரியாசத்திகளிடம் பொறுமைகொண்டவர்போல அவர்களை முன் னிலை யாக்காமல், அம்முருகன் கொடியாக விளங்கும் சேவலைச் சொன்னதாம். நிசாந்தகன் - சூரியன்; நிசா-இரவிற்கு, அந்தகன்- எமன்; அதாவது, இரவிற்குச் சத்ரு வென்பதாம். நிசாந்தகன்- இரவின் முடிவிற்குக் காரணமானவன். கொடி என்பது, முதலடி யில், தேரின் சீலையைக் குறிப்பது. கொடி என்பது உவமையாகு பெயராய், மூன்று நான்காவது அடிகளில் வள்ளியம்மையும், தெய்வயானை அம்மையும் உணர்த்தியதாம். கொடி-இங்கு மெல் லிய வடிவாலும் நடக்கத்தாலும் உவமையால் வள்ளிக்கும் தெய்வ யானைக்கும் உவமை. இதனால் தோற்றக்கேடுகளின்மையின் நித் தியமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள்.

விவகாரமின்றி எக்காலத்தும் ஒருதன்மையாதாதல் பற்றியே, அம் முருகனை வேண்டுதற்கு இரவினையும் பகலையும் வெறுத்துப் பேசினர் எனினும் பொருள் இழுக்காது. (16)

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைத்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி னுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே.

பதப்பொருள்

சேர்-இசைந்த	தெண்டிரைநீர்-கடலனைத்தும்
இக்கு-கரும்பையும்	சேரி-ஒருமித்து
வடு-மாவடுவையும் (ஒத்த)	கு-உலகத்தை
மொழி விழியாள் - மொழியையும் விழியையு முடைய வள்ளிநாயகியின்	அடு-அழிக்கின்ற
தனச்செவ்வி - கொங்கையின் தன்மை	கடை நாளினும்-உகாந்த காலத்தினும்
குறச் சேரிக்கு-குறவர் குடியிருப்புக்கு	சிதைவு அற்ற-அழிவில்லாத
வடு - (காந்தருவ மணம் நடந்ததென்னும்) குற்றமாகிய சொல்லை	செவ்வேள்-குமாரக்கடவுளது
விளைத்தது-உண்டாக்கினது	சேரி-(தென் சேரி வட) சேரியாகிய
அன்றே-அக்காலத்திற்றானே	குவடு-மலையின்
நன்று-நன்றாயிருந்தது	புடை-பக்கத்தில்
	சூழ்-சூழ்ந்த
	புனத்தில்-தினைப்புனத்தில்
	தினை-தினை
	விளைவு-விளைவானது.

(க-ரை) குமாரக்கடவு ளாளுகைக்குள் ளடங்கிய மலைப்பக்கத்தில் தினை நன்றாய் விளைந்தது; உடனே கன்னல்போன்மொழியும் மாவடுப்போல் விழியுமுடைய வள்ளிநாயகியின் யௌவனத்தால் குறவர் குடிக்கு வடுவிளைந்தது என்பதாம்.

(வி-ரை) வடு, விளைவு-எழுவாய்; விளைந்தது, நன்று-பயனிலை, ஏ-அசை. "ஆழிசூழு லுலகமெல்லா மருங்கனன் முருங்கவுண்ணு மூழிநாள்" என்று **கம்பர்** விரித்துச்சொன்ன வடவைத் தீயானது கடலனைத்தும் வற்றிட ஒருமித்து அழிக்கும் பிரளயகாலத்தில் சூரிய சந்திரர் முதலிய கிரகங்களுந் தலைதடுமாறி நிற்குமத் தசையிலும் தாம் அழியாத பரம்பொருளாகி நிற்கும் முருகக்கடவுளென அப் பெருமான் சிறப்பைப் பெருமைப்படுத்த, 'தெண்டிரைநீர் சேரிக்கு வடுகடை நாளினுஞ் சிதைவற்ற செவ்வேள்' என்றார். தெண்டிரை-பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. தெள் திரை-தெள்ளிய திரை. நீர் சேரி-நீரையுடைய விடமென்னினு மாம். கடைநாள் - உலகின் முடிவுகாலம்; இதனையே ஊழிக்கால மென்பர். இக்காலத்தில் பெருகாற்றும், பெருநெருப்பும், பெரு மழையும் தனித்தனி எழுந்து உலகங்களை அழிக்குங் காலமென்றுஞ் சொல்லுவார். செம்மை + வேள் = செவ்வேள்; பண்புப்பெயர் முன் நின்ற மெய் திரிந்தது. வேள் - யாவரும் விரும்பும் கட்டழகுடை யவன். வேட்டல்-விரும்புதல். இப்பெயர் மன்மதனுக்கும் உரியது; அவனை விலக்கும் பொருட்டு, 'செவ்வேள்' என்றார். அவனது நிறம் கருமை. "சேயோன் மேய மைவரை யுலகமும்........குறிஞ்சி ......என......சொல்லவும்படும்" என்ற **தொல்காப்பியத்தின்படி** மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்துக்கு முருகக் கடவுள் தெய்வமாதலால், 'செவ்வேள் சேரிக் குவடுபுடை சூழ்புனம்' என்றார். தினை புனம்-தினைவிளையுங் கொல்லை. புனம் + அத்து + இல் = புனத்தில். இக்குமொழி-உவமையாகுபெயர். வடு-மாம்பிஞ்சு; அதன் உட்பிளவுக்கு ஆகுபெயர். அது, மகளிர் கண்ணுக்கு வடிவில் உவமம். "வடுப்பிள வனைய கண்ணாள்" என்றார் **சிந்தாமணி யாரும்**. "வடுவகிர் நிரையன்ன கண்ணார்" என்று **நச்சினார்க்கினியர்** உரைத்தமை காண்க. வள்ளிநாயகியின் நவத யௌவனத்தாலே

குமரனுடன் களவு நிகழ்ந்தமையினைக் குறவர் குடிக்கொரு குற்ற மென்றதாம். இங்கு 'வடு' என்றது அஷ்டமணங்களுள் ஒன்றான கந்தருவமணத்தைக் குறித்தமையாம். கந்தருவர்கட்குக் காந்தர்வ விவாகம் உரியது. இது, சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டதேயாகும். அவையாவன: பிராம்மம், பிராஜாபத்தியம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆசுரம், ராக்ஷஸம், பைசாசம் என்பனவாம். அவற்றுள், பிராம்மமாவது-ஒத்த கோத்திரத்தானாய் உரிய காலமளவும் பிரம சரிய விரதம் அநுஷ்டித்தவனை அழைத்து உபசரித்துக் கன்னி கையை அலங்கரித்து அவனுக்குத் தானமாகக் கொடுப்பது; இதற்கு 'அறநிலை' என்றும் பெயர். பிராஜாபத்தியமாவது - மகட்கோடற்கு உரிய கோத்திரத்தான் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்கு ஈந்து அவளைக் கொடுப்பது; இதற்கு, 'ஒப்பு' என்றும் பெயர். மைத் துன கோத்திரத்தான் வேண்டிச் சென்றால் மறாது மனமொத்துக் கொடுப்பது என்றும், 'ஒப்ப அவர்களிருவரும் ப்ரஜோத்பாதநாதி ரூபமான தர்மங்களை அநுஷ்டிக்கக்கடவர் என்று வாக்காலே யறுதி யிட்டுச் சொல்லி, அக்நி காரியத்தையும் தானே அநுஷ்டித்துக் கன்னியை அலங்கரித்துக் கொடுத்தல்' என்றும் இதற்கு இலக்கணங் கூறுதலுமுண்டு. ஆர்ஷமாவது - பொற்கோட்டுப் பொற்குளம்பின வாக அலங்கரிக்கப்பட்ட பசு எருதுகளினிடையே கன்னிகையை அலங்கரித்து நிறுத்தி, 'நீரும் இவைபோற் பொலிவுற்று வாழ்வீர்' என்று சொல்லி அவற்றுடன் கன்னிகையைத் தக்க ஒருவனுக்குக் கொடுப்பது; இதற்குப் 'பொருள்' என்றும் பெயர். தைவதமாவது- யாகத்தில் ருத்விக்காயிருந்து அதனை நடத்திவைத்தவரில் ஒருவ னுக்கு அந்த யாகாக்கினியின் முன்னிலையிலே கன்னிகையை யலங் கரித்துத் தக்ஷிணையாகக் கொடுத்தல்; இது, 'தெய்வம்' எனப்படும். காந்தர்வமாவது-காந்தர்வ குமாரரும் கன்னியரும் நல்வினைப்பயனால் தனியிடத்துச் சந்தித்து ஒருவரையொருவர் காதலித்துப் பிறர்

கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இயைதல்போல, உருவந் திருவுங் குலனுங் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய்த் தலைவனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றித் தாமே நல்வினைவசத்தால் வேட்கை மிகுதியாற் கூடுகை; இதற்கு, 'யாழோர் கூட்டம்' என்று பெயர். ஆசுரமாவது - வரன் தானே கன்னிகைக்கு ஆபரணம் பூட்டி இயைந்தவளவு தந்தை தன்னையர்க்கும் பொருள்கொடுத்து மணஞ் செய்துகொள்ளுதல்; இதற்கு, 'அரும் பொருள்வினை' என்று பெயர். 'கொல்லேறு தழுவியவன் இவளைப் பெறுவன், வில்வளைத்து நாணேற்றியவன் இவளைப் பெறுவன், இயந்திரப் பொறியிலக்கை யெய்தவன் இவளைப் பெறுவன்' என இவ்வாறு தன்னை தன்னையர் சொல்ல, அங்ஙனம் ஒருவன் செய்து நிறைவேற்று மணம்புரிந்துகொள்ளுதலும் இதன் இலக்கணமாம். பைசாசமாவது-தன்னிலும் மூத்தவளையாவது மதுபானத்தால் மயங்கியவளையாவது துயின்றவளையாவது இரகசியத்திற் கூடுகையும், இழிந்தவளை மணஞ்செய்தலும், ஆடை மாறுதலும் பிறவுமாம்; இதற்கு, 'பேய்நிலை' என்று பெயர். ராக்ஷஸமாவது - உறவினரை உபேக்ஷித்துத் தலைவியின் காதலையும் எதிர்பாராது அவளை வலிதிற் கைக்கொள்வது; இது, 'இராக்கதம்' எனப்படும். மற்றும் இவ்விவாகங்களின் விரிவை, ஸ்மிருதிகளெனப்படுகிற வடமொழி தர்மசாஸ்திரங்கள் முதலிய பரந்த நூல்களிற் காண்க. "அறநிலை யொப்பே பொருள்கோள் தெய்வம், யாழோர்கூட்டம் அரும்பொருள் வினையே, இராக்கதம் பேய்நிலை யென்றுகூறிய, மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுள், துறையமை நல்யாழ்ப் புலமையோர் புணர்ப்புப், பொருண்மை யென்மனார் புலமை யோரே", "அன்பினைந் திணைக் களவெனப் படுவது, அந்தண ரருமறை மன்ற லெட்டினுட், கந்தருவ வழக்க மென்பனார் புலவர்", "மறையோர் தேஎத்து மன்ற லெட்டினுட், டுறையைந்

நல்யாழ்த் துணைமையோ ரியல்பே", "அதிர்ப்பில்பைம் பூணரும் ஆடவருந் தம்முள், எதிர்ப் பட்டுக் கண்டியைத லென்ப, கதிர்ப் பொன் யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக், கந்திருவர் கொண்ட கலப்பு" என்றவை இங்கு அறியத்தக்கன. (17)

தினைவேத்தி யன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்திபுந்
தினைவேத் தியமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினைவேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத
தினைவேத்தி யங்குயிர் கூற்றூரி லூசிடுஞ் சீயுடம்பே.

பதப்பொருள்

தினை-தினைப்புனத்துக்கு [கி
ஏத்தி-இறைவியாகிய வள்ளிநாய
அன்புசெய்-இச்சைகொள்ளும்
வேந்தன்-குமாரக்கடவுளது
பதாம்புயத்தில்-திருவடித்தாமரையில்
பத்தி-அன்பையும்
புந்தி-அறிவையும்
நைவேத்தியம்-நைவேத்தியமாக
உகந்து-விரும்பி
ஏற்றினர் - (சமர்ப்பித்து) வணங்கின அடியார்கள்
மாற்றினர்-(உண்மையாய்)ஒழித்து விட்டார்கள். [ளும்
பாற்றினம் - பருந்துக் கூட்டங்க
தீ-நெருப்பும்
தின்-பட்சிக்கத்தக்கதும்
ஐ-அழகிய
வேத்தியர்-அறிஞர்
நெறி-(விதித்த) நல்வழியில்
செல்லாத-ஒழுகாததும்
இந்திய-பஞ்சேந்திரிய வசத்ததும்
தித்திஇனத்தின் - உணவு வகைகளினால்
நைவு-கழிவாகிய (மலசலாதிகளை)
ஏத்து-ஏந்திக்கொண்டதும்
இயங்கு உயிர்-(உண்ணின்று)இயங்கும்பிராணனை
கூற்று-யமனானவன்
ஆரில்-உண்டுவிட்டால்
ஊசிடும் - நாறிப்போகத் தக்கதுமாகிய
சீ-இகழ்ச்சிக்கிடமான
உடம்பு-தேகத்தை.

(க-ரை) வள்ளிநாயகி விரும்பிய கந்தசுவாமியினது திருவடித் தாமரையில் அன்பையும் அறிவையும் செலுத்தினவர்கள் பருந்துக் குந் தீக்கும் இரையாய் நெறிமொழி யைம்புல னுகர்ச்சியையுடைய

மலபாண்டமும், பிராணன் விட்டுப்பிரிந்தால் நாறிப்போவதுமாகிய உடலை யொழித்துவிடுவார்கள் என்பதாம்.

(வி-ரை) ஏற்றினர்-எழுவாய், மாற்றினர்-பயனிலை, ஏ-அசை. அறுமுகப்பெருமான் பக்தியிலாழ்ந்த இவ்வாசிரியர் தேகாபிமானங் கொண்டு, அதனைப் போற்றி வளர்க்கும் புல்லியர்களுக்கு, அத் தேகாபிமானத்தின் கெடுதியினையும், அத்தேகத்தின் நிலையாமை யினையு மெடுத்துக் காட்டுவார்போல், காற்றினுக்குச் சமானமாகிய இவ்வுயிரையும், மண்பாண்டத்திற்குச் சமானமான உடலையும், நம்பித் தோற்பையில் கள் பொங்குவதுபோல உலகின்வீணே குதித்தாடித் திரிவதுபோல் யாதொருவிதமான பயனுமே இல்லை. ஆகையால், நீங்கள், மனமாகிய கழனியில் அருளாகிய நீரினைப் பாய்ச்சி, ஞான மாகிய பயிரை விளைவித்து, புலன்களாகியமாடுகள் தமதிஷ்டப்படியே மேயவொட்டாமற் றடுத்து எவர் வாழ்கின்றார்களோ அவர்கள் நிலையற்ற தேகத்தை யொழித்து, இனிப் பிறவியில் உழலாமல் முருகன் திருவடியை அடைந்துய்வார்களென்று உபதேசம் புரிந்த னர். 'ஏற்றினர்' என்றது மனத் தூய்மைகொண்ட மாசற்ற முருக பக்தர்களை யென்க. "ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த, பீற்றற்றுருத்தியை" என்றதுகாண்க. வேத்தியர்-அறிஞர்; இது, வித் என்னும் வடமொழி தாதுவினடியாகப் பிறந் தது. கூற்று-காரணப்பெயர். சீ-இகழ்ச்சிக்குறிப்பு. ஊசிடுதல்-தன் னிலைகுலைந்து தீநாற்றமெடுத்தல். வேந்தன்-அரசன்; வேந்து-பகுதி; இது சொல்லால் அஃறிணையும் பொருளாலுயர்திணையுமாகும். அம்பு ஜம்-தாமரை; இது நீரில்தோன்றுவ தென்பதனாலே காரணப்பெயர்.

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் செவிதாத்தோல்
சீயனம் போதி யமலையிற் றுதை சிறுமுனிவன்
சீயனம் போதி கடைந்தான் மருகன்செப் பத்திகைத்தார்
சீயனம் போதி லரனு திருக்கென் செயக்கற்றதே.

பதப்பொருள்

சீயன்-பார்வதிபாகரான சிவன்
நம்-நம்மை
போதி-உபதேசி
என-என்று
வாய் புதைத்து-வாய்மூடி
செவிதர-கேட்கவும்
தோல்-யானையும்
சீய-சிங்கமும்
நம்பு-தஞ்சமாயுறைகின்றதும்
ஓதிய - கல்விக்கு உறைவிடமுமான
மலையின் தாதை-பொதியமலைக்கு முதல்வரான
சிறு முனிவன்-அகத்திய முனிக்கு
சீயன்-பாட்டனாகிய
அம்போதி கடைந்தான் - பாற்கடலைக்கடைந்த விஷ்ணுவினது
மருகன்-மருமகனான குமாரக்கடவுள்
செப்ப-உபதேசிக்க
திகைத்தார் - (பிரணவப்பொருள் தெரியாமல்) தியக்கமுற்றிருந்தார்
சீ-இகழத்தக்க
அனம்போதில் - அன்ன வாகனத்தின்மேற் செல்லும்
அரன்-பிரமன்
ஆதி-முதன்மையாகிய
ருக்கு-வேதத்தை
என்-என்ன
செய-செய்யும்படி
கற்றது-கற்றுக்கொண்டது.

(க-ரை) பார்வதிபாகரான பரமசிவன் வாய்மூடிக் கேட்கவும், திருமால் மருகனான குமாரக்கடவுள் பிரணவப்பொருளைச் சொல்லத் திகைத்துநின்ற பிரமா ஆதிவேதத்தை ஏன் கற்றான்? என்பதாம்.

(வி-ரை) அரன்-எழுவாய், கற்றது-பயனிலை, ஏ-அசை. சீயன் என்பது, ஸ்ரீயைத் தனதிடத்தேயுள்ளவன்; ஸ்ரீயென்பது இங்கு, பார்வதிதேவியாரை. நம்மை - அப் பிரணவப்பொருளான நம்மை, ஏகாக்ஷரப்பொருளான வெம்மை. போதம்-ஞானம்; அதனைப் போதிப்பவன் போதி யென்பதாம். அல்லது, சொல்லு என்னும் பொருள். 'வாய்புதைத்துச் செவிதர' என்றது குருசிஷ்ய தர்மத்தைச் சுட்டியதாம். 'தோற்சீய நம்புமலை' என்றது முனிவர் உறைதலால் அம்மலையின்கண் வாழும் மிருகங்களும் ஸாத்வீகத்தன்மை யடைந்திருந்தமை கூறியபடியாம். அகத்தியரே பொதியமலையின்கண் முதன் முதலாகக் குடியேறியவராகையாலே, 'மலையின் தாதை'

எனப்பட்டார். அம்போதி-கடல்; அம்பு-தண்ணீர். திருமால் திருப் பாற்கடலில் அமுதங்கடைந்தமையினை இங்கே, 'அம்போதி கடைந் தான்' என்றார். அன்னம் என்பதன் குறைவு அனம் என்பதாம். வேதம் நான்கினுள் முதல் வேதத்துக்கும், வேதத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் 'ருக்' என்று பெயரிருப்பதாலே, 'ஆதிருக்' என்றார். வேதத்தைச் சொல்லத் தொடங்குவோர் முதலில், பிரணவ மகா மந்திரத்தை முதலிற்சொல்லி அதன் பின்பே வேதங்கூறவேண்டும் என்னும் முறைமையும், ஸ்வரக்கிரமமும் தவறியபடியாலே, 'ஏன் கற்றான்' என்ற வினாவினதாம். பொருளுணரும் திறமை இல்லா தவன் பொதுவாக வேதங்கற்பதினாலே பயனில்லை என்பதுவுமாம். ()

செயதுங்க பத்திரி போற்றும் பகீர திகரசெவ்வேற்
செயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்ததண்டஞ்
செயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் செல்வதென்பாற்
செயதுங்க பத்திரி யத்திரி யாதிரென் சிந்தையிலே.

பதப்பொருள்

செய-சிறந்த
துங்கபத்திரிபோற்றும் - துங்க பத்திரி யென்னும் நதி வணங்குகின்ற
பகீரதி கர-கங்காதேவியின் கையிலிருப்பவனே!
செவ்வேல்-சிவந்த வேலாயுதத்தையுடைய
செய-செயம்பொருந்திய குமாரக் கடவுளே!
துங்கபத்திரி-சுரப்புன்னையிலையை
சூடும்-புனைகின்ற
குறத்தி திறத்த - வள்ளி பங்காளனே!

தண்டம்-தண்டாயுதமும்
செய-வெற்றியும்
துங்க-பெருமையும்
பத்தி-ஒழுக்கமுமுடைய
ரிபு-மாறுபட்ட (காலன்)
திரி-கெடும்படி (உதைத்த)
பாதத்தர்-திருவடியையுடைய பரமசிவன்
செல்வ-புதல்வனே!
தென்பால்-தென் திசையில்
செய்-போகச்செய்வதாகிய
அதுங்கு-யாவரு மொதுங்கும்
அபத்து-தீநெறியினால்

இரிய - எனது சிந்தை முறிந் தோட
திரியாது-உழலாமல்
என் சிந்தையில் - என் மனத்தின் கண்ணே
இரு-நீ தங்கி யருளவேண்டும்.

(க-ரை) காங்கேயனே! வேலாயுதனே! வள்ளிநாயகனே! பரம சிவனது மைந்தனே! யான் இயமதண்டனையை விளக்கு மவநெறி யிற் சிக்காவண்ணம் நீ என் சிந்தையில் வீற்றிருக்கவேண்டும் என் பதாம்.

(வி·ரை) நீ தோன்று-எழுவாய், இரு - பயனிலை, ஏ - அசை. மார்க்கண்டேய முனிவருக்கு எமபயத்தை யொழித்து எப்பொழுதும் உன் திருவடிகளைப் பிரியாதபடியான பேற்றைத் தந்தருளினையாத லால், அடியேற்கும் பிறவித்துன்பங்களை யொழித்து எந்நாளும் உன் திருவடிகளைப் பிரியாதபடியான பேற்றைத் தந்தருளுவாய் என்று உன்னைச் சரணமடைந்தேனெனத் தாம் அப்பெருமானை நம்பி யடையக் காரணத்தை வெளியிடுவார், 'தண்டஞ்செய துங்கபத்திரி புத்திரி பாதத்தர் செல்வ' என்றார். "அரனருண் முறையினை யறிந்து கங்கைதன், சிரமிசை யேந்தியே சென்று" என்று **கந்த புராணத்தில்** கூறினமையும், கங்கையின் ஒருபுறத்தது சரவணப் பொய்கையெனச் சொல்லியுளபடியாலும், 'பகீரதிகர' என்றார். துங்கபத்திராநதி கங்கையின் உபநதியாகையால், 'துங்கபத்திரி போற்றும்' என்றார். செம்மை+வேல்=செவ்வேல்; பகைவர்களின் குருதிபடிந்து செம்மைநிறங் கொண்டுள்ள வேலாயுதம். தென்திசை-எமனுலகம். (20)

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டமதலை
சிந்தா குலவரி மாயூர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே.

பதப்பொருள்

சிந்தா - ஒருக்காலும் அழியமாட்டாத
குலவரிசைப்பேரும் - நமதுவமிச பாரம்பரைநாமமும்
ஊரும்-நமது நகரமும்
நம் சீரும்-நமது சிறப்பும்
என்று ஓர்-எனறெண்ணுகின்ற
சிந்தாகுலவரிடத்து - வருந்து மனத்தையுடைய அஞ்ஞானிகள் பால்
அணுகாதருள்-சேராதிருக்க அனுக்கிரகிக்கவேண்டும்
தீமதலை - அக்கினியிற்பிறந்த கோழியை
சிந்தா - கொடியாகக் கொண்டவனே!
குலவு-பிரகாசிக்கின்ற
அரி-பச்சைநிறம் பொருந்திய
மாயூர வீர - மயிலேறுஞ் சேவகனே!
செகம்-பூமியை
அளப்ப-அளக்கும்படி
சிந்தாகு-வாமனமாகி
உலவு-உலாவின
அரி-விஷ்ணுவின்
மருக-மருகனே!
சூரனை-சூரனை
செற்றவனே-ஜெயித்தவனே!

(க-ரை) கோழிக்கொடியோனே! பச்சைமயில் வீரனே! வாமனவதாரங்கொண்ட மான்மருகோனே! சூரசங்காரனே! லௌகீக வாழ்வை நித்தியமாய் நம்பி மனம் வருந்துவோர்பாற் சேராதிருக்க எனக்கருள்செய் என்பதாம்.

(வி-ரை) நீ - தோன்று எழுவாய், அணுகாதருள் - பயனிலை. முருகப்பிரானே! நீ கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தலத்தில் திருநாமத்தைச் சொல்லாமலும், ஒரு மனத்துடனிருந்து உன்னைத் தியானியாமலும், மனிதப் பிறப்பெடுத்ததின் பயனை அறியாமலும், அப்பிறப்பை வீண் கவலைகள் பலவற்றிற்கும் இடமாக்கித் தமது வாழ்நாளை வீணேபோக்கி யான் எனதென்னும் பற்றுடனிருக்கும் அஞ்ஞானிகளுடன் என்னைச் சேரவொட்டாமல் அருள்புரிவாய் என்று பிரார்த்திப்பார், 'சிந்தாகுல வரிசைப் பேருமூரு நஞ்சீருமென்றோர் சிந்தாகுலவரிடத் தணுகாதருள்' என்றார். சிந்தாகுலர்-

எப்போதும் தமது பெருமையினையே நினைத்து வருந்து மியல்பினர். சிந்தா-சிந்தை; அதாவது, மனத்துயர். இசைப்பேர்-கீர்த்தியை நாடுபவர். சிந்தாகுலவரிடத்து - நஸ்வரமானவற்றிலே மனமூன்றித் திரியுமியபுள்ளவர்களான அஞ்ஞானிகள். அணுகாதருள் - என்னைச் சேர வொட்டாமல் கிருபைசெய்; அவ்வாறு கூறியதின் கருத்தென்னையென்னில், அவர்களது சேர்க்கையே எவ்வகையான நற்பேற்றையுங் கெடுத்து நானிலத்தில் உழன்று வருந்தும்படியாகச் செய்துவிடுமென்பதுபற்றியே அங்ஙனம் சொல்லினர். "அனலன்றன் மெய்யிற் பிரித்துச் செல்வ வாரணங் கொடுத்தோன்" எனப் பரிபாடல் நூலாசிரியர் கூறியதற் கிணங்கவே இங்கும், 'தீமதலை சிந்தா' என்றார். "வானத்து வளங்கெழு செல்வன்றன் மெய்யிற் பிரித்துத் திகழ்பொறிப்பீலி யணிமயில் கொடுத்தோன்" என்பதனாலே, 'குலவு அரிமயூர' என்றார். திருமால் மாவலியினிடம் மூவடிமண் வேண்டிச் சென்றகாலத்தே தமது திருவுருவத்தை யாவருங் கண்டு அருவருப்படையும் வண்ணம் மிகவுஞ் சிறிய வுருவமெடுத்துச் சென்றமையாலும், அவனது தங்கையை முருகப்பிரான் மனைவியாகக் கொண்டமையும் விளங்க, 'திருமால் மருக' என்றார். இதன் விவரம் முன்னங் கூறப்பட்டது. செறுதல் - கொல்லுதல். சிந்து-சிறியது. அரி-இது பலபொருளொருசொல். செற்றம்-பிறரை யழிக்க வேண்டுமென்னும் எண்ணங் கொள்ளுதல்; அதாவது பகையுமாம். ()

செற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ்வரைமேற்
செற்றை வரும்பழ னிக்கந்த தேற்றிடு நூற்றுவரைச்
செற்றை வரும்பழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
செற்றை வரும்பழ மாங்கூடு வேமத்தி னத்திலவந்தே.

பதப்பொருள்

செற்றை-செற்றையென்னு மீனினம் | வரும்-உலாவுகின்ற
பழனம்-வயலும்

சோலை-பொழிலும்
இஞ்சி-மதிலும்
திகழ்-விளங்காநின்ற
வரைமேல்-பருவதத்தின்மேல்
செல்-மேகம்
தைவரும்-தவழுகின்ற
பழனிக் கந்த - பழனிமலைக் கந்தனே!
தேற்றிடு-அபயந் தந்தருள்வாய்
நூற்றுவரை-துரியோதனன் முதலிய நூறுபேரையும்
செற்று-கொன்று
ஐவரும்-பாண்டவர்கள்
பழநாடு-பழைய ராச்சியத்தை
ஆள-ஆளும்படி
நாடி - கருதிய கிருஷ்ணமூர்த்தியினது
கண்-விழியாகிய (ஆதித்தன்)
சேய்-மைந்தனாகிய காலன்
விடுத்த-அனுப்பிய
செற்றை வரும் - தூதர் கூட்டம் வரும்
பழமாம் கூடு-வார்த்திகத்தையடைகின்ற இவ்வுடலானது
வேம்-பிராணனீங்கித் தகிக்கப்படுகின்ற
அத்தினத்தில் வந்து - அன்னாளிலெழுந்தருளிவந்து.

(க-ரை) பழனிமலை அதிபனே! விஷ்ணுவின் விழியாகிய சூரியனது மைந்தனாகிய காலன்விடுத்த தூதர்கூட்டம் வரும் புழுக்குரம்பையாகிய என்னுட லழியுங்கால் நீ யெழுந்தருளிவந்து அபயந் தந்தருள் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், தேற்றிடு - பயனிலை, ஏ-அசை. என்னிடத்திலே ஈகை முதலியவான நற்குணங்க ளொன்றுமே கிடையா; குற்றம் முதலியனவான தீக்குணங்களே மிகுதியும் நிறைந்துள்ளனவாகையாலே, இந்நிலையில், எமபடர் என்னைப் பற்றிச் சென்று நரகத்தில் தள்ளி வருத்துவார்களே என்று என் மனம் கவல்கின்றது. இக்காலத்து அஞ்சேலென்று அபயமளித்துக் காக்க வேண்டியவன் நீயென்று தன்னை ஆட்கொண்டு உய்விக்குமாறு அம் முருகப்பிரானை வேண்டுகின்றார். உயிராகிய பறவை வந்து புகுந்து சிலகாலந் தங்கிப் பின்பு நீங்கிச் செல்லுங் கூடுபோலுதலால், உடம்பு. 'கூடு' எனப்பட்டது. பழமாம் கூடு - வார்த்திகத்தை அடைந்த தேகம். பழம் ஆம் கூடு எனப் பிரித்து, மூப்பினை

அடையும் நிலைமையினையுடைய இவ்வுடலம் எனவும் பொருள்படுத்த லாம். அதாவது, நிலையாமையினையுங் குறிப்பால் விளங்கவைத்தமை யாம். நூற்றுவர், ஐவர் என்னு மிரண்டும் தொகைக் குறிப்புச் சொற்கள். நூற்றுவர்-துரியோதனாதியர். ஐவர்-பஞ்சபாண்டவர்கள். பாழாம் கூடு - மலத்தால் மறைப்புண்டு கிடக்கும் சரீரம். அன்றி, பாழாம் கூடு, ஆன்மா வாடுதற்குக் காரணமான சரீரம். "கூடுவிட்டிங்-காவிதான் போயினபின்" என்றார் **ஔவையாரும்.** பழனம்-வயலுமாம். இப்பாடலின் முதலடி பழனிமலையின் உன்னதத்தினையும், அதன் சார்பான நிலத்தினது நீர்வள நிலவளத்தினது சிறப்பினையும் விளக்குவது. வரை - இருமடியாகுபெயர். செல்-மேகம்; அது, செல்லுந் தன்மைத்து என்றமையால் காரணப்பெயர். செல்லைவரும் பழனி, **தொடர்புநவிற்சியணி.** பழமை+நாடு=பழநாடு; இது, "ஈறுபோதல்" என்னும் விதிபற்றி அத்திஞபுரத்தையுணர்த்தியது சேய்-இளமையினையுணர்த்துஞ் சொல். நாடு ஆள-இரண்டன்தொகை. கண்ணபிரானின் வலதுகண் சூரியன், அவனது மகன் எமன். வேம் அத்தினத்தில்-இடுகாட்டில் வைத்துப் பொசுக்கு மக்காலத்தில். தேற்றிடு - தேறுதல் சொல்வாயாக. இடு எனும் விகுதி துணிவுபற்றி வந்ததாம். (22)

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றுகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே.

பதப்பொருள்

தினகரர் - பகன் பூடாவென்னு மிரண்டாதித்தர்களுடைய
அக்க-கண்ணையும்
ரதம்-பல்லையும்
கெடுத்தார்-அழித்தபரமசிவனுக்கு
குருதேசிகர்-போதகாசிரியரும்

செந்தில் நகரார் - செந்திற்பதியினரும்
அக்கரம் ஆறு உடையார்-சடாக்ஷரப்பொருளானவரும்
தெய்வ-தெய்வீகமாகிய
ஆரண-வேதம் பூசித்த
தந்தி - பாம்பு போன்ற பிரகாரத்தையுடைய
நகர் - திருச்செங்கோட்டு மலையையுடையவருமாகிய (கந்தசுவாமி)யினது
அர-அரத்தாற் கூர்மையிட்ட
கர-திருக்கையிற் றரித்த
சத்தி-வேலாயுதமானது
இன்றாகில்-இல்லாவிட்டால்
அத்தேவர் நண் பதி - அத் தேவர்கள் பொருந்திய பொன்னகரமும்
ந-இல்லாமற்போவதுமன்றி
கர-வஞ்சகநிறைந்த
ரக்கர்-அசுரரும்
அதம் தீர்வர் - இறப்புமொழிவார்கள்
செகம் எங்கும் ஈர்வர்-உலக முழுவதையும் நிர்மூலமாக்கியும் விடுவார்கள்.

(க-ரை) பரமசிவனுக்குக் குருவாய்த் திருச்செந்தூரில் வாழும் சடாக்ஷரப்பொருளாகிய திருச்செங்கோட்டு மலையையுடைய கந்தசுவாமியினது திருக்கைவேலெழுந்தருளாவிடில் அமராபதி யழிந்து போவதுமன்றி, அசுரரும் ஸ்திரமாயிருந்து உலக முழுவதையு நாசஞ் செய்துவிடுவார்கள் என்பதாம்.

(வி-ரை) அரக்கர் - எழுவாய், அதந்தீர்வர்-ஈர்வர் - பயனிலை. ஏ-அசை. பரமசிவனது ஏவலினாலே வீரபத்திரக்கடவுள் தக்கனது யாகத்தை அழிக்கையில் பகன் பூஷாவென்னும் திருநாமந் தாங்கிய வாதித்தர்கள் இருவரது பல்லையும் உதிர்த்தானென்னுங் கதையை விளங்கவைக்கவே, 'தினகரர் அக்கரதங் கெடுத்தார்' என்றார். மற்றையோராவார்:—தாதா, சக்கரன், அரியமா, மித்திரன், வருணன், அம்சுமான், இரணியன், திவச்சுவான், ஸவிதா, துவஷ்டா என்பவருயாம். தினகரன் - பகலைச்செய்வோன். அன்றி, தனது சேர்க்கையாற் பகலையும் நீக்கத்தால் இரவையுந்தந்து இங்ஙனம் நாளைச் செய்பவன் என்றுமாம். வீரபத்திரன் - தக்ஷமுனிவனது யாகத்தை யழிக்கும்பொருட்டாகச் சிவபிரான் சங்கற்பித்தமாத்தி

ரத்தில் அப்பெருமானது நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணினின்று தோன்றினவனும், அக்கடவுளின்படி வடிவானவனும், ஆயிரந்தலைகளை யுடையவனுமான பெருங்கோபமுடைய தேவன். கந்தக்கடவுள் தமது தந்தையின் செவியின் பிரணவப்பொருளை உபதேசித்ததை, 'குருதேசிகர்' என்றார். குரு - அஞ்ஞானவிருளைப் போக்குபவன். தேசிகர்-தலைவர். 'கரசக்தியின்ருகில்' என்றது, முருகக்கடவுளினது கோபத்தை அவனது வேலாயுதத்தின்மே லேற்றிக் கூறினர். இது, உடையவனது தன்மையை உடைமையின் மேலுரைக்கும் உபசார வழக்கு. இதனை, "படைக்கெலா மிறைவனகும் வேற்படை," என்றும், இதன் சிறப்பை, "ஆயதற் பின்னர் எவின் மூதண்டத் தைம்பெரும் பூதமுமடுவது, ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம், மாயிருந்திறலும் வரங்களுஞ்சிந்தி மன்னுயிருண்பது எப்படைக்கும், நாயகமாவது ஒருதனிச் சுடர்வேல் நல்கியே மதலை கைக்கொடுத்தான்" என்ற கந்தபுராணம் **படையெழுச்சீ படலத்துச்** செய்யுளால் நன்கு உணர்க. இங்ஙனங் கூறியுள்ளமையாலும். "சேயவன் விட்டிடு தனிவைவேல் செருமுய ருயகன் வரையோடு, மாயிடை செய்த புணரப்பெல்லா மகிலமு மழிதரு பொழுதின் கண், மாயையினுகிய வுலகெங்கு மலிதரு முயிர்களு மதிசூடுந், தூயவன் விழியழல் சுடுமாபோற் றுண்ணெனவட்டதுசுரர்போற்ற" என்று **கந்தபுராண முடையார்** வியப்பித்துக் கூறியவண்ணம் அமலன் கைவேல், கிரவுஞ்சகிரி அதிலுள்ள தாரகாசுரன் என்பவரது பலவகை மாயத் தோற்றங்களையெல்லாம் வேரோடு அழித்து ஒழியாவிட்டால், அத் தேவநகரும், தேவர்களும் பேர் சொல்லவும் இருக்கவேமாட்டார்களென்பதையும், அம்முருகப்பிரானது துஷ்டநிக்ரக சிஷ்ட**பரிபால**னத்தையும் விளக்கி யுரைக்கவே, 'சத்தியின் ருகிலத்தேவர் நண்ப தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே' என்றார். ஜகத்-ஜகம். ந-எதிர்மறைப் பொருள் தரும். கரவம் - வஞ்சனை; அது,

கரவென நின்றது. அரக்கர் என்பதன் முதற்குறை, ரக்கர் என்பதாம். தெய்வ ஆரணம் - தெய்வத்தன்மைபொருந்திய வேதம்; அதாவது, நன்மை தீமைகள் இதுவென்று விளங்க அறிவுறுத்தும் நூல். ()

செகம்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டுகொண்ட
செகம்புர வாதிங்ஙன் செய்வதென் னேமயல் செய்யவன்பு
செகம்புர வாச மெனத்துயில் வார்செப்ப பங்கபங்க
செகம்புர வாமுரல் செந்தூர வென்னத் தெளிதருமே.

பதப்பொருள்

செகம்-உலகத்திலும்
புர-ஊரிலுமுள்ள
வார்-ஒழுங்கான
கிளை எல்லாம்-சுற்றத்தாரெல்லோரும்
மருண்டு-மயங்கி
திரண்டுகொண்டு-கூடிக்கொண்டு
அசெ-ஆட்டினுடைய
சம்-தலையை
புரவாது-காப்பாற்றாமல்
இங்ஙன்-இவ்விடத்தில்
செய்வது என்னே - வெறியாடற் செய்ய நினைப்பதென்ன விபரீதம்?
மயல் - (கைக்கிளையாக மயங்கிய இம்மாதின்) விரகதாபம்
செய்ய-சிவந்த
வன்-வலிய
புசெகம்-ஆதிசேடனை
புரவாசம் என-ஆதியான இடமாய்க்கொண்டு
துயில்வார் - திருக்கண் வளர்கின்ற திருமால்
செப்பு-புகழ்கின்ற
அபங்க-பங்கமிலாதவனே!
பங்கசெ-தாமரைத்தடாகத்தில்
கம்பு-சங்கினங்கள்
உரவா-உரக்க
முரல்-சப்திக்கின்ற
செந்தூர - திருச்செந்திற் பதியோனே!
என்ன-என்று சொல்லில்
தெளிதரும் - (அக்ஷணமே)தீர்ந்துவிடுவது நிச்சயம்.

(க-ரை) பந்துக்களெல்லாரும் மயங்கி வீணாய் ஆட்டைப் பலியிடுவதால் இவள் மையல் தணியுமோ? (தணியாது). திருமால் புகழத்தக்க மாசற்றவனே! திருச்செந்தூரானே! என்று சொல்விற் றணிந்திடும் என்பதாம்.

(வி-ரை) மயல்-எழுவாய், தெளிந்திடும்-பயனிலை, ஏ-அசை. இச்செய்யுள் வெறிவிலக்கு என்னுந்துறை. இது, களவொழுக்கத்தால் தலைமகளைக் கூடிய தலைமகன் பின் அவளை வெளிப்படையாக மணஞ் செய்துகொள்ளும் பொருட்டுப் பொருள்தேடி வருதற்காக அவளைப் பிரிந்து சென்று வரவு குறித்த காலத்தில் வாராது நீட்டிக்க அந்நிலையில் பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளைச் செவிலித்தாய்மார் எதிர்ப்பட்டு அவளது வடிவு வேறுபாட்டை நோக்கி 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்ததன்றிப் பிறிதொன்றுமில்லை' என்றுகூற, அதுகேட்ட செவிலித்தாயார் உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேசமாடுவிக்க முயல, அதற்குத் தலைமகள் மிக வருந்தாநிற்க, அச்சமயத்தில் அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தை யறிந்ததோழி வேலனையும் செவிலியரையும் நோக்கிச் சிலகூறி வெறி விலக்குவதே இதனிலக்கணமாகும். ஆடு பலிகொடுத்தல் - இவளுடம்பினின்று உயிர் நீங்காதபடி செய்து மரணவேதனைப்படுகிற இவளைப் பிழைப்பிக்கமாட்டாது என்ற பொருளை, 'கிளையெல்லாம் மருண்டு திரண்டுகொண்ட செகம்புரவா திங்ஙன் செய்வதென்னோ' என்றாள். தான் கரையேறாதவன் பிறரைக் கரையேற்ற மாட்டாதவன்போல, தான் கழுத்தறுப்புண்டு இறக்கிற ஆடு இவளுயிரைப் பிழைப்பிக்கமாட்டாதென்க. இழக்கிற ஒருயிரோ மற்றோர் இறக்கிற உயிரைக் காத்தற்குத் துணையாகும் என்றாள். பரதேவதையின் ஆவேசத்தாலே வரும் நோய்க்குப் பரிகாரமாகிற இவ்விழிவான செய்கையானது, பரம்பொருள் ஈடுபாட்டினால் வந்த நோய்க்குப் பரிகாரமாகாதென்றவாறு. அற்ப பிராணியாகிய ஆட்டை இங்கே எடுத்துப் புகன்றது, யாக்கை நிலையாமையை விளக்குவதென்றுமாம். இந்நோய் தீர்த்

தற்குத் தலைவனது திருநாமம் தக்கமந்திரமென்க. அம்மந்திரமாகிய மருந்தை இவள் செவியின் வழியாகச் செலுத்துங்கள் என்றாள். முருகப்பெருமானாகிய தலைமகனால் நேர்ந்த நோய்க்கு அவனது நாமஸங்கீர்த்தன மொழிய வேறு பரிகாரமில்லையென்பாள், 'பங்கசெம் புரவாமூரல் செந்தூரவென்னத் தெளிதரும்' என்றனள். "நின்றாற் குடையாம் இருந்தாற் சிங்காதனமாம்......... திருமாற் கரவு" என்பது கொண்டே, 'செய்யவன்பு செகம்புரவாசமெனத் துயில்வார்' என்றதாம். புஜங்கம் என்னும் வடமொழியானது, தமிழில், புசெகம் என வந்தது. செப்பு-தெலுங்கிலிருந்து வந்த திசைச்சொல். துயில்வார் - யோகநித்ரை செய்வார். பங்கம்-அழிவு; அ-இன்மை. பங்கஜம்-தாமரை. பங்-சேறு, கம்-தண்ணீர், ஜம்-தோன்றுதல். செந்திற்பதி - திருச்செந்தூர் என்னுந் திருப்பதி. மையல் - கைக்கிளை; அதாவது, கை என்பது சிறுமை; கிளை - என்பது உறவு; ஆகலின், சிறுமையுற வென்பது கைக்கிளை என்று பெயராயிற்று. கைக்குடை, கைவாய்க்கால், கையரிவாள் என வழக்கினிடத்துஞ் சிறுமைபற்றி வருதல் காண்க. அஃதென்னையெனின், ஒருதலைக் காமமெனப்பட்டுத் தலைமகன் கூற்றாய் நிகழுமென்க. இதன் விரிவை **அகப்பொருள்** கொண்டறிக. பாட்டுக்கள்தோறும் விரிக்கவேண்டுவன பல விருப்பினும், அதற்குத் தக்க கருவிகள் கிடைப்பது அருமையானபடியாலும், வெளியிடுவோர் துணை இன்மையானும் விடுக்கப்பட்டன.

செந்தில்-திருச்செந்தி என்றும், திருச்செந்தூர் என்றும் வழங்கப்படும். திருச்சீரலைவாயென்பது, இதன் மறுபெயர். இதனை, ஜயந்திநகரமெனவுங் கூறுவர். இது, பாண்டியநாட்டிலே சமுத்திர தீரத்திலுள்ளது. இதற்கே நூல்களில், சந்தனசைலமெனவும், கந்தமாதனமெனவும், நம்பனூரலைவாய் எனவுங் கூறுவர். முருகக்கடவுளின் திருப்பதிகளுட் சிறந்த ஆறு படைவீடுகளில் ஒன்று; மற

றவை-திருப்பரங்குன்று, திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறுடல், பழமுதிர்சோலை என்பர். (24)

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமி ழாநித்தர் சேவித்து நின்றதென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்விதினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே.

பதப்பொருள்

தெளிதரு-ஆராயப்படுகின்ற
முத்தமிழ்-இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும்
வேதத்தில்-வேதத்திலும்
தெய்வப்பலகையின்கீழ் - தெய்வத் தன்மையான சங்கப்பலகையிலும்
தெளி-மாசற்ற
தரு-குற்றாலின்கீழும்
முத்து-முந்தியிருந் தருளுகின்ற
அமிழாநித்தர் - அழிவில்லாத நித்தியராகிய பரமசிவன்
சேவித்து நின்றதென் - பணிந்து நின்ற காரணமென்ன?
நாள்-நக்ஷத்திரம் (போல)
தெளிதரு-பிரகாசிக்கும்
முத்து-முத்தையும்
அமிழ்து-தேவாமுதத்தையும்
ஏய்-ஒத்த
நகை-பல்லையும்
வாசக-சொல்லையுமுடைய
செல்வி-மங்கையாகிய
தினை-தினையை [யார்
தெளி-கொழிக்கின்ற வள்ளிநாயகி
தரு முத்து - கொடுக்கு முத்தத்தினால்
அமிழ் - ஆநந்தத்தி லாழ்ந்தவராகிய
செவ்வேள்-முருகவேளானவர்
இருப்ப-எழுந்தருளி உபதேசிக்க
செவி குனித்து-செவியைத் தாழ்த்திக்கொண்டு.

(க-ரை) வள்ளிநாயகியின் முத்தத்தால் மகிழும் குமாரவேளிருந்து உபதேசிக்க, முத்தமிழிலும் வேதத்திலும் சங்கப்பலகையிலும் குற்றாலின்கீழு முதல்வராயிருக்கிற நித்தியரான பரமசிவன், பணிவோடு நின்று கேட்டதென்ன காரணம்? என்பதாம்.

(வி-ரை) நித்தர் - எழுவாய், சேவித்து நின்றதென் - பயனிலை, ஏ-அசை. 'தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்வி' என்றது முத்துக்களை யொத்து விளங்கும் வள்ளிநாயகி என்பதாம். செவ்வி-செல்வத்தைக் கொடுப்பவள்; இளமைபொருந்தியவள். வள்ளிக்கிழங்கின் கொடியை மிகுதியாக வுடைமையால் வள்ளிமலையென்று பெயர்கொண்ட மலையில் வள்ளிக்கொடிகள் நிறைந்துள்ள இடத்தில் பிறந்ததனால், இவளுக்கு வள்ளியென்று பெயராகும். இவள் சிவமுனிவனது அருளால் ஒரு மானினிடத்து மகளாகப் பிறந்தவள். குறவர் தலைவ னொருவனால் வளர்க்கப்பட்டவள். முத்தமிழ் வேதம் என்றது தேவாரத்தை. முத்தமிழ்-மூன்றாகிய தமிழ்; அதாவது, இயல் இசை நாடகம். "இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்" என்றபடி பரமசிவன் பாணினி முனிவர்க்கு வடமொழி இலக்கணங்களையும் அகத்தியமுனிவர்க்குத் தென்மொழி இலக்கணங்களையும் ஆதியில் உபதேசித்தருளினனாதல்பற்றி சிவபிரானை, 'முத்தமிழ் நித்தர்' என்றார். இதுபற்றியே தேவாரத்தில், "முத்தமிழ் விரகர் கண்டாய்', என்றும், ' ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்றுங் கூறினர்' "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற் கிணையாத், தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர் என்றும்,"விடையுகைத்தவன்பா ணினிக்கிலக் கணமேனாள், வடமொழிக் குரைத்தாங்கியன் மலயமாமுனிக்குத், திடமுறுத்தி யம்மொழிக் கெதிராக்கிய தென்சொல்" என்பதுவம் காண்க. த்ரவிடமென்னும் வடமொழி 'தமிழ்' எனச் சிதைந்தது. இனி, 'தமிழில்' என்னும் வினைப் பகுதி யடியாகப் பிறந்து வினைமுதற் பொருளுணர்த்தும் விகுதிகுன்றி, ழகரவொற்று எழுத்துப்பேறுபெற்றுத் தனக்கு இணையில்லாத பாஷையெனப் பொருள் தருவதென்பாரும், இனிமையென்னும் பொருளுணர்த்தும் தமிழ் என்னுஞ் சொல் எல்லாப் பாஷைகளினும்

இனியதாகிய இப்பாஷைக்கு ஆகுபெயரால் வழங்கிற்றென்பாரும், மற்றை பாஷைகளிலில்லாமல் தன்னிடத்தில் மாத்திரமே தனியான ழகரமென்னும் எழுத்தையுடையதென அன்மொழித்தொகைக் காரணக்குறி யென்பாரும் உளர். தெளிதரு முத்தமிழ் - செந்தமிழ். செந்தமிழ் - கொடுந்தமிழ் போலன்றிக்கே சுத்தமான தமிழ். தெய்வப்பலகை-சங்கப்பலகை; இப்பலகையினை சோமசுந்தரக் கடவுளினால் அளிக்கப்பட்டது. "ஞானசம்பந்தனுரைசெய், சங்கமலி செந்தமிழ்கள் பத்தும்" எனவும், "தண்டமிழ் நூற் புலவாணர்க் கோர் அம்மானே" எனவும், "உலகிய னிறுத்தும் பொருண் மர பொடுங்க, மாறனும் புலவறு மயங்குறுகாலை, முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கா, லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங், கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோற், பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென் றமிழ்க் கடவுள்" எனக் கல்லாடத்திலும், "சால்பாய மும்மைத்தமிழ் தங்கிய வங்கண்மூதூர், நூல்பா யிடத்தும்முள........செய்யுண்மிக் கேறுசங்கம்" என்று பெரியபுராணம், மூர்த்தி (ரு) வதிலும் காண்க. முதலிடை கடை என்னுஞ் சங்கங்கள் நடந்தவைக்கு இப்பலகையே துணைபுரிந்தது. நித்தர் - அழிவில்லாதவர். 'தெய்வப்பலகையின் கீழ் தெளிதரு முத்தமிழ்' என்றது, புலவர்களின் தாரதரத்தைத் தாரணி கொண்டாட விளக்கும் தன்மைக்காகவே பரமனாற் கொடுத்தருளியமையும், நற்றமி ழாராய்ச்சிக்கொரு நந்தா விளக்காயு மிருந்தமையால் அங்ஙனங் கூறியதுவுமாம். ஏய்-உவமாவாசகம். நகை-நகு-பகுதி. வாசகம் - சொல். செல்வி-செல்வன் என்பதன் பெண்பால்; இ-விகுதி. அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சர் தொழிலிலிருந்து வந்த மணிவாசகப்பெருமான் இவ்வுலக வின்பத்தை வெறுத்து, தமக்குத் தத்துவஞானம் உபதேசிக்கும் நல்லாசிரியரைத் தேடுவதிலேயே நாட்டமுற்றிருக்கையிலே, அரசன் கீழ்க்

கடல் துறையில் சென்று, குதிரைகள் வாங்கி வரும்படி அளவற்ற பொருள் கொடுத்து அனுப்ப, இவர் அங்ஙனமே பிரயாணமாய்ச் செல்லுகையில், சிவபிரான் இவர்க்கு அருள்செய்யும்பொருட்டு ஒரு ஞானாசிரியராகத் திருவுருக்கொண்டு தமது கணங்கள் மாணாக்க ராய்ச் சூழ்ந்திருக்கத் தாம் திருப்பெருந்துறை யென்னுந் தலத்தில் ஒரு குருந்தமரத்தின் கீழே வீற்றிருந்த வைபவத்தை, 'தெளிதரு மூத்தமிழா நித்தர்' என்றார். (25)

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே.

பதப்பொருள்

செவிக்கு-என் காதுக்கு
உன்-உனது
தவா-தவிராத
ரண-உரிமையை
நல்கு-கொடுக்கும்
இசை-கீர்த்தியை
பூட்ட-அணிய
வன்-வலிய
சிந்தை-(என்) இருதயமாகிய
அம்புசெ-தாமரையிலிருக்கும்
வி-பட்சியாகிய ஆன்மா
குன்ற-வருந்துகையில்
வாரணம் - நின்கோழிக்கொடியெ ழுந்தருளி
அஞ்சல் என்று-பயப்படாதே யென் று

ஆண்டது-அடிமைகொண்டது
நீண்ட கன்ம - பெரிதான முன் செய்வினையா லாகும்
செ-செனனத்துக்கு வித்தாகிய
இக்குன்று-இம்மலைபோன்ற
அவா-ஆசையை
ரண-அமர்புரியும்
வேலாயுதம்- அயிலானது
செற்றது-கொன்றுவிட்டது
உற்றன-என் சென்னிமேலே வீற் றிருந்தன
கட்செவி-பாம்புபோன்ற
குன்ற - திருச்செங்கோட்டு மலை யையுடைய கந்தசுவாமியே!
வாரண-தெய்வயானை [டைய
வள்ளி - வள்ளியாகிய நாயகிமாரு

பொன் தாள்-பொன்னடிகள்	சம்பாதிக்க வேண்டியது வே
மற்று என் தேடுவது - இனிநான்	றென்ன விருக்கின்றது?

(க-ரை) நாகமலையில் வாழுங் கந்தசுவாமியே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக்கொடி என் ஆத்துமாவை அபயங்கொடுத்து ஆண்டுகொண்டது. உன் வேலாயுதம் பிறப்புக்கிடமான பேராசையை யொழித்துவிட்டது. உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது; இனி யான் தேடவேண்டியதென்ன விருக்கின்றது? என்பதாம்.

(வி-ரை) யான்-தோன்ரு எழுவாய், தேடுவதென் - பயனில்லை, ஏ-அசை. நான் இடைவிடாது முருகப்பெருமானது திருவடிகளைத் தியானஞ்செய்து கருமமனைத்துந் தொலையுமாறு அவனது திருவடிக்கு இலக்காகிவிட்டேனுகையால், இனி எனக்கு வேண்டுவதொன்றின்றெனச் சொல்ல விரும்பியவர் அப்பெருமான் சம்பந்தப் பொருள்களின் மேலே வைத்துச் சாற்றினர். சரணமடைந்தவர்களது எவ்வகைக் கலக்கத்தையும் ஒழித்தற்கு ஏற்ற கருவியும் ஆற்றலுமுடையது நின்கொடி யென்பார், ‘வாரணம் அஞ்சலென் ருண்டது’ என்ருர். ஆசையானது நிலம் பொருள் போகமென்னும் மூன்றின் வழியாக வருவது. இம்மூன்றும் நிலையல்லனவாக விருந்தும் இவற்றில் வைக்குமாசைக்கு வரம்பில்லை யென்பார், ‘இ குன்று அவாரண வேலாயுதம்’ என்ருர். துஷ்டநிக்ரஹஞ் செய்யு மாற்றலுடைய வேலாயுதமானது, இவர் தமது ஆசையை அறுத்தொழித்த தென்பார் உடைமையை உடையான் மேலேற்றிப் புகழ்ந்ததாம். பிறப்பானது இத்துணையதென்று வரையறுத்துச் சொல்ல முடியாவண்ணம் மாறிமாறி வந்துகொண்டே இருப்பனவாகையால், அப்பிறவியாகிய கடலை இங்கு, ‘நீண்டகன்ம செ’ என்றதாம். தேவ சன்மம் நல்வினைப்பயனுல் பெரிதும் இன்பம் நுகருமாறு நேருவதாயினும் அத்தேவர்களும் நல்வினை முடிந்தவளவிலே அவ்வுடம்பு ஒழிய

மீளவும் இவ்வுலகத்திற்கு ஏற்ப வேறு பிறவி கொள்பவராதலால், 'கன்ம செ' என்றார். செ-செனமம்; அதாவது, பிறவி. கட்செவி-கண்ணையே தமக்குச் செவியாக வுடைமையாற் காரணப்பெயர். வி-ஆகாயம்; அதில் பறந்து செல்லக்கூடியது பறவை. பறவை முட்டையினின்று வெளிப்பட்டுச் செல்லுவதை யொப்பவே ஆன்மாவும் இச்சரீரமாகிய கூட்டிலிருந்து வெளிப்படுதல். வாரணம் என்னும் பலபொரு ளொருசொல்லானது, கோழியையும், யானையையும் காட்டி நின்றது. நான் உனது நாயகிமார்களது திருவடிகளை இடைவிடாமல் தியானித்து வந்தமையாலே அவர்களது மாறாக்கருணையைப் பெற்றுவிட்டேனாகையால், இனி எனக்கு எல்லாப் பாக்கியங்களும் இலேசாகவே அடைந்தேன்; அடையவேண்டுவ தொன்றுமே கிடையாதென்பார், 'மற்றென் றேடுவதே' என்றார். (26)

தேடிக் கொடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே.

பதப்பொருள்

தேடிக்கொள் - இப்பொழுதே சம்பாதித்துக் கொள்வாயாக
தும்பு-பாசத்தை
அடை-பொருந்திய
கை-கையையுடைய
கூற்று-இயமன்
அடாது-அழிக்காதபடி
உளம்-நெஞ்சமே!
சே-இடபம்
வில்-தனுசு
மை-மேஷம்
மீன்-மீனம்
தேள் - விருச்சிகமென்னுமிராசிகளையும்
திக்கொடும்-திக்குகளையும்
படை-சிருஷ்டித்த
கோமான்-பிரமதேவனை
சிறைபட-சிறைப்படுத்தி
வேறுள புத்தேள் - மற்றைத்தேவரது

தி-பத்தியில்
கொடும்பு-திருகுதலே
அடையா-சேராத
வெகு நாட்டன் - ஆயிரங்கண்ணை யுடைய இந்திரனது
சிறை-சிறையை
களை-ஒழித்தவரும்
உந்து-நீரிலும் (நெருப்பிலும்) சமணர் செலுத்திய
ஏடு-(ஏடு)களையும்
இக்கொடும்-அவர்கள் செய்த கொடுமைகளையும்
படு-தாழ்த்திவிட்ட
ஐ-சுவாமியாகிய
மின் கேள்வன்-தெய்வயானை நாயகனது
நல்துணை-நல்ல அநுக்கிரகத்தை
சிக்கெனவே-உறுதியாக.

(க-ரை) நெஞ்சமே! பாசதரனுகிய யமன் உன்னை நலிவு செய்யாதபடி பிரமாவைச் சிறைப்படுத்தி, இந்திரனைச் சிறைதவிர்த்துச் சமணரிட்ட ஏட்டையும் வாதையுஞ் செவித்த குமாரக்கடவுளது துணையை உறுதியாகச் சம்பாதித்துக்கொள் என்பதாம்.

(வி - ரை) நீ - தோன்றா எழுவாய், தேடிக்கொள் - பயனிலை, ஏ-அசை. இவ்வாசிரியர் சைவசமயப்பற்றே மிகுதியும் உள்ளவர் ஆதலால், தேவதாந்தரங்களிடத்தில் தமக்குள்ள உபேக்ஷையையும், பரதேவதையான முருகப்பிரானிடத்தில் தமக்குள்ள அபேக்ஷையையும் இங்கும் கூறி வெளியிட்டார். பிராணிகளை யழிப்பவனான யமனது கைவசத்தினின்று விடுவித்து, எனக்கு மரணவேதனையும் நரகதுன்பமும் இல்லாதபடி செய்தல் வேண்டுமென்பார், 'தேடிக் கொடும் படை கைக்கூற் றடாது' என்றார். கொடும் படை - எமன் கையிலுள்ள கயிற்று வடிவமான ஆயுதம். கூற்று - உடலையும் உயிரையும் வேறுபடுத்துங் கடவுள். படைகோமான் சிறைபடல்-பிறப்புத் துன்பமில்லாதபடி செய்தல் 'தாணிவா னுயிர்முழுவதுந் தருதி' என்றதையுட்கொண்டே இங்கும், 'சேவின்மை மீன்தேடிக் கொடும்படை கோமான்' என்றதாம். கோமான்-தலைவன்; கோ-ஆண்பாற் சிறப்புப் பெயர். மான்-விகுதி. அசுரர்களினலே தேவர்கள்பட்ட துன்பத்தைப் போக்கி யருளினமை குறித்தும், தேவர்கோமான், "ஆகையா லெம்

பிரானீ யருவுருவாகினின்ற, வேதநாயகனே யாகு மெமது மாதவத்தா லெங்கள், சோகமானவற்றை நீக்கிச் சூர்முத றடிந்தே யெம்மை, நாகமே விருத்துமாற்ரு னண்ணினே குமரனேபோல்" என்று தோத்திரம் புரிந்தமை கொண்டும், இங்கே, 'வேறுள புத்தேடிக் கொடும்படையா வெகுநாட்டன் சிறைகளையும்' என்ரூர். அகலி கையின் காரணமாக அமரர்கோன் கௌதமமுனிவன் சாபத்தால் ஆயிரங்கண் பெற்ருனுகையாலே 'வெகுநாட்டன்' என்ரூர். நாட் டம்-கண்; அம்-தொழிற்பெயர். இங்கே, மகரத்திற்கு நகரம் போலி யாகவந்து, 'நாட்டன்' என நின்றது. களை - முதனிலைதொழிற் பெயர்; களைதல் - தொலைத்தல், அது, இங்கே சிறையொழித்துப் பாதுகாத்தமையாம்.

கூன்பாண்டியன் கூன் நிமிர்ந்த பின்னர், சமணர்கள் தங்கள் உண்மைப்பொருளை ஒரு ஏட்டில் எழுதி தீயில் இட அது எரிந்து சாம்பலாய் விட்டதற்குக் காரணமாய் நின்றவரும், சைவசமயாசாரி யருள் முதலாயினவரும், முத்தமிழ் விரகருமாகிய பிள்ளையார், "போகமார்ந்த பூண்முலையாள்" என்னுந் தொடக்கத்தையுடைய திரு நள்ளாற்றுப் பதிகத்தை ஒரு ஏட்டில் எழுதி தீயில் இட்டகாலத்து அது வேகாவண்ணம் காத்தமையும், பின்பு சமணர்கள் தங்கள் உண்மைப்பொருளை ஒரு ஏட்டில் எழுதி வைகையில் இட, அவ்வேடு வெள்ளம் சென்ற வழியே சென்றதும், பிள்ளையார் "வாழ்க வந்த ணர்" என்னும் தொடக்கத்தையுடைய பதிகத்தை ஒரு ஏட்டில் எழுதி வைகையில்விட, அவ்வேடு வெள்ளத்தின் எதிர்சென்று திரு ஏரகம் என்னும் தலத்தருகில் கரை ஏறியதும், அம்முருகப்பிரான் பேருளே என்பார், 'உந்து ஏடு இக்கொடும்படை மின்கேள் வன் நற்றுணை' என்ரூர். மின்-மின்னலைப்போலும் மேனியை உவமையாகக் குறிப்பதாம். இங்கு, தெய்வயானையைச் சுட்டியது. இது நெஞ்சை முன்னிலையாக்கி யுரைத்தலாம். நீ ஜநநமரண

துக்கங்களைப் போக்கிக்கொண்டு, மீண்டும் ஒரு பிறப்பெடுக்க வேண்டாதபடி உனது கன்மங்களை யெல்லாந் தொலைத்து மீளா வுலகமாகிய முத்தியை உனக்குத் தரவேண்டுமென்று அம் முருகக்கடவுளைப் பிரார்த்தனை புரிவையாக வென்றதே இதின் தேர்ந்த கருத்தாம். (27)

சிக்குறத் தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லெனுர்சில ரன்பர்செந்தாள்
சிக்குறத் தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே.

பதப்பொருள்

சி-இகழ்தற்கிடமாகிய
குறு-குறைவுபடத்தக்க
அததத்தை-பொருளை
வழங்காது - நல்வழியிற் செலுத்தாமல்
இழந்து-பலவழியாயிழந்து
தியங்குவர்-வருந்துவார்கள்
தேசு-(தங்களுடைய) கீர்த்தியும்
இக்குற-மங்கிப்போகும்படியாய்
தத்து-பொங்கமுற்ற
ஐ-அழகிய
வடிவேல் எனுர் சிலர்-கூரிய வேலாயுத மென்று துதியாத சில பேர்கள்
அன்பர்-அவ்வேலைத்துதிக்கு மடியார்கள்
செந்தாள் - உனது செவ்விய திருவடியை
சிக்குற - அகலாது உறையக்கண்டும்,
தத்தை கடிந்து-கிளியோட்டி
ஏனல் காக்கும்-தினைப்புனங் காக்கும்
சிறுமி-சிறுமியாகிய
குறிஞ்சிக் குறத்து - மலைநிலத்துக் குறவரிடம்வளர்ந்த [னது
அ தையல் - அந்த வள்ளிநாயகியி
நகில்-கொங்கைச்சுவட்டால்
எப்போதும்-சதாகாலமும்
திகழ் புயனே - பிரகாசிக்கின்ற புயத்தையுடைய குமாரக்கடவுளே!

(க-ரை) வள்ளிநாயகியினது கொங்கைச்சுவடு திகழும் புயத்தோனே! அன்புற்றவர்கள் உனது திருவடியில் அகலாது உறை

தலைக் கண்டும் சிலர் உனது வேலாயுதத்தைத் துதியாமல் அநித்திய மான கைப்பொருளையுமிழந்து வறுமையால் வருந்துகின்றார்கள் என்பதாம்.

(வி-ரை) சிலர்-எழுவாய், தியங்குவர்-பயனிலை, ஏ-அசை.

"கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும்".

என **நாலடியாரிலும்,**

"வலம்புரி யீன்றமுத்தம் மண்மிசை யவர்கட்கல்லால்
வலம்புரி பயத்தையெய்தாது அனையரே மகளிர்"

எனச் **சிந்தாமணியிலும்,**

"பலவுறு நறுஞ்சாந்தம் படும்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவை தாமென்செயும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"

"சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"

"ஏழ்பக ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"

எனக் **கலித்தொகையிலும்** கூறியுள்ள பிரகாரம் பொருளானது தன்னை வெகுகாலம் வருந்திச் சம்பாதித்தவனுக்கு உதவாமல் அழிந்து போவதுவும், அல்லாமல் வேறொருவனிடம் சிக்கி அவனைச் சீர்பெற வைக்குந் தன்மையதாகையால், அச்செல்வத்தை நல்வழிப்படுத்துவது

வது அறிவாகையால், அவ்வறிவுடையவர்களே செல்வத்தைச் சம்பாதித்தலும், பாதுகாத்தலும், அதனாற் பயன்கொள்ளுதலும் உடையவராகுவார்களே அல்லாமல் மற்றை அறிவில்லாதவர்கள் செல்வராகக் காணப்பட்டாலும் நல்வழியிற் செலுத்தாமல் மனம்போனபடியே தீயமார்க்கத்தில் செல்வத்தைச் செலவுசெய்து, பின்னர் தியங்கி மயங்கி நிற்பார்கள் என்பதை, 'சிக்குறதத்தை வழங்கா திழந்து தியங்குவர்' என்றார்.

அன்றியும், இகழ்தற்கு இடமாகியும் எவ்விஷயத்திலும் குறைவுபடத் தக்கதாகிய பொருளை ஒருவன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தாலும், அதனைத் தன்னுயிர் உள்ளபோதே நல்லவழியிலே செலவு செய்யாமலும், தகுதியுடையவர்களுக்கும், வறியோருக்கும் கொடுத்து உபகாரஞ் செய்யாமல் இருந்தானாயின்; அப்பொருள் அவன் உயிருடன் இருக்கையிலே அவ்வுடையானைவிட்டு நீங்கியதாகவே கொள்ளுதல் வேண்டுமென்பதைப் போதிக்கவே, 'அத்தத்தை வழங்காது இழந்து தியங்குவர்' என்றார். இதனை,

"வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்"

என்ற **நீதிநெறி விளக்கத்திலும்,**

"உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாடா
உய்த்தீட்டுந் தேனீக் கரி"

"உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே

வழங்கான் பொருள் காத்திருப்பானேல் ஆஆ
இழந்தானென் றெண்ணப் படும்"

என்ற துணிபின்படி லோபிகள் செல்வம் நிலைபெறாமல் இப்போது குப்பைமேல் விளக்கெனப் பொலிந்து நாளடைவில் அழிந்து ஒழிந்து, அது பெற்றிருந்தவனுக்கும் கீர்த்தியைக் கொடாமல் இருந்தவிடந் தெரியாமல் மங்கிப் போகுமென்பார், 'அத்தத்தை இழந்து தியங்குவர் தேசிக்குறதத்து' என்றார். இங்ஙனம் நிலையற்ற பொருளை நிலையென நம்பித் தன் வாழ்நாளைக் கழிக்கும் லோபியர் களைக் கண்டு இந்நூலாசிரியர் அந்தோ! உமது அறிவு இருந்தவாறு என்னே என்று மனமிரங்கி, முன்பு முருகன் திருவடியின்கண்ணும் திருவேலின்கண்ணும் பக்தியைச் செலுத்தி, அவன் அருள்பெற்று சகல ஐசுவரியாதிகளுடன் வாழ்ந்த வாழ்க்கையைக் கண்டுங் கேட்டும் இருந்து இவ்வாறு பயன் கொடாத செல்வத்தைப் பெற்று இழப்ப தற்குத் துயரமடைதல் வியப்பன்றோ? நீங்களும் முருகன் கைவேலைப்போற்றி இருப்பீரானால், அவ்வேல் தேவர்களைக்காத்து இரக்ஷித்தமைபோல உம்மையும் யாதொருவிதமான குறைவும் இல் லாமல் இரக்ஷித்து அருள்புரியும் என்பதை, 'தத்துஜ வடிவேலெ ஞர் சிலர்' என்றார். 'அன்பர் செந்தாள் சிக்குற' என்றது, அம் முருகன் திருவடியினையே நம்பினின்றவர்களாகிய மேலோர்கள் அடைந்துள்ள பெரும் பாக்கியத்தைக் குறிப்பால் விளக்கியது. தத்தை-துன்பத்தை, கடிந்து-கோபித்து, எனக்கொண்டு, வள்ளி யம்மன் முருகனுடன் இருந்து, பக்தர்களின் வறுமை நோயைப் போக்கியருளுபவள் என்பதும் பொருள் வலிந்து கொள்ளுதல் பொருந்தும். இங்கே, முருகன் வள்ளியம்மையார் தினைக்கொல்லை யில் தன் அன்னையர் ஆணைகொண்டு, பரண்மீதிருந்து ஏனப்பயி ரைக் கிளிகள் கொள்ளைகொள்ளாவண்ணம் காத்துவந்த இளமை தங்கியவளை, தானேசென்று களவு செய்துவந்து, அவளது இள

நலம் பொருந்திய கொங்கையின் மோகத்திலே தோய்ந்து கிடந்தமையினைக் குறிக்கவே, 'ஏனல் காக்குஞ் சிறுமி குறிஞ்சிக் குறத்தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே' என்றார்.

தத்தை கடிதல் - தினைக்கொல்லையில் வள்ளியம்மையார் கிளிகளை யோட்டுதல். ஏனல்காக்கும் - ஏனைப் பயிர்களில் பறவைகள் வந்து விழுந்து நாசஞ்செய்யாமல் பாதுகாக்கும். 'சிறுமி' என்றமையால், இளமையும் யௌவனமும் பொலிந்து காண்பவரைக் கலங்கச்செய்யும் பேரழகுடைமை. குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும், வேடுவர்கள் எப்போதும் மலைப்பிரதேசத்திலேயே தமது நாட்களைக் கழித்து வருகின்றவ ராகையால் அவரது குடியிலே இருந்து வளர்ந்து வருகின்றமையும், சிறுமையுந்தோன்ற, 'குறிஞ்சிக் குறத்து அத்தையல்' என்றார். தையல் - அழகு; அதனையுடைய வள்ளியென்பது, காரணப்பெயர். முருகப்பிரானின் காதலுக்குகந்த வள்ளியம்மையே யென்பதை, 'எப்போதுந் திகழ்புயனே' என்றார். இதனால் வள்ளியம்மையாரின் சேர்க்கை பெற்றிருந்தமையாலே தான் முருகன் புஜபலம் சிறந்தோங்கிற்றென்னும் பொருள் விளங்குதல் காண்க. தத்தை-உவமையாகுபெயர்; இன்சொல்லில் உவமம், தத்துதல்-பாய்தல். தத்து-ததும்புதல். தத்து-அவமிருத்து. தத்தை-கிளிபோன்ற வள்ளியம்மை; இது, திரிசொல். (28)

திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவோ
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமென் னுவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே.

பதப்பொருள்

திகழும்-விளங்காநின்ற
அலங்கல்-மாலையையணிந்த
கழல்-தனது திருவடியை
பணிவார்-வணங்குவோர்

சொற்படி செய்ய - திருவாக்கின் படி நடக்க
ஓதி - தமிழ்வேதமென்னுந் தேவா -ரத்தை மொழிந்தருளினவரும்
கழுமலம் - தானவதாரஞ் செய்த சீகாழியையும்
கற்பகவூர்-தான் காத்தருளிய கற் பகத்தருவையுடைய அமராபதி யையும்
செருத்தணி - தானுறையுந் திருத் தணியையும்
செப்பி-துதிசெய்து
வெண் பூதி-திருவெண்ணீறுனது
கழும்-போக்கடிக்கும்
மலம்-மும்மலத்தையும்
கற்பு - பரம்பொருளிதேயென்று நம்புங் கற்புடைமையை
அருளும்-கொடுத்தருளும்
என்னு-என்று நினையாத
அமண்-சமணர்
சேனை-கூட்டங்களை
உபாதி-வருத்தமான
கழு-கழுவிலேற்றி
மலங்கரகு-கலக்கமுற் றழியும்படிக்கு
உரைத்தோன் அலது - வாதுமொழிந்த சம்பந்தப்பிள்ளையுமாகிய குமாரக்கடவுளையன்றி
தெய்வங்கள் இல்லை - பிரத்தியக்ஷமான தெய்வங்கள் வேறில்லை.

(க-ரை) தன்னடித் தொண்டர்க்கு நன்னெறியாகத் தேவாரத்தை மொழிந்தருளினவரும், திவ்விய ஸ்தலங்களைத் துதியாமலும் திருநீற்று மகத்துவத்தைக் கைக்கொள்ளாமலு மிருந்த சமணர்கள் கழுவேறும்படி வாதினுல் வென்றவருமாகிய சம்பந்தாவதாரங் கொண்ட குமாரக்கடவுளேயன்றி வேறு தெய்வமில்லை என்பதாம்.

(வி-ரை) தெய்வங்கள்-எழுவாய், இல்லை-பயனிலை, ஏ-அசை. வேதநெறி தழைத்து ஓங்கவும், சைவத்துறை நிலைபெற்று விளங்கவும், பூதபரம்பரை பொலியவும், தன் கழல் பணிவார் சொற்படி செய்யவும், தவம் பெருக்கும் சண்பையில் சிவம் பெருக்கவந் தவதாரம் செய்தவர் திருஞானசம்பந்தராகையால், 'இல்லை தெய்வங்கள்' என்றார். அந்தணர் மரபில் அவதரித்தமையால், 'ஓதி' என்றார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் முருகனது அம்சபூதமாகத் திருவவதாரஞ் செய்தமையால், இம்முருகப்பிரான் செயல்களெல்லாம் அவரிடத்தும் காணப்பட்டதாம். இதனை,

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டார் போலமுவர் குறிப்பயலாய்"

என்பதாலும்,

"தாயை யொடுவந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னையோ வென்றழைப்ப முன்னின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனந் திரளை யவன்வயி னருள"

என்பதாலும் அறிக. ஓதி-சொல்லி; அதாவது, நித்தியமான தமிழ் வேதத்தை உலகினர் உய்யும்வண்ணம் எடுத்து மொழிந்தருளின என்று பொருள். 'கழல்பணிவார் சொற்படி செய்ய 'வோதி' என்ப தால், தன் கழல் பணியும் மெய்ந்நெறிநின்ற சீடர்கள், தாம் சொல்லிய சைவமார்க்கத்தையே பின்பற்றி நடக்கும்படியாகத் தேவாரமாகிய தமிழ்வேதத்தை யெடுத்துப் பண்டையவிதி பிசகாமல் குருசீடக் கிரமத்தாலே பலரும் பாராயணஞ் செய்து உய்யும்படியாகவும் வெளி யிட்டருளினர். இதுவுமல்லாமல், பரசிவத்தினது சகளவடிவின் உணர்ச்சியானது பலவர் மனத்திலும் பதிந்து கிடக்கும் வண்ணமும் விரித்துரைத்தமையாம். 'கழல் பணிவார் சொற்படி செய்ய' என்ற தால், தனது திருவடியைப் பணிகின்றவர்கள், தாம் திருவாய்மலர்ந் தருளிய செந்நெறியே மெய்ந்நெறியாகக் கடைப்பிடித்தொழுக என்ற தாம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், தாம் சொல்லியருளிய நன்னெறியினைக் கடைப்பிடித்துத் துதித்துச் சிவசின்னம் தரித்து மும்மலமகற்றிச் சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் மிக்கு நிற்போரை அணைத்து உகந்தருளியும், இதற்கு மாறாக ஒழுகும் சமயவாதிகளைப் புரஸ்காரஞ் செய்தும் வந்தமையாலே, இவரை,

"காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாத
னேழிசை மொழியா டன்றிருவருள் பெற்றனை யென்பார்" எனவும்,

"மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனருடர வெய்தினை யென்பார்" எனவும்,

"புண்ணிய முதலே புனைமணி யரைநா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவரருள் பெற்றனை யென்பார்"

எனவும் போற்றினர். இவரைப்போலவே முருகப்பிரானும் தனது இளமைப்பருவத்தே உமையம்மையாரின் பயோதரமுண்டு பிரணவ மந்திரத்தினுட்பொருள் விண்டு விளங்காநின்ற கடப்பமாலையைக் காதலாய் அணிந்து, தன்னடி வணங்கிவரும் தொண்டரைத் தன்னாட்சியில் தாழ்ச்சியில்லாமல் நடந்துவரச் செய்து, வேதத்தின் உட்பொருளான பிரணவ மந்திரத்தைத் தன்னடியார் அறிந்து தெரிந்துணரத் திருவாய்மலர்ந்தும், தன்னடியாராக விருந்த தேவர்களின் இடையூற்றைப் போக்கிக் காத்தும், தான் விரும்பி விளையாடும் தணிகையம்பதியைப் புகழ்வோரைப் புனிதராக்கியும், தன் சின்னத்தைத் தகவுடன் அணியுந் தொண்டர்கள் குவித்த மலத்தைப் போக்கிப் பரிசுத்தராக்கித் தன்னையல்லால் வேறொரு தெய்வமில்லை யென்று கற்புக்கடன் பூண்டவரைப் புகழ்ந்து அருள்பாலித்தும், தன்னை வெறுத்துப் பிறிதொரு கடவுளைத் துதித்து வருவோரை எதிர்த்துத் தொலைத்து வருத்தித் தன் வேலுக்கு இரையாக்கிக்

கலக்கமுற் றழியும்படிச் செய்துவித்தும் வந்தபடியாலே, இருவரை யும் ஒருபடியாக வைத்துப் பேசியதாம்.

திருஞானசம்பந்த நாயனர், தனது பக்திக்கு வரம்பான கடவுளை அடியார்களானவர்கள் திருநீறு சாத்திக்கொண்டும், திருக்கோயில் சென்று ஆங்கெழுந்தருளியிருக்கும் கடவுளைத் தொழாத வம்பர் களையும், தான் பார்த்தா இவனென்றே எண்ணி அவனது பூஜையே நாம் செய்யவேண்டிய கடமையென்று எண்ணாமல் தாந்தோன்றி யாகத் திரிந்து கண்ட கண்டவரிடத்துங் கலந்து இன்பமனுபவித்துக் கற்புநிலை விடுத்து உழலும் காரிகைபோன்றவடியாரையும் வெறுத்துக் கடிந்து, அவரைப் பலவகையிலும் தொந்தரைபுரிந்து, அவரது அறியாமைக்கு இரங்கி, அவரது உய்விற்காகப் பற்பல நன்னெறி காட்டி வழிப்படுத்தி வருவதையே தமது வருகைத் தொழிலாகக் கொண்டிருந்தவரென்பதை இதில் வற்புறுத்திப் பேசுகின்றார்.

அலங்கல்-தொங்கி யசையும் மாலை. கழல் பணிவார்-இரண்டன் தொகை. பணிவார்-பணிவு ஆர் எனப் பிரித்து, வணக்கம் நிறைந் தவர். சொற்படி செய்ய-வேதவசனத்தின்படியே செய்ய. தேவாரம் என்பது சைவசமயாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் இம்மூவரும் சிவதோத்திரமாகப் பாடிய பாடல்களின் தொகுதி என்பர். இது, தே+ஆரம் எனப் பிரிந்து தேவனுக்குச் சாத்தப்படும் பூமாலைபோல்வது என்று பொருள்படும். அன்றி, தேவ+ஆரம்=தேவாரம் என விகாரப்பட்டதெனினுமமையும். இத்திருப்பதிக்குத் திருப்பிரமபுரம், வேணுபுரம், திருப்புகலி, வெங் குரு, திருத்தோணிபுரம், திருப்பூந்தாராய், திரிசிரபுரம், திருப் புறவம், திருச்சண்பை, சீகாழி, கொச்சை, திருக்கழுமலம் எனப் பன்னிரு திருநாமங்களுண்டு. இங்கே, கழுமலம் என்றது, தன்னிடம் வந்த பக்தர்களின் மனமலத்தைப் போக்குவதென்பதாம். இத் தலமே திருஞானசம்பந்தருக்கு ஞானமிருதத்தை அருள்செய்த

விடம். கற்பகவூர் என்றது, மந்தாரம், பாரிஜாதம் என்கிற பஞ்ச தருக்கள் நிறைந்தோளிரும் பொன்னுலகம் செருத்தணி - செருச் செய்து பின்பு தணிவதற்காக முருகப்பிரான் சென்று வீற்றிருக்கு மிடம்; அன்றி, அழகினாலே மேம்பட்டு நிற்குமிடம். செப்பி-செப்பு; இது திசைச்சொல். வெண்பூதி-பண்புத்தொகை; வெண்மையான ஐசுவரியம்; அதாவது, தன்னை அணிபவருக்குச் சாத்வீககுணத்தைக் கொடுப்பது. பூதி - செல்வம்; அன்றி, திருவெண்ணீறு - தன்னை அணிந்துகொள்ளுபவரின் மலத்தை நீறாக்கி யொழிப்பது. மலம்-மும்மலம்; ஆணவம் முதலிய மூன்று. கற்பு-கணவனைத் தெய்வ மென்று உணர்வதோர் மேற்கோள்; "குலமகட் கழகு கொழுநனைப் பேணுதல்" என்றபடி மகளிர்க்கு மற்றை யாபரணங்களினும் கற்பு நிலையே அழகு செய்வதாய்ச் சிறத்தலால், 'கற்பு அருளும்' என்றார். என்று-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சொல் - நூல்களுக் குக் காரணவாகுபெயர். சேனு என்னும் வடமொழித்திரிபு சேனை; அதாவது திரள் என்பதாம். உபாதி-தொந்தரை; வருத்தம். கழு-முள்ளிட்டமைத்த மரத்தூண். மலங்கற்கு-ஒருமை; இதில், 'கு' என்னும் நான்கனுருபு பகைமைப்பொரு ளுணர்த்திற்று. (29)

தெய்வ மணம்புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம்புண ராரிக்கு மருக செச்சையந்தார்
தெய்வ மணம்புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம்புணர் கந்தனென் னீருங்க டீதறவே.

பதப்பொருள்

தெய்வ-தேவர்களையும்
மண்-பூமியையும்
அம்பு-சலத்தையும்
உணர்-அறிவையும்
தீ-நெருப்பையும்
கால்-காற்றையும்
வெளி-ஆகாசத்தையும்
செய்த-படைத்த

தே-பிரமாவானவன்
வரைந்தது-பொறித்த லிபியை
எய்வ - (குமாரக்கடவுளினது நாம கீர்த்தனமானது) செயிக்குமாதலால்
மண்-மாசற்ற
அம்-அழகிய
புள்-கருடவாகனத்தையுடைய
நராரிக்கு - நரசிங்க அவதாரமெடுத்த திருமாற்கு
மருக-மருகோனே!
செச்சை அம் தார்-அழகியவெட்சி மாலையையணிந்த
தெய்வ-கடவுளே!
மணம் புணரும்-வாசனையை யணிந்த
குழலாளை - கூந்தலையுடைய (வள்ளி) நாயகியை
தினைப்புனத்தே - தினைப்புனத்திலே
தெய்வமணம்புணர்-காந்தருவ மணமாகப்புணர்ந்த
கந்தன்-குமாரக்கடவுளே!
என்னீர்-என்று தோத்திரம் பண்ணுங்கள்
உங்கள்-உங்களுடைய
தீது-வினை
அற-ஒழியும்படி.

(க - ரை) திருமால் மருகோனே! வெட்சிமாலையை யணிந்தோனே! வள்ளிநாயகியைத் தினைப்புனத்தில் மணந்த கந்தசுவாமியே! என்று துதித்தால் அது பஞ்சபூதமுதலானவற்றைப் படைத்த பிரமாவின் விதியையு நீக்குமாதலால் உங்கள் தீவினை யறும் பொருட்டு அப்படித் துதியுங்கள் என்பதாம்.

(வி-ரை) நீர்-தோன்று எழுவாய், என்னீர்-பயனிலை, ஏ-அசை. தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், ஐம்பெரும் பூதங்களாலும், ஆயுதங்களாலும் தனக்கு மரணமில்லாதபடி அளவற்ற வரங்களைப் பெற்றுத் தேவர் முதலிய யாவர்க்குங் கொடுமையியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச் செய்தவனும் இரணியாக்கனது உடன்பிறந்தவனுமான இரணியன், தன் புத்திரனும் மகாவிஷ்ணு பக்தனுமான பிரகலாதாழ்வான் தன் பெயர் சொல்லிக் கல்வி கற்காமல் நாராயணநாமஞ் சொல்லிவரவே, அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயஞ் செய்தும் அவன் பகவான் அரு

னால் இறந்திலனாக, இரணியன்மகனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன்? காட்டாய்' என்ன, அப்பிள்ளை

"சாணினுமுள னோர்தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணினுமுளன் மாமேருக் குன்றினுமுளன் இந்நின்ற
தூணினுமுளன் நீசொன்ன சொல்லினுமுளன் இத்தன்மை
காணுதி விரைவின்"

என்று சொல்ல, உடனே இரணியன் நன்றென்று சினந்து 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரிலிருந்ததொரு தூணைப் புடைக்க, அதனினின்று பகவான், அப்பொழுதே, மனிதரூபமுஞ் சிங்கவடிவமுங்கலந்த நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றித் திருக்கைந் நகங்களால் அவன் மார்பைப்பிளந்து அழித்திட்ட திருமாலின், மருமகனே என்பார், 'மண் அம் நராரிக்கு மருக' என்றார்.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
யாவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே"

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியுள்ளபடி இங்கே முருகப்பிரான் திருநாமத்தின் மகிமையானது படைத்தற்கடவுளின் விதியினையும் அழித்தொழித்தற் குறியது என்பதை, 'தெய்வமணம் புணர்தீகால் வெளிசெய்த தேவரைந்த தெய்வ' என்றார். தெய்வ-தெய்வத்தன்மை யுடையவர்களாகிய தேவர்கள். மண் - இடவாகு பெயராக மக்களைக் குறித்தது. அம்பு-அப் என்னும் வடமொழித் திரிபு. உணர்-அறிவு; அதாவது, அறியவேண்டுவன |வெல்லாம் அறியும் அறிவு. நர + அரி = நராரி; வடமொழி தீர்க்கசந்தி. நர-மனிதத்தன்மை; அரி-சிங்கத்தன்மை. முருகப்பிரானுக்குச் செச்சை மாலையையே நூல்கள் கூறுவதால், இங்கும் அதனையே அடையாள மாலையாகச் சொல்லினர். திருமுருகாற்றுப்படையில், "செச்சைக்

கண்ணியன்'' என்று சொல்லியதைக் காண்க. 'தெய்வமணம் புணரும் குழலாள்' என்றது, எக்காலத்தும் ஒரு தன்மைத்தாய் விளங்குதலாகிய தெய்விகமமைந்த திருமணம் வீசிக்கொண்டிருக்கும் கூந்தலையுடையவள்; அதாவது, துர்நாற்றம் வீசாமல் இயற்கைமணந் தரும் கூந்தலாம். இந்த வாதத்தை **நக்கீரன்** கூறிய வாதத்தாலறிக.

தெய்வமணம் - காந்தருவமணம்; அது எண்வகைய மணங்களிலொன்று; அதாவது - தலைமகனும் தலைமகளும் தம்மிற் சந்தித்து ஒத்த அன்பினராய்க் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே கூடுங்கூட்டம்; இதற்கு 'யாழோர் கூட்டம்' என்று தமிழிற் பெயர். இது நல்வினைப் பயனால் தனியே ஒருவரை யொருவர் சந்தித்துக் கூடுகிற கந்தர்வர்களின் வழக்கைத் தழுவியதாதலால் 'காந்தர்வம்' என்று பெயர் பெறும். கந்தர்வர் எப்பொழுதும் வீணை கைக்கொண்டு இசைபாடுந் தன்மையராதலால், 'யாழோர்' எனப் பெயர் பெற்றனர். ''துறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே'' என்ற **தொல்காப்பியமுங்** காண்க. இவ்விவாகம், பின்பு தந்தை தாயர் முதலிய பெரியோர்களால் அலங்கரிக்கப்படும்; காந்தர்வமென்னும் விவாகத்தாற் பல இராச விருடி கன்னிகைகள் மணஞ் செய்யப்பட்டனராகவும், அவர்கள் தந்தையரால் ஆமோதிக்கப் பட்டனராகவுங் கேள்விக்கு வருகிறார்கள்'' என்று வடமொழி **சாகுந்தள நாடகத்துள்** கூறியது இங்கு உணரத்தக்கது. தினைப்புனம்- தினைப்பயிர் விளையுங் கொல்லை; புனம்-மலையும், மலைசார்ந்த விடமுமாம். கந்தன்-காரணப்பெயர்; முன்னர் கூறியதறிக. !என்னீர்- என்று சொல்லமாட்டீர். முருகனது பெருமையினை வாயார வாழ்த்துவீராயின் நீங்கள் வெகுநாளாகத் திரட்டி வைத்துள்ள கன்மக்கடல் வற்றிப்போமென்பார், 'உங்கள் தீது அற' என்றார். **உங்கள்** என்றது, பக்தி செய்யாதமாக்கள். தீது-தீமையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர். அற-அறு பகுதி, அ-விகுதி. (80)

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே.

பதப்பொருள்

தீதா-பொல்லாங்காகிய
வசவு-இகழ்ச்சிச்சொல்லை
அனுபவிக்க - அனுபவித்தற் கிடமாய்
மண்ணிலும்-பூலோகத்திலும்
விண்ணிலும் - தேவலோகத்திலும் புகழையும் போகத்தையும் (பெற நினைத்து)
செந்தீ-சிவந்த அக்கினிபகவான்
தாவு-ஏறுகின்ற
அச-ஆட்டை
அநியாயம் செய்-சீவகாருணியமில்லாமல் வதைத்து யாகஞ் செய்கின்ற
வேதியரே-மறையோரே!
தியங்கா - இனி யப்படித் திகைக்காத
தீ-நல்லறிவை
தா-தந்தருள்வாயென்றும்
வசவ-இடபவாகனத்தையுடைய
நிமலர் பரமசிவனது
செல்வா-மைந்தனே!
சாக்கிரவசத்து - ஆன்மா சாக்கிரவவத்தையி லறிவோடிருக்கிற காலத்திலும்
அதீதா - துரியாதீத வவத்தையிற் கருவி கரணங்க ளொடுங்கி
வச-வசமாகுங்காலத்திலும்
அன்புற பாரெனும்-உனக்கெங்கள் இடத்தில் அன்புண்டாகிக் கடாக்ஷிக்க வேண்டுமென்றும் துதியுங்கள்
முத்தி-மோக்ஷமானது [படி.
சித்திக்க-உங்களுக்குக் கிடைக்கும்

(க-ரை) இம்மையிற் புகழையும், மறுமையிற் போகத்தையும் பெற நினைத்துப் பழிக்கஞ்சாமல் சீவனைக் கொன்று வேள்வி செய்கின்ற மறையோரே! முத்திவேண்டுமானல், பரமசிவனது மைந்தனே! சாக்கிர அவத்தையிலும் துரியாதீதத்திலும் எங்களுக்கு நல்லறிவுண்டாக அன்பு வைத்தருள் என்று துதியுங்கள் என்பதாம்.

(வி-ரை) நீங்கள்-தோன்ரு எழுவாய், துதியுங்கள் - பயனிலை, ஏ-அசை. (31)

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சைகுறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கெனுந்திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே.

பதப்பொருள்

சித்திக்க-அடியேனுக்குக்கிடைக்க அருளவேண்டும்
தத்துவ-தத்துவசொரூபியே!
ருத்திர பாலக - சிவனது மைந்தனே!
செச்சை-வெட்சிமாலை யணிந்த
குறிஞ்சி திக்க - குறிஞ்சி நிலத் திசைக்கு இறைவனே!
தத்து-அலைமோதுகின்ற
உவர்-உவர்ப்பையுடைய
அத்தியல்-சமுத்திரத்தின்கண்
மா-மாவுருக்கொண்ட சூரனை
வென்ற-செயித்த
சேவக-வீரனே!
இச்சித்து-விரும்பி
இக்கத்து-கரும்பும்
அத்துவர் - அந்தச் சிவந்த பவளமும்
வாய்-வாயும்
மொழி-மொழியுமாகும்
மாதர்க்கு-மடவார்க்கு
எனுந்திணை-என்று நலம்புனைந்துரைக்குங் காமநூலை
வாசித்து-ஒழியாமற்படித்து
இக்கத்தத்து-இதற்கினமான வெகுளியினால்
வருத்தப்படாது - துன்ப மடையாது
நல் சேதனம்-நல்லஞானவறிவு.

(க-ரை) தத்துவசொரூபியே! சிவனது புத்திரனே! குறிஞ்சி நிலத்திறைவனே! சமுத்திரத்தின்கண் சூரனை வதைத்தவனே! மாதரது சொல்லைக் கரும்பென்றும், வாயைப் பவளமென்றும், நலம் பாராட்டும் காமநூலின் வாஞ்சையையும், வெகுளியையும் விட்டு உன்னை யறியும் நல்லறிவை எனக்குக் கிருபை செய்யவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், சித்திக்க அருளவேண்டும்-பயனிலை, ஏ-அசை. (32)

சேதனந் தந்துறை யென்றுமை செப்புங் குருந்துறைகாற்
சேதனந் தந்துறை யல்லிமன் வாவிச்செந் தூர்கருத
சேதனந் தந்துறை யென்றறி யார்திற னீங்கிநெஞ்சே
சேதனந் தந்துறை மற்றுமுற் றாடித் திரிகைவிட்டே.

பதப்பொருள்

சே-அழகிய
தனம் தந்து – திருமுலைப்பாலூட்டி
உறு-பெரும்பேறுயுற்ற
ஐ என்று-ஐயனேயென்று
உமை செப்பும் - பார்வதியருமையாய் மொழியும்
குருந்து-பாலகனாகிய குமாரக்கடவுள்
உறை-அமர்ந்தருளிய
காற் சேது-சிவந்தகாலையுடைய
அன்னம்-அன்னங்களும்
தந்துறை-நூலோடுகூடிய
அல்லி-ஆம்பல்களும்
மன்-அகலாதிருக்கின்ற
வாவி-தடாகங்கள் சூழ்ந்த
செந்தூர்-திருச்செந்திற்பதியை
கருது-நீ சிந்தைசெய்
அசேதனம்-அறிவின்மையான
தம்-தங்கள் தங்கள்
துறை யென்று - சமயக்கோட்பாடென்று
அறியார் திறநீங்கி-தெளியாமலுழலும் பரசமய வாதிகளின் கூட்டத்தைநீங்கி
நெஞ்சே-மனதே!
சேது-சேதுமுதலிய
அனந்தம் துறைமற்றும் - மற்றும் அனேக கடல்நதிகளையும்
உற்று ஆடித் திரிகை விட்டு-போய்ப் போய்த் தானஞ்செய் தலைவதை விடுத்து.

(க-ரை) நெஞ்சமே! பரசமயவாதிகளோ டிணங்காமல், சேதுமுதலிய தீர்த்தங்கள் ஆடக் கருது மனதைவிட்டுப் பார்வதி திருமுலைப்பாலுண்ட குமாரக்கடவுள் வாசஞ்செய்கின்ற திருச்செந்தூரையே நாடுக என்பதாம்.

(வி - ரை) நீ - தோன்றாஎழுவாய், கருது - பயனிலை, ஏ - அசை. (33)

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வானந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுந் திருத்துளமே.

பதப்பொருள்

திரிகை இலாய்-மாறுபடாத நித்தியனே!
இரவு-இராத்திரியையும்
எல்-பகலையும்
ஆழி-கடலையும்
மண்-பூமியையும்
விண்-ஆகாசத்தையும்
தரு - மூவரின் முதல்வனுயிருந்து சிருஷ்டித்தவரும்
சிரபாத்திரி - பிரம கபாலத்தைப் பலிக்கலமாகக் கொண்டவரும்
கையிலாயி-கயிலாசத்தையுடையவரும்
ரவு-ஆரவாரத்தையுடைய
ஆனந்தநாடகி - ஆனந்தநடனஞ் செய்கின்ற பரமசிவனுக்கும்
சேர்-அவர்பா லிருக்கின்ற
இமகோத்திரி-இமயமலையின்
கையில் - இடத்திலுற்பவித்துவளர்ந்த
ஆயி-பார்வதிக்கும்
ரமிக்கும்-மகிழ்வை விளைக்கும்
மைந்தா-புதல்வனே!
செந்திலாய் - திருச்செந்திற் பதியோனே!
ஒருகால்-ஒருதரம்
திரிகையில்-குலாலன் சக்கரஞ் சுற்றிவருவதற்குள்
ஆயிரக்கோடி சுற்று ஓடும்—ஆயிரங் கோடிதரம் சுற்றி வருவதாகிய
திருத்துளம் - (என்னுடைய) மனதைத் திருத்தியருளவேண்டும்.

(க-ரை) நித்தியமானவனே! சராசரங்களைப் படைத்தும், பிரம கபாலமேந்தியும், ஆனந்தநடனஞ்செய்து கயிலாசத்தி லுறைகின்ற பரமசிவனுக்கும், இமயமலையின் குமாரியாகிய பார்வதிக்கு மைந்தனே! திருச்செந்திற் பதியோனே! என் உள்ளமானது குலாலன் சக்கரம் ஒருதரம் சுற்றுவதற்குள் அனேக கோடிதரம் சுற்றிவருகின்றது. அதை யடக்கி யருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், திருத்து-பயனிலை, ஏ-அசை. ()

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்டசிந்தை
திருத்துள வாரன்னை செந்தூரை யன்னள்செம் மேனியென்பு
திருத்துள வார்சடை யீசர்மைந் தாவினிச் செச்சைநல்கே.

பதப்பொருள்

திருத்துளவார்-திருத்துழாய் மாலையை யணிந்த விஷ்ணுவினது
இகல் - கரிய நிறத்தைப் பகைக்கின்ற
போதுடன்-மாலைக்காலத்தோடு
சேண்-ஆகாசத்தினின்றும்
மழை தூங்கும்-மழைபெய்கிறது
சங்கது-சங்கினங்களை
இருத்துள-உடையதா யிடமகன்ற
வாரிதி-சமுத்திரம்
கண் துயிலா - ஓயாமல் முயங்குகின்றது
செயல் மாண்ட சிந்தை-இந்த விரகதாபத்தினால் மெய்மறந்து கிடக்கின்ற என் மனதை
திருத்து-ஆற்றுதற்கு
உள-உரியவர்
ஆர்-யார்?
அன்னை-தாயும்
செந்தூரை அன்னள்-பகையாகிய செந்திற்பதியை யொத்திருக்கின்றாள்
செம்-சிவந்த
மேனி-திருமேனியில்
என்பு-எலும்பையும்
உதிருத்துள-உதிரத்தக்க திருநீற்றுப்பொடியையுமுடைய
வார்-நீண்ட
சடை-சடாபாரத்தையுமுடைய
ஈசர்-பரமசிவனது
மைந்தா-புதல்வனே!
இனி-இனிமேல் சகிக்கப்படாதாதலால்
செச்சை-உனது வெட்சிமாலையை
நல்கு-எனக்கு அளித்தருள வேண்டியது.

(க-ரை) திருமேனியில் நீறும் எலும்புமணிந்த நீண்ட சடாபாரத்தையுமுடைய பரமசிவனது மைந்தனே! கார்காலமும் மாலைப்போதும் ஒத்திருக்கின்றன. சமுத்திரமு முழங்குகின்றது. என்னைத்தேற்றுபவரியாவர்? அன்னையும் பகையாயிருக்கின்றனள். ஆதலால், இனிச் சகிக்க முடியாது. உனது வெட்சிமாலையைத் தந்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்ரு எழுவாய், நல்கு-பயனிலை, ஏ-அசை. (35)

செச்சைய வாவி கலயில்வல் வாயிடைச் சேடனிற்கச்
செச்சைய வாவி பருகுஞ் சிகாவல செங்கைவெந்தீ
செச்சைய வாவி விடுகெனுஞ் செல்வநின் றாளணுகச்
செச்சைய வாவி னுயிர்வாழ் வினியலஞ் சீர்ப்பினுமே.

பதப்பொருள்

செச்சைய-வெட்சிமாலையையுடை[யோனே!
வாவு-தாவுதலையும்
இகல்-பகைமையையும்
அயில்-கூர்மை பொருந்திய
வல்-வலிய
வாயிடை-வாயினிடத்தில்
சேடன்-பாம்பு
நிற்க-இருக்க
செ-சிவந்த
சைய-மலையின்கண்
ஆவி-அதனுயிரை
பருகும்-உண்ணுகின்ற
சிகாவல-மயில்வாகனனே!
செம்-சிவந்த
கை-கரத்தினிலேந்தி
வெம்-வெவ்விய
தீ-அனற்பொறியை
செச்சைய - ஆட்டு வாகனத்தையுடைய அக்கினிதேவனே!
வாவி-சரவணப்பொய்கையில்
விடுகெனும்-(பரமசிவன்) கொண்டுபோய் விடுகென அதிலுற்பவித்த
செல்வ-பாலகனே! [களை
நின்தாள் - உன்னுடைய திருவடி
அணுகச்செ-நாங்களடையக் கிரு
சை-இகழ்தற் கிடமான [பைசெய்
அவாவின்-ஐம்புலவாசையால்
உயிர்வாழ்வு-உயிரோடு வாழ்வதை
இனி அலம் - இனியுடையே மல்லேம்
சீர்ப்பினும்-செல்வமதிகரிக்கினும்.

(க-ரை) வெட்சிமாலையை யுடையவனே! பாம்பினுயிரை யுண்ணும் மயில் வாகனனே! பரமசிவனிடத்தில் அனற்பொறியாய்த் தோன்றி அக்கினிதேவனாற் சரவணப்பொய்கையில் விடப்பட்டு அதில் வளர்ந்த பாலகனே! இனி நாங்கள் மிகுந்த செல்வமடையினும் அவ்வாசையி லழுந்தி யுடலையோம்போம். நின் திருவடியிற் சேர்த்துக்கொள் என்பதாம்.

(வி·ரை) நீ - தோன்று எழுவாய், அணுகச்செ - பயனிலை, எ- அசை. (36)

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலேயோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவளேக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நாற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே.

பதப்பொருள்

சீர்க்கை-மனந் திருந்துதல்
வனப்பு-அழகாகும்
மலர்-புஷ்பங்களேயுடைய
வேங்கையானவன் - வேங்கை மரமாய் நின்றவனும்
செம் சிலேயோர்-அழகிய வில்லேயுடைய குறவர்கள்
சீர்-சந்தேகப்பட்ட தன்மையை
கை-கோபித்து
வன-வனத்தில்
புனித-பரிசுத்தமான
தவவேடன் - தவவேடங்கொண்டவனும்
தினை வளேக்கும்-தினைப்புனத்தைக் காக்கின்ற
சீர்க்கு-சிறந்த வள்ளிநாயகிக்கு
ஐவனப் புனமது-மலைநெல் விளைகின்ற புனத்தின்கண்
உரு காட்டிய சேய் - தனது நிசரூபத்தைக் காட்டிய குமரனும்
தமிழ் நூல் சீர்க்கு - இயற்றமிழ்நூலுக்குரிய முப்பது சீருக்கும்
ஐ-புலவனுகிய தேவனும்
வன-கங்கையையும்
புல்-அறுகையுமணிந்த
நிமிர்-நீண்ட
சடையோன் - சடாபாரத்தையுடைய பரமசிவனது
மகன்-மைந்தனுமாகிய முருகக்கடவுளினது
சிறு அடிக்கு-சிறிய திருவடித் தாமரைகளே யடைதற்கே.

(க-ரை) தினைப்புனத்தில் குறவர் முன் சந்தேகித்த சந்தேகம் குறவர் நீங்கும்படி வேங்கைமரமாய் நின்றவனும், தவவேடங்கொண்டு வள்ளிநாயகிக்குத் தன் நிசரூபத்தைக் காண்பித்தவனும், இயற்றமிழ்ப் புலமையையுடைய பரமசிவனது மைந்தனுமாகிய குமாரக்கடவுளினது திருவடியை யடைதலே யழகாகும் என்பதாம்.

(வி-ரை) சீர்க்கை-எழுவாய், வனப்பு-பயனிலே, ஏ-அசை. (37)

சிற்றம் பலத்தைய ரன்புநெய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க்குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ்செந் தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே.

பதப்பொருள்

சிற்றம்பலத்து-ஞானவெளியாகிய
ஐயர்-சுவாமியும்
அன்பு-பக்தியென்னும்
நெய்-நெய்யை வார்த்து
நூல்-ஆகமநூலென்னும்
திரி-திரியை
சிந்தை-இருதயமாகிய
இடும்-தீபமேற்றுகின்ற
சில்-தகழியிலிட்டு
தம்ப - ஆன்மாவுக்குப் பற்றுக்கோடாகிய
லத்தை வர - கிருபை யுண்டாகும் பொருட்டு
ஞானதீபம் - மெய்ஞ்ஞான தீபத்தை
இட்டார்க்கு - ஏற்றின அடியார்களுக்கு
பரிசில்-ஈவாக
தம்பலத்தை - தமது சாயுச்சியமென்னும் பலனை
அருளும்-கிருபை செய்கின்ற
செந்தூரர்-திருச்செந்தில் நாயகருமாகிய கந்தசுவாமியினது
பகை குலம் ஆம்-சத்ருருக்களாகிய அசுரகுலத்தை வேரறுத்த
சிற்று-சிறிய
அம்பல-பாணமல்ல
தைப்பது-என்னிருதயத்தில் தைத்து வருத்துவது
அவர்-அக்கடவுளது
அம்-அழகிய
தோளில்-புயத்திலணிந்த
இந்தீவரம் - நீலோற்பலமாகிய பாணமே.

(க-ரை) இருதயத்தைத் தகழியாக்கி, அன்பாகிய நெய்யை வார்த்து, ஆகமமாகிய திரியை யிட்டு, ஞானத்தை விளக்கா யேற்றின அடியார்களுக்குச் சிதாகாசமான சாயுச்சியபதவியை யருளுகின்ற திருச்செந்தில்நாயகர் சத்ருருசங்காரஞ் செய்த பாணமிருக்க, அவர் புயத்திலணிந்த நீலோற்பலமாலையே மன்மதன் பாணத்தி லொன்ருக என் ஆகத்தில் தைக்கின்றது என்பதாம்.

(வி-ரை) இந்தீவரம்-எழுவாய், தைப்பது-பயனிலை, ஏ-அசை. ()

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாநொந்த போதினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண்
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே.

பதப்பொருள்

தீ-தீய்ந்துபோன
வரகு-வரகென்னுந் தானியத்தில்
அந்து-வண்டுகளால்
அரி-அரிக்கப்பட்ட பதரையும்
தாம் பகிரார்-தாம் பங்கிட்டுக் கொடார்கள்
உறவான-உறவினராய்
செம்பொன் தீவர்-சிவந்த பொன் விளையுந் தீவிலிருப்பவரும்
அகம் தரியா-பாவத்தைத் தரித்து மனம் பொறுக்கக்கூடாமல்
நொந்தபோதினில்-வருந்துங் காலத்தில்
செச்சைய-வெட்சிமாலையையுடையோனே!
இந்தீவர - செங்கழுநீர் மாலையையுடையோனே!
கந்தரி - மலைக்குகையிலிருந்த வள்ளிநாயகியையும்
சிந்துரை - அயிராவதத்தினிடம்வளர்ந்த தெய்வயானை நாயகியையும்
பாக - இருபக்கத்திலு முடையவனே!
சிவகரண-சிவகரணம் புரிகின்ற
தீ-புத்தியை
வர-வரமாகக் கொடுக்கின்ற
கந்த-குமாரக்கடவுளே!
ரிபு-சத்துருக்களை
தீர்-சம்மாரஞ் செய்யத்தக்க
உனது அடி - உனதுதிருவடித்தாமரையே
சேமம் நட்பு-பொக்கிஷமும் உயிர்த்துணையுமாம்.

(க-ரை) வெட்சிமாலையையும், செங்கழுநீர்மாலையையு மணிகின்றவனே! வள்ளிதெய்வயானை பாகனே! சிவகரண அறிவினர்களுக்கு அனுக்கிரகஞ் செய்கின்றவனே! எனக்கு உறவென்பவர்கள் பொன் விளையுந் தீவிலிருப்பவராயினும், வறுமையால் வருந்துங்காலத்தில் அந்து அரித்துத் தீய்ந்த வரகையாவது தரவல்லரோ? ஆதலின், உனது திருவடியே பொக்கிஷமும் உறவுமாம் என்பதாம்.

(வி-ரை) அடி-எழுவாய், சேமநட்பு-பயனிலை, ஏ-அசை. (39)

சேமர விக்கம் படையாக வீசுப தேசமுன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கம் திரித்தாய் வருத்திய வன்றிறென்றல்
சேமர விக்கம் புயவாளி விண்டிரை தெண்டிரையே.

பதப்பொருள்

சேம-சிவந்த
ரவிக்கு-சூரியனுக்கு
அம்-சலத்தை [லக்கு மாயுதமாக
படையாக-அசுரரது தடையைவி
வீசு-இறைக்கின்ற
உபதேசம்-உபதேசத்தையும்
முன்னூல்-முப்புரிநூலையும்
சேமர் - காப்போராகிய வேதியர்
செலுத்தும்
அவிக்கு-அவிர்ப்பாகத்திற்கு
அம்-அழகிய
பலம்-நற்பயனை
தருவாய்-அளிப்போனே!
செருவாய்-போரினையுடைய
வெம் சூர்-கொடிய சூரனாகிய
சே-வயிரம் பொருந்திய
மர-மாமரத்தினால் [கினத்தை
விக்கம்-தேவர்கட்குண்டான விக்
திரித்தாய்-ஒழித்தவனே!
வருத்திய-என்னைத் துன்பப்படுத்
துகின்றன [றிற்பட்சியும்
அன்றில் - காமசின்னமாகிய அன்
தென்றல்-அவனது தேராகியதெ
ன்றலும் [செய்தலினாலிடபமும்
சே - கழுத்தின் மணியொலியைச்
மரவிக்கு-கருப்பு வில்லும்
அம்புயவாளி - தாமரைப்பூவாகிய
விண்டு-ஆர்ப்பரித்து [அம்பும்
இரை முழங்குகின்ற
தெள்திரை-தெளிந்த திரையையு
டைய கடலும் (ஆகிய இவ்வா
றும்).

(க-ரை) ஆதித்தனுக்கு அம்பாகச் சந்தியாவந்தனஞ் செய்யும் முந்நூலாளராகிய மறையவரது வேள்விக்குத் தக்க பலனளிப்போனே! மாமரமாய் நின்ற சூரனை வென்றவனே! இடபமணியோடு காமனது சின்னங்களாகிய அன்றிலும், தென்றலும், கரும்பும், தாமரைப்பூவும், கடலும் என்னை வருத்துகின்றன என்பதாம்.

(வி-ரை) அன்றில் முதலிய ஆறும்-எழுவாய், வருத்திய-பயனிலை. ஏ-அசை. (40)

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செறுதுசெற் றோய்களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே.

பதப்பொருள்

தெண்டன்-வணங்குகிறேன்	புரந்தர் - தொன்றுதொட்டு வருகின்ற
புரந்து-குறைவறக் காப்பாற்றி	அம்-அழகிய
அரவக்குன்றில் - திருச்செங்கோட்டு மலையில்	நல் கேள்-நற்சுற்றத்தாரும்
வாழ்-வாழாநின்ற	சிறுவர்-பிள்ளைகளும்
கந்த-குமாரக்கடவுளே!	அழச்செய்து-சூழ்ந்து முறையிடும்படி
சிந்துவில்-சமுத்திரத்தின்கண்	எம்மை-எம்முயிரைப் பிரித்து
உத்தெண்டன் - வலிமையுடைய சூரனை	தெள்-தெளிந்த
புரந்தரலோகம் - இந்திரலோகத்தை	தன் புரம்-தனது லோகத்திற் கொண்டுபோய்
செறுது-அழிக்காதபடி	தாவின்படி - தனது கட்டளையின்படி
செற்றோய்-வதைத்தவனே!	நூக்கிய தீ நரகு-தள்ளுதற்கிடமாகிய கொடிய நரகாக்கினையை.
களைவாய்-ஒழித்தருளவேண்டும்	
தெண்டன் - தெண்டாயுதத்தையுடைய காலன்	

(க-ரை) திருச்செங்கோட்டு மலைக்கந்தனே! தேவலோக மழிந்து போகாதபடி சூரனை வென்றோனே! உன்னை வணங்குகிறேன். இயமன் வந்து என் சுற்றத்தாரும் பிள்ளைகளும் சூழ்ந்தழும்படி யென்னைத் தன்னுடைய லோகத்திற் கொண்டுபோய் நரகாக்கினை செய்யாமற் காத்தருளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) தீ - தோன்று எழுவாய், களைவாய் - பயனிலை, ஏ-அசை. (41)

தீனந் தினத்து தரச்செல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந் தினத்து முதரா னலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனந் தினத்து ணிகளைசெங் கோட்டினன் செந்திலந்நீர்
தீனந் தினத்து தவத்துப் பிரசதஞ் செய்யவற்றே.

பதப்பொருள்

தீ-புத்தி
நந்து-கெட்ட
இனத்து-கூட்டத்தாருக்குள்
உதர-உதாரத்துவம் பேசும்
செல்வர்பால் - அயிசுவரியவான்களிடம்
சென்று-போய்
எனக்கென்பது-எனக்குதவி செய்கவென்றிரக்கும்படி செய்கின்றதாகிய
ஓர்-ஒப்பற்ற
தீனம்-வறுமை நோயானது
தினத்தும்-நாடோறும்
உதரானலம்-வயிற்றுப்பசியாக்கினி
சுட-தகிக்கும்போது
சேர்ந்து-(அதனுடன்) சேர்ந்து
சுடும்-தகிக்கின்றது
தீ-இக்கொடிதான
நம்-நமது
தினத் துனி-நித்திய துன்பத்தை
களை-நீக்குகின்ற
செங்கோட்டினன்-திருச்செங்கோட்டு முருகக்கடவுளது
செந்தில்-திருச்செந்திற்பதியின்
அம்-அழகிய
நீர்-சலமானது
தீன்-இனிய
நந்தின்-சங்கினிறம்போல
அத்து-சிவப்பை
உதவ-கொடுக்கின்ற
துப்பு - பவளம்போன்ற அதரத்தில்
இரசதம்-வெண்மை நிறத்தை
செய்பவற்றே-செய்ய வல்லதோ?

(க-ரை) திருச்செங்கோட்டு முருகக்கடவுளது திருச்செந்திற் பதியின் தீர்த்தம் நாம் நாடோறு மிரத்தலாலுண்டாகுந் துன்பத்தை யொழிக்க வல்லதாயினும் பவளம்போலும் சிவந்த விதழைச் சங்கு போலும் வெண்மையாக்க வல்லதோ? என்பதாம்.

(வி-ரை) நீர்-எழுவாய், தரவல்லதோ-பயனிலை, ஏ அசை. (42)

செய்யசெந் தாமரை யில்லாத மாதுடன் செந்தினைசூழ்
செய்யசெந் தாமரை மானார் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசெந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசெந் தாமரை சேர்வதென் றோவினை சேய்தொலைத்தே.

பதப்பொருள்

செய்ய-தினைவிளை நிலத்தையுடைய
செம்-ஒழுங்கான
தாமரை-சிறுகுடியென்னு நகரத்தாருக்கு
இல்லாது-தெரியாமல்
அ மாதுடன்-அப் புனங் காத்திருந்த வள்ளியம்மையை
செம்தினை சூழ் செய்-செந்தினைச் சொல்லைப் பயிரைச் சூழ்ந்து கொண்டிருந்த
அசெம்-காட்டாடும்
தா-தாவுகின்ற
மரை-கடம்பையும்
மான்-மானும்
ஆர்-நிறைந்த
சிலம்பில்-மலையின்கண்ணே
கலந்துறையும்செய்ய - காந்தருவமணம் புணர்ந்துறையுங் குமாரக்கடவுளே!
செம்-அழகிய
தாமர்-கொன்றை மாலையையுடைய பரமசிவன்
ஐ என்னும் குமார-ஐயனே யென்று சொல்லப்பட்ட குமாரக்கடவுளே!
சிறு-சிறிய
சதங்கை-சதங்கையணிந்த
செய்ய-அழகிய
செம் தாமரை-உனதுசிவந்ததிருவடித் தாமரையை
சேர்வது என்று-யானடையுங் காலமென்றைக்கு?
வினை-இருவினைகளையும்
சேய்-தூரத்தில்
தொலைத்து-ஒழித்துவிட்டே.

(க-ரை) மலையிற் குடியிருக்குங் குறவரறியாமல் தினைப்புனத்தில் வள்ளியம்மையை மணம் புணர்ந்தவனே! கொன்றைமாலையையுடைய பரமசிவனால் ஐயனேயென்று துதிக்கப்பட்ட குமாரக்கடவுளே! இருவினைப்பரப்பைக் கடந்து உன் திருவடியை யான் அடையுங்காலம் என்றைக்கு? என்பதாம்.

(வி-ரை) யான்-தோன்றா எழுவாய், என்று - பயனிலை, ஓ, ஏ-அசை. (43)

சேதாம் பலதுறை வேறும் பணிகங்கை செல்வ நந்தன்
சேதாம் பலதுறை யாதசிற் றாயன் றிருமருக
சேதாம் பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்த முத்திச்
சேதாம் பலதுறை யீதென் றெனக்குப தேசநல்கே.

பதப்பொருள்

சேதாம் - சேதுவென்னுந் தீர்த்த முதலாகிய
பலதுறை வேறும்-மற்றைப் பலதீர்த்தங்களும்
பணி-வழிபடத்தக்க
கங்கை-பகீரதியின்
செல்வ-மைந்தனே!
நந்தன் சே - நந்தகோபன் பாலகனாகிய
தாம் அலது - நவநீதக் கள்வராய் கட்டுண்ட கயிற்றாலன்றி
உறையாத-மற்றொன்றாலுங் கட்டுண்ணப்படாத
சிறு ஆயன்-சிற்றிடையனான கிருஷ்ணமூர்த்தியினது
திரு மருக-சிறந்த மருகோனே!
சேதாம்பலது-சிவந்தவாம்பற்பூநிறத்தைப்போலும்
உறை-உற்ற
செவ்வாய்-சிவந்த வாயையுடைய
குறத்தி திறத்த-வள்ளிநாயகி மணாளனே!
முத்தி சே-எனக்கு முத்திக்கு மிருக்கிற தூரத்தை
தாம்-கடப்பதாகிய
பல துறை ஈது என்று-நற்பலனைத் தரும்வழி யிதுவென்று
எனக்கு-அடியேனுக்கு
உபதேச நல்கு - உபதேச மருளவேண்டும்.

(க-ரை) கங்காதேவியின் மைந்தனே! திருமான் மருகோனே! வள்ளிநாயகனே! எவற்றினுந் தூரமாயிருக்கின்ற மோக்ஷத்தைச் சேரும் நல்வழி யிஃதென்று அடியேற்கு உபதேசித்தருளவேண்டும் என்பதாம்.

(வி - ரை) ஈ - தோன்றா எழுவாய், நல்கு - பயனிலை, ஏ- அசை. (44)

தேசம் புகல வயிலே யெனச்சிறை புக்கொருகந்
தேசம் புகல வணவாரி செற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச்செய்வதே.

பதப்பொருள்

தேசம்-எனக்கு உறைவிடமும்
புகல-அடைக்கல ஸ்தானமும்
அயிலே என-வேலாயுதமே யென்று சொல்லும்படி செய்து
சிறைபுக்கு-சிறையிற்பட்டு
ஒருகம்-ஐந்து தலையிலொன்றை
தேசம்பு-இழந்த பிரம்மா
சல-மரக்கலங்களையுடையதும்
வண-அழகையுடையதுமான
வாரி செற்றவன் - வருணனேவிய கடலை யுக்கிரபாண்டியனாகிவற்றச்செய்தோனாகிய
ஈசற்கு-பரமசிவனுக்கு
உபதேசம் புகல் - உபதேசஞ்செய்த
அதிக-மிகுதியான
வாசகன்-மொழியையுடைய குமாரக்கடவுளானவன்
சிறிது-சற்றும்
ஓர்கிலன்-அறிந்தானில்லன்
மா-மாம்பூவாகிய
தேசு-ஒளிதங்கிய
அம்பு-பாணமானது
கலகம் உதவி-கலகஞ்செய்து
மானை-மானினது விழியையுடைய இம்மங்கையுடன்
செரு செய்வது - போர்செய்கின்றதை.

(க-ரை) ஒருதலை யிழந்த பிரம்மா சிறைபட்டு, வேலாயுதமே! உனக்கடைக்கலம் என்று சொல்லச் செய்தவரும், சமுத்திரத்தை வற்றச்செய்த பரமசிவனுக்கு உபதேசித்தவருமாகிய முருகக்கடவுள், மன்மதனது மாம்பூ வாளி யிம்மங்கைமேற் றைத்துப் போர்செய்வதைச் சற்று மறிந்தாரில்லர் என்பதாம்.

(வி-ரை) அதிகவாசகன் - எழுவாய், ஓர்கிலன் - பயனிலை, ஏ- அசை. (45)

செருக்கும் பராக வயிராவ தத்தெய்வ யானைமணஞ்
செருக்கும் பராக தனந்தோய் கடம்ப செகமதநூல்
செருக்கும் பராக மநிரு பனந்தந் தெளிவியம்பு
செருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடம்பெறவே.

பதப்பொருள்

செரு-போரினையும்
கும்ப-மத்தகத்தையும்
ராக-கோபத்தையுமுடைய
அயிராவத - அயிராவதத்தினிடம் வளர்ந்த
தெய்வயானை-தெய்வயானை நாயகியினது
மணம்-வாசனையையும்
செருக்கும்-இறுமாப்பையும்
பராக-மலத்தாதுக்களையுமுடைய
தனம்-கொங்கையில்
தோய்-முழுகுகின்ற
கடம்ப-வெட்சிமாலையை யுடையவனே!
செக-உலகத்திலுள்ள
மதநூல்-சமய சாஸ்திரங்களின்
செருக்கும்-மயக்கத்தையும் [யும்
பர ஆகமம்-இதர வேதாகமங்களை
நிருபன்-நிருமித்த தேவனே!
அந்தம்-முடிவான பொருளை
தெளிவி-இஃதென் றெனக்கு விளக்கி யருளவேண்டும்
அம்பு செர் - தாமரையில் வாசஞ் செய்கின்ற பிரமாக்களெல்லாம்
உக்கு-இறந்து
உம்பர் ஆகம்விடும் - தேவர்களெல்லா மழிகின்ற
கடைநாளும்- இறுதிக்காலத்திலும்
திடம் பெற - அடியேன் நித்தியத்துவ மடையும்பொருட்டு.

(க-ரை) அயிராவதத்தினிடம் வளர்ந்த தெய்வயானையைத் தழுவுங் கடப்பமாலையை யுடையோனே! உலகமயக்காகிய பரசமய வழியில் மயங்காமலும், பிரம்மாதிதேவர்க ளழியுங்காலத்தில் அழியாமலும், நித்தியத்துவம் அடையும்பொருட்டு அவற்றின் முடிவான பொருளை யெனக்கு விளக்கியருள் என்பதாம்.

(வி-ரை) நீ - தோன்று எழுவாய், தெளிவி - பயனிலை, ஏ-அசை. (46)

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகுமச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலியு ரத்தும்பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருகுமும்ம
திடம்படு கத்துங் கநகங் குனித்தவன் சேயெனுமே.

பதப்பொருள்

திடம்-உறுதிநிலை
படு-அழிகின்ற
உகத்தும்-யுகாந்தத்திலும்
கெடீர் - நிலை கெடாது நித்தியரா யிருப்பீர்கள்
கன்ம-பூர்வ வினையால் [ய
லோக-உலகத்தின்கண் உண்டாகி
சிலுகும்-ஈஷணாத்திரயங்களையும்
அ சோதிடம் படுகத்தும்-அக் கல்விச் செருக்கைத் தருங் கணித நூலைப் பிதற்றுதலையும்
திரித்து-மாற்றுதல் செய்து
அம்பு-முன் இராமபாணத்தை
வாலி-வாலியினுடைய
உரத்தும்-மார்பிலும்
பத்து-பத்தென்கிற
திடம் படு-வலிமைபொருந்திய
கத்தும் - இராவணனுடைய தலைகளிலும்
தெறித்தான்-செலுத்திய ஸ்ரீராமருடைய
மருக-மருகோனே!
திருகு-மாறுபட்ட
மும்மதில்-முப்புரங்களும்
தம்படு-தோற்றிய விடத்திலேயே
உக-நீறாகிவிழ
துங்க-உயர்ந்த
நகம்-மகமேருவை
குனித்தவன் - வில்லாக வளைத்த பரமசிவனது
சேய் எனும்-மைந்தனாகிய குமாரக் கடவுளே என்று துதியுங்கள்.

(க-ரை) நமர்காள்! நீங்கள் ஈஷணாத்திரயங்களையும் சத்தமுஞ் சோதிடமுமாகிய நூல்களைப் பிதற்றுதலையு மொழித்து, இராவணனையும் வாலியையுஞ் சங்கரித்த திருமால் மருகோனே! மேருவில்வினால் திரிபுரதகனஞ்செய்த பரமசிவனது மைந்தனே! என்று துதிப்பீர்களானால் யுகாந்தகாலத்திலுமழியாமல் நித்தியராயிருப்பீர்கள்என்பதாம்.

(வி-ரை) நீங்கள்-தோன்றா எழுவாய், கெடீர்கள்-பயனிலை, ஏ-அசை. (47)

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

பதப்பொருள்

சேய-அழகினையுடைய
அன்பு-இச்சையோடு
உந்தி-கான்யாற்றின்
வன-காட்டில்
வாச-வாசஞ்செய்த
மாதுடன்-வள்ளிநாயகியுடன்
சேர்ந்த-கூடியிருந்த
செந்தில் - திருச்செந்தூரில் வாழா நின்ற
சேய-குமாரக்கடவுளே!
வன்பு-வலிமையில்
உந்து-உயர்ந்த
இகல்-மாறுபாட்டையுடைய
நிசாசர அந்தக - அசுரர்குலத்திற் கியமனே!
சேந்த-கந்தனே!
என்னில் - என்று துதிப்பீராகில்
சேயவன்-செவ்வாய்
புந்தி-புதன்
பனிப்பானு-சந்திரன்
வெள்ளி-சுக்கிரன்
பொன்-வியாழம்
செங்கதிரோன்-ஆதித்தன்
சேயவன் - அவ்வாதித்தன் மைந்தன் சனியாகிய இக் கிரகங்களின் வக்கிரோதயத்தால்
புந்தி தடுமாறவே தரும் - புத்தியைச் சலனப்படுத்துகின்ற
சேதம் இன்று-கேடு இல்லை.

(க-ரை) கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகிபேரில் அன்புகூர்ந்த செந்தில்நாயகனே! அசுரர்குலாந்தகனே! சேந்தனே! என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோதயத்தாலாகுந் தீமையில்லை என்பதாம்.

(வி - ரை) சேதம் - எழுவாய், இன்று - பயனிலை, ஏ- அசை. (48)

சேதக மொன்று மனாதியுந் தாதையுந் தேடரியார்
சேதக மொன்றுஞ் சதங்கையஞ் கிண்கிணி செச்சையந்தாள்
சேதக மொன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மொன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே.

பதப்பொருள்

சேதகம் ஒன்று-ஒரு தலை பின்னமான
மன்-நிலைபெற்ற
ஆதியும்-பிரம்மாவும்
தாதையும்-அப்பிரமாவின் தாதையாகிய மகாவிஷ்ணுவும்
தேட அரியார் - தேடுதற்கரிதான பரமசிவனது
சே-மைந்தனே!
தகமொன்றும்-தகுதியாய்முழங்குகின்ற
சதங்கை-சதங்கையையும்
அம்-அழகிய
கிண்கிணி-கிண்கிணியையும்
செச்சை - வெட்சி மாலையையுமுடைய
அம்-சிரேஷ்டமாகிய
தாள்-திருவடித்தாமரையில்
சேது-சிவந்த
அகம்-என் இருதயமானது
ஒன்றும் வகை-கூடும்வண்ணம்
பணியாய் - அருள் செய்யவேண்டும்
இனி-இனிமேல்
தீய-கொடிய
வினை-இருவினையாகிய
சேதகம்-சேற்றினுள்ளே
ஒன்றும் அறியாது-ஒருநெறியுமறியாமல்
உழல்-கிடந்துழலுகின்ற
உயிர்-ஆவியின் வாழ்க்கை
சித்திரம்-பொய்யாயிருக்கின்றது.

(க-ரை) நான்முகனுந் திருமாலு மறியவொண்ணாத பரமசிவனது மைந்தனே! இருவினைச்சேற்றில் அழுந்தி வருந்தும் என்னுயிர் வாழ்க்கை நித்தியமல்லவாதலால் உன் திருவடியை என்மனம் பற்றும் வகையருள் என்பதாம்.

(வி - ரை) நீ - தோன்றா எழுவாய், பணியாய் - பயனிலை, ஏ-அசை. (49)

சித்திர மிக்கன வில்வாழ் வெனத்தெளி யுந்தவவா
சித்திர மிக்க னெறிக்கழிந் தேற்கினிச் செச்சைநல்வி
சித்திர மிக்க தனக்குறத் தோகை திறத்தமுத்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிகையறவே.

பதப்பொருள்

சித்திரம்-பொய்யாகிய
இக்கனவு-இப்போது காணுங் கனுப்போலாகும்
இல்வாழ்வு - பாசபந்தங்களாற் சிக்கிய மனைவாழ்க்கையானது
எனத் தெளியும் - என்னு நிச்சயத்தைக்கொடுக்கின்ற
தவவாசி-தபோபலத்தின்
திரம்-உறுதியை நாடாமல்
இக்கன்-கருப்புவில்லையுடையமன்மதனது
நெறிக்கு-காமநூல் வழியில்
அழிந்தேற்கு-கெட்ட எனக்கு
இனி-இனிமேலாவது
செச்சை-வெட்சிமாலையைப் புனையும்
நல்-திவ்வியமான
விசித்திர-அழகனே!
மிக்க-பெருத்த
தன-கொங்கையையுடைய
குறத்தோகை திறத்த-குறவர் வளர்த்த வள்ளிநாயகனே!
முத்தி சித்தி - மோட்சப் பேறுனது
ரமிக்க-குறைதீர்ந்து திருப்தியாகும்படி
அருளாய் - நீ கிருபை செய்யவேண்டும்
பிறவி சிகை-எனது சனன மரண பந்தங்கள்
அற-அறும்பொருட்டு.

(க-ரை) வெட்சிமாலையோனே! வள்ளிநாயகனே! ஆத்மாவுக்கு உறுதியான தவத்தை நாடாமல் சிற்றின்ப விஷயத்தி லாழ்ந்து பொய்யுங் கனவும்போன்ற மனைவாழ்க்கையி லிருக்கின்ற எனக்கு இனியாகிலு முத்தி யெய்தும்பொருட்டும் சனனமரணம் அறும்பொருட்டும் அதை நாடக் கிருபை செய்யவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்று எழுவாய், அருளாய் பயனிலை, ஏ-அசை.

சிகைத்தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத்தோகைமாமயில்வானில்வைத்தோய்வெஞ்செருமகள்வா
சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே.

பதப்பொருள்

சிகை-கொண்டையையும்
தோகை-தூவியையுமுடைய
மா-பெரிய
மயில்வீரா-மயிலேறும் வீரனே!
சிலம்பும்-கிரவுஞ்ச கிரியையும்
சிலம்பு-முழங்குகின்ற
அம்புராசி-சமுத்திரத்தின்கண்
கை-ஒழுங்காக
தோகை-துவசத்தையுடைய
மா-மாமரமாய்நின்றசூரனையும்
மய்-இருளுக்கு
இல்-இடமாகிய மாயையையும்
வாங்கி-விலக்கி
பொருது-போர்செய்து வென்று
திசைமுகன்-நான்முகப்பிரமன்
வாசி - பிரணவப்பொருளறியாமல்
வாசித்த குற்றத்திற்கு
கைத்து-கோபித்து
ஓகை-மகிழ்ச்சியை
மாமய்-அழகுக்கு
இல்-இருப்பிடமாகிய
வானில்-தேவருலகத்தில்
வைத்தோய்-விளைத்தவனே! [ந்த
வெம் செரு-வெவ்விய போரிற்சிற
மகள் வாசி-பாண்டியனதுகுதிரை
முகத்தையுடைய பெண்ணுக்கு
கைத்தோ - அக்குதிரை முகத்தை
த்தீர்த்தவனே!
கைமா-அயிராவதம் வளர்த்த
மயில்-தெய்வயானையினது
செவ்வி-கலவிப் புதுமையினும்
நற்கீரர் சொல்-நற்கீரர் சொல்லிய
திருமுருகாற்றுப்படை [யிற்று.
தித்தித்தது-(உனக்கு)இனிமையா

(க - ரை) மயில்வீரனே! மாவாய் நின்ற சூரனையும் கிரவுஞ்ச கிரியையும் மாயையையும் அறச்செற்று அமராபதியை யீடேற்றின வனே! பிரமாவைக் கோபித்தவனே! தெய்வயானையின் கலவி யின்பத்தினும் நற்கீரர்துதித்த பாடல்,குதிரைமுகத்தையுடைய பெண்ணுக்கு அம்முகத்தை மாற்றின உனக்கு இனிமையாயிற்று என்பதாம்.

(வி-ரை) சொல்-எழுவாய், தித்தித்தது-பயனிலை, ஏ-அசை. (51)

தித்திக்குந் தொந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன்செவிபத்
தித்திக்குந் தொந்திக் கறமொழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தொந்திக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந் தொந்திப் பனவேது செய்வினைத் தீவிலங்கே.

பதப்பொருள்

தித்திக்கும் - தித்தியென்னுந் தாளத்துக்கும்
தொந்திக்கும் - தொந்தியென்னுந் தாளத்திற்கும் ஏற்க
நித்தம் புரியும் - நடனஞ்செய்கின்ற
சிவன்-பரமசிவனது
செவி பத்தித்திக்கு - இருசெவிகளின் புலனிடத்து
உந்து-நுழையும்படி
ஓம்-பிரணவப்பொருளை
திக்கு அற-மயக்க நீங்க
மொழி-உபதேசித்த
பாலக-பாலகனே!
தேன் அலைத்து-பலகார நைவேத்தியத்தால் தேனொழுகி
தித்திக்கும்-இனிப்புற்றிருக்கின்ற
தொந்திக்கு - வயிற்றையுடைய கணபதிக்கு
இளையாய்-இளையோனே!
விளை-கருப்பையி லுருவான
உயிர்க்கும்-சீவனுக்கும்
சிதை-அழிந்துபோகின்ற
தோல் துத்திக்கும்-தோற்பையாகிய உடம்புக்கும்
தொந்திப்பன ஏது - சம்பந்தப்பட்டுப் பிறப்புண்டாவதற்குக் காரணம்
செய்-யான் முன்னியற்றிய
வினை-இருவினையினது
தீ-கொடிய
விலங்கே-தளைதானோ.

(க-ரை) தித்தித் தொந்தி யென்று நடனஞ் செய்யும் பரமசிவனது திருச்செவியிற் பிரணவப்பொருளை மயக்கமற வுபதேசித்த பாலகனே! தொந்திவிநாயகருக்கு இளையோனே! உடலு முயிருஞ் சம்பந்தப்பட்டுப் பிறவி யுண்டாவதற்கு முன் செய்த வினைப்பாசந் தான் காரணமோ? நீ சொல் என்பதாம்.

(வி-ரை) நீ என்னுந் தோன்றா எழுவாய், சொல்லென்னும் பயனிலையைக் குறிப்பாகக் காட்டிநின்றது. (52)

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிரமுந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலுந்
தீவிலங் கங்கை யமன்றெட ராமற் றிதம்பெறவே.

பதப்பொருள்

தீ-கரத்தில் அக்கினியையும்
விலம்-புயத்தில் வில்வத்தையும்
கங்கை - சென்னியிற் கங்கையையும்
தரித்தார்-தரித்த பரமசிவனது
குமார-மைந்தனே!
திமிர-இருள் நிறமான
முந்நீர்-சமுத்திரமும்
தீ-வறண்டுபோகத்தக்க
வில்-வில்லின்
அங்கம்-வித்தையில்
கைவரு-வல்லவரான
மால் மருக-திருமால் மருகோனே!
தெரிவு அற்ற-அறிதற்கரிய
வான்-பெரிய
தீவில்-தீவுகளிலும்
அங்கங்கு - மற்றும் பலவிடங்களிலும்
ஐவர்-பஞ்சேந்திரியங்களால்
அவாவு-இச்சிக்கத்தக்க
இரைக்கு-உணவின்பொருட்டு
திரிந்துழலும்-அலைந்து திரிகின்ற
தீ-புத்தியினது
விலங்கம்-பலத்த தொடர்ச்சியை
கை-ஒழிக்கவேண்டும்
யமன் தொடராமல்-இயமன் தொடர்ந்து பற்ருமல்
திதம் பெற - உனது திருவடியில் இன்புற்று உறுதிப்படும் பொருட்டு.

(க-ரை) கங்கையும் வில்வமுஞ் சூடி அனலேந்திய பரமசிவனது மைந்தனே! கடலும் வறளும்படி விற்போர் செய்யுந் திருமால் மருகோனே! என்னை நமன் பிடித்துக்கொள்ளாமல் யான் உன் திருவடியை யுறுதியாகப் பற்றும்படி ஐம்புலன்களின் இச்சையை யொழித்தருள் என்பதாம்.

(வி - ரை) தீ - தோன்ரு எழுவாய், கை - பயனிலை, ஏ- அசை. (53)

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

பதப்பொருள்

திதத்தத்தத்தித்த-திதத்தத் தத்தித்த என்னும் தாளமானங்களை
திதி-திருநடனத்தாற் காக்கின்ற
தாதை-பரமசிவனும்
தாத-பிரமனும்
துத்தி-படப்பொறியினையுடைய
தத்தி-பாம்பினுடைய
தா-இடத்தையும், தித-நிலைபெற்று
தத்து-ததும்புகின்ற [கக்கொண்டு
அத்தி-சமுத்திரத்தையும் பாயலா
ததி-தயிரானது [ன்று
தித்தித்ததே - தித்திக்கின்ற தெ
து-உண்ட கண்ணனும் [ன்ற
துதித்து - துதிசெய்து வணங்குகி
இதத்து-பேரின்ப சொரூபியான
ஆதி-முதல்வனே!
தத்தத்து-தந்தத்தையுடைய [பட்ட
அத்தி-அயிராவதத்தால்வளர்க்கப்
தத்தை - கிளிபோன்ற தெய்வயா
தாத-தொண்டனே! [னைக்கு
திதே-தீமையே
துதை-நெருங்கிய [தும்
தாது - சப்ததாதுகளா னிறைந்த
அதத்து-மரணத்தோடும்
உதி-சனத்தோடும்
தத்து-பல தத்துகளோடும்
அத்து-இசைவுற்றதுமான
அத்தி-எலும்புகளை மூடிய
தித்தி-பையாகிய இவ்வுடல்
தீ-அக்கினியினால்
தீ-தகிக்கப்படுகின்ற
திதி-அந்நாளிலே
துதி-உன்னைத் துதிக்கும்
தீ-புத்தி
தொத்தது-உனக்கே யடிமையாக வேண்டும்.

(க-ரை) திதத்தத்தத்தித்தவென்னுந் தாளத்தால் நடிக்கும் பரமசிவனும், பிரமாவும், தயிரையுண்டு பாற்கடலையும் ஆதிசேடனையும் பாயலாகக் கொண்ட திருமாலும் வணங்குகின்ற முதல்வனே! தெய்வயானை தாசனே! சனனமரணத்திற்கிடமா யெலும்பு முதலிய தாதுகணிறைந்த பொல்லாத இவ்வுடற்பை தீயில் வேகுங்கால் உன்னைத் துதிக்கும் என்புத்தியை உனது அடியிணைக்கு ஆட்படுத்த வேண்டும் என்பதாம்.

(வி-ரை) தீ-எழுவாய், தொத்தது-பயனிலை, ஏ-அசை. (54)

தீதோ மரணந் தவிரும் பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனைமுற்றுந்
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யென்றுரை தென்னுறவே.

பதப்பொருள்

தீதோ-தீங்குமாத்திரமோ
மரணம்-இறப்பும்
தவிரும்-ஒழியும்
பிறப்பு-ஜனனமும்
அறும்-நீங்குமாதலால்
தீய-கொடிய தொழிலை
கல்-கற்கின்ற
புந்தீ-மனமே!
தோம்-குற்றத்திற்கு
அரண்-இடமாகிய
அம்பரமீது-சமுத்திரத்திலே
தானவர்-அசுரருடைய
சேனை முற்றும்-சேனை யனைத்தையும்
தீ-தகித்த
தோமர-கைவேலையுடையோனே!
ணந்தன-கிருபையாளனே!
பூசுரர்-வேதியர்கள்
திரண்டு-கூட்டமாகக் கூடி
ஏத்திய-வணங்கத்தக்க
முத்து-சரவணமுத்தையனே!
ஈது-இந்த
ஓமரண-மறையோர் செய் வேள்வியின் அவிர்ப்பாகத்திற்குரியவனே!
மலையாளி-குறிஞ்சி நிலத்தையாள்பவனே!
என்றுரை-என்று துதிசெய்
தென்உற-அழகுபெறும்படியாக.

(க-ரை) தீமையையே கருதுகின்ற புத்தியே! சமுத்திரத்தின்கண் அசுரர் கிளையற மாய்த்த வேலையுடையவனே! வேதியர்கள் தொழத்தக்க சரவணமுத்தானவனே! மறையோர் செய்யும் யாகத்தின் அவிர்ப்பாகத்திற்கு உரியவனே! குறிஞ்சிநிலத்திற்கு இறைவனை கந்தனே! என்று துதித்தால் உனது தீமைமாத்திரமல்ல, ஜனன மரணமும் அறும் என்பதாம்.

(வி-ரை) நீ - தோன்று எழுவாய், உரை - பயனிலை, ஏ-அசைசை. (55)

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் னீற்றாற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.

பதப்பொருள்

தென்னவனம்-தென்னஞ்சோலை
கனம்-மேகங்கள் [களையும்
சூழ்-கவிந்திராநின்ற
கா-பூஞ்சோலைகளையுமுடைய
திரி நக - திருத்தணி, திருப்பரங்குன்று, திருச்செங்கோடு என்னு மூன்று மலைகளையுமுடையோனே! [யுடைய
சூலகர - கையிற் சூலாயுதத்தை
தென்னவன் - தென்றிசைத் தலைவனாகிய யமனது
அங்கம் நந்த-உருவழியும்படி
பதம் நீட்டினன்-திருப்பாதத்தை நீட்டியுதைத்த பரமசிவனது
செல்வ-மைந்தனே!
முன்-முற்காலத்தில்
பின்-பின்னே கூனையுடைய
தென்னவன்-பாண்டியனது
அங்க-உடலை
நல் நீற்றால் - நன்மையைத்தரும் விபூதியினால் [போல
திருத்தியது என்ன-நிமிர்த்தினது
இன்னம்-இப்போதும்
தென்ன-வனப்பு வாய்ந்த
அனங்கன்-மன்மதனது
அம்-அழகிய
கை-கையிற்பிடித்த
சிலை-கருப்புவில்லினது
கூனையும்-வளைவையும்
தீர்த்து-நீக்கி
அருள்-மதன் என்மேற் பாணப்பிரயோகஞ் செய்யாதபடி உன் மாலையைத் தந்தருள வேண்டும்.

(க-ரை) திருத்தணிகை, திருப்பரங்குன்று, திருச்செங்கோடு என்னு மூன்று மலைகளிலு முறைபவனே! கூற்றை யுதைத்த பரமசிவனது மைந்தனே! முன் பாண்டியனது கூனை நிமிர்த்தினதுபோல என்னை வருத்த மன்மதன் கருப்புவில்லை வளைத்தலையுந் தீர்த்தருள வேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், தீர்த்தருள்-பயனிலை, ஏ-அசை.

தீத்தன் பரவை வெளிநீங்கிச் சேய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்குறவே
தீத்தன் பரவை தழைக்கவிண் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவையில் வேலத்த னேகுரு சீலத்தனே.

பதப்பொருள்

தீத்தன்-கிரணங்களையுடைய சூரியன்
பரவு-சஞ்சரிக்கின்ற
ஐ-அழகிய
வெளி-ஆகாசத்தையும்
நீங்கி-கடந்து
சேய்-பிள்ளையாகிய பிரமாவும்
தொழ-வணங்கும்படி
செல்-சென்று
பதவுத்தீத்தன் - பாதத்தை யூர்த்தாண்டவமாக எடுத்த திருமாலும்
பரவை-சமுத்திரமும்
முறையிட-அலறுகையில்
மா - மாவுருக்கொண்டுநின்ற சூரனால்
குறை-உண்டான குறைபாட்டையும்
தீங்கு-தீமையையும்
உறவே-முழுதும்
தீத்து-அற்றுப்போகும்படி யொழித்து
அன்பர்-அடியார்களுடைய
அவை-கூட்டம்
தழைக்க-அதிகரிக்கும்படி
விண்-அமராபதியை
கா என-காப்பாற்றென்றுசொல்லி
சென்னியின்மேல்-முடியின்மேல்
தீத்தன்-கங்கையைச் சூடிய பரமசிவன்
பரவு-துதித்த
ஐயில்-கூரிய
வேல்-வேலாயுதத்தை
அத்தனே-கரத்திலுடைய முருகக்கடவுளே!
குரு சீலத்தனே-குருவாகிப் பரமனுக்குப் பிரணவப்பொருளையுபதேசித்த நற்குணக்குன்றமே!

(க-ரை) திருநெடுமால் முறையிடுகின்றதைக் கண்டு சமுத்திரத்தின்கண் மாவுருக்கொண்டு நின்ற சூரனை வதைத்துப் பத்தர்குழாந் துன்பமற்று வாழும்படி அமராபதியைக் காப்பாற்று என்று பரமசிவன் சொல்லுங்கால் வணங்கி அப்படியே முடித்த வேலாயுதனே! அப்பரமசிவனுக்குக் குருவா யுபதேசித்தவனே! என்பதாம். (57)

சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கநி
சீலங் கனமுற்ற முத்தூர்செந் தூர சிகண்டியஞ்சு
சீலங் கனமுற்ற வேதனை மேவித் தியங்கினஞ்சீ
சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே.

பதப்பொருள்

சீலம்-தயாளத்திலும்
கன-மகத்துவத்திலும்
முற்று-மேற்பட்ட
அபங்கா-பங்கமில்லாதவனே!
கர-கோபத்தையுடைய
சலதீ-சமுத்திரத்தின்கண்
ரக்க-அசுரக்கூட்டமாகிய
நிசீ-இருளை
லங்கன-கடிந்தவனே!
முற்றம்-முன்றிலின்கண்
முத்து-முத்துகள்
ஊர்-இரைந்திருக்கின்ற
செந்தூர - திருச்செந்தூரில் வாழ்பவனே!
சிகண்டி-மயில்வாகனனே!
அம்-அழகிய
சுசீ-பரிசுத்தமானவனே!
லங்கனம் - பசியாகிய அக்கினியிலுல்
உற்ற-பொருந்திய
வேதனை-வருத்தத்தை
மேவி-அடைந்து
தியங்கினம்-மயங்குகின்றேம்
சீசீ-மிகவு மிகழ்ச்சியான
லங்கனம்-பங்கமாம்
முற்ற-முழுதுமாதலால்
இப்பிறப்பூடு - இப்படிப்பட்ட சனனத்திலே
இனி-இனிமேலும்
சேர்ப்பது-சேரப்பண்ணுவது
அன்று-நன்றல்ல.

(க - ரை) பங்கம் அற்றவனே! சமுத்திரத்தின்கண் அசுரர் கிளையை மாய்த்தவனே! திருச்செந்தூர் நாயகனே! மயில்வாகனனே! பரிசுத்தமானவனே! உதராக்கினிக்கே யிரைதேடி வருந்துகின்ற யிகழ்ச்சிக்கிடமான இச்சனனத்தை யின்னும் யான் அடையாதிருக்கும்படி யொழித்தனன்று என்பதாம்.

(வி-ரை) இக்கவி இரண்டும் சேர்ப்பதென்னும் ஒரே யெழுவாயையும், அன்று என்னும் ஒரே பயனிலையையுங் கொண்டு முடிந்தன. (58)

சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே.

பதப்பொருள்

சேர்-நெருங்கியிருக்கின்ற	சேர்ப்பது-சிலேத்துமமும்
பதும்-தாமரைகளும்	மால்-மயக்கமும்
ஆல-அசைகின்ற	அயவத்தை-பஞ்சாவஸ்தைகளும்
அம்-சலத்தின்கண்	மன்-நிலைபெற்ற
நீலோற்பல-செங்கழுநீர்மலர்கின்ற	ஆக்கை-இவ்வுடல்
கிரி-திருத்தணியில் வாழும்	சிதைவதன்முன் - அழிவதற்கு முன்னமே
தெய்வ-தெய்வீகமாகிய	சேர்ப்பது - என்னைச் சேர்த்தருள வேண்டும்
வள்ளி-வள்ளியம்மைக்கு	மால்-விஷ்ணுவும்
சேர்ப்ப-தலைவனே!	அய-பிரம்மாவும்
துமா-தும்மலினால்	வாசவன்-இந்திரனும்
லயம் உற்றார்-மரணமடைந்தார்	செப்பிய-புகழ்ந்தோதிய
என-என்று	செ-சிவந்த
பலர்-பலரும்	பதம்-திருவடித்தாமரையில்
செப்ப-சொல்ல	
வெப்பு-வெதும்புகின்ற	

(க-ரை) திருத்தணி மலையோனே! வள்ளிநாயகனே! வெப்பும் சிலேத்துமமும் மயக்கமுமாகிய அவஸ்தை நிறைந்த என்னுடல் அழிந்துவிடுவதன் முன்னும், தும்மினவுடனே இறந்தான் என்று பலர் சொல்வதன் முன்னும்; பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலினோர் புகழுநின் பாததாமரையி லென்னைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், சேர்ப்பது-பயனிலை, அத்து-சாரியை, ஏ-அசை. (59)

செப்பத் தமதிலே மாற்றூர் கொளுமுன்னஞ் செல்வர்க்கிடச்
செப்பத் தமதிலே யெங்ஙனுய் வார்தெய்வ வேழமுகன்
செப்பத் தமதிலே வாணுத னேக்கினர் சேணில்வெள்ளிச்
செப்பத் தமதிலே வென்றூர் குமாரவத் திக்கரசே.

பதப்பொருள்

செப்ப-நடுவுநிலைமையால்
தமது-தங்களுடைய
இலே - இல்வாழ்க்கைக்குரிய மனை
வியையும்
மாற்றூர்-பகைஞர்கள்
கொளுமுன்னம் - கைப்பற்றிக்
கொள்ளு முன்னமே
செல்வர்க்கு - ஐசுவரியவான்களுக்கு
இட-(வறியோர்க்கு) இட்டுண்ண
செப்பு-சிவந்த
அத்தம் அது-கையானது
இலே-இல்லையாயின்
எங்ஙன்-எப்படி
உய்வார்-பிழைப்பார்கள்?
தெய்வ-தெய்வீகமாகிய
வேழமுகன் - யானைமுக விநாயகரால்
செப்பு-புகழப்பட்ட
அத்தம-(அவரது) தம்பியே!
திலே-சிதம்பர நடேசரான
வாள்-ஒளிபொருந்திய
நுதல்நோக்கினர் - நெற்றிக்கண்ணையுடையவரும்
சேணில்-ஆகாசத்தில்
வெள்ளி-வெள்ளியும்
செப்பு-செம்பும்
அத்த-பொன்னுமான
மதிலே-மதிலையுடையதிரிபுரத்தை
வென்றூர்-செயித்தவருமாகிய பரமசிவனது
குமார-மைந்தனே!
அத்திக்கு-தெய்வயானை நாயகிக்கு
அரசே-தலைவனே!

(க-ரை) கணபதிக்கு இளையோனே! பாலலோசனரும் திரிபுரதகனரும் தில்லைநடேசருமான பரமசிவனது மைந்தனே! தெய்வயானை நாயகனே! செல்வமுடையார் அஃது நிலையாமையென்றறிந்தும் அதனல் நல்லறஞ் செய்யாதிருப்பாராயின் எப்படி கடைத்தேறுவார்கள் என்பதாம்

(வி-ரை) செல்வர் - தோன்றா எழுவாய், எங்ஙன் உய்வார்-பயனிலை, ஏ-அசை. (60)

திக்கர சத்தி தவன்சென்று முன்றி திருமரர்வந்
திக்கர சத்தி யிடத்தோ யென்செய்வ தெனத்தருநீ
திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்
திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே.

பதப்பொருள்

திக்கர்-திக்குப்பாலர்களும்
அச-ஆட்டை
திதவன் - நிலைபெற்றவாகனமாக வுடைய அக்கினியும்
சென்று முன்-முற்காலத்திற் பரம சிவனிடத்திற்போய்
திதி குமரர் - திதியின் பிள்ளைக ளாகிய அசுரர்கள் செய்த
வந்திக்கு-கொடுமைக்கு
அர-சங்கரனே!
சத்தி-உமையை [யோனே!
இடத்தோய்-இடதுபாகத்திலுடை
என் செய்வது- எப்படித் தப்பிப் பிழைப்போம்?
என-என்று முறையிடுகையில்
தரும்-அப் பரமசிவன் உமக்களித் தருளிய
நீதி-(அடியார் இடரை நீக்கும்) நெறியையுடைய
கர சத்தி - திருக்கரத்தின் வேலா யுதத்தை
விதிர்த்திலையேல் - நீ யெறிந்து அவ்வசுரர் கிளையை யழிக்கா விடில்
எவன் செய்குவர் - அத்தேவர்கள் என்ன செய்து பிழைப்பார்கள்?
அத்திக்கு-தெய்வயானைக்கு
அரசு-நாயகனே!
அத்தி-சமுத்திரத்தின்
அலைவாய்-அலைமோதுகின்றதிருச் செந்திற்பதியில்
வளர்-வளர்கின்ற
நித்திலக்கொழுந்தே - முத்தின் கொழுந்தொளியானவனே!

(க-ரை) தெய்வயானை நாயகனே! திருச்செந்திற்பதியில் வாழு முத்தொளியானவனே! முன் தேவர்கள் முறையிடக் கேட்டுப் பரம சிவனருளிய வேற்படையை நீர் செலுத்தாவிடில் அசுரர்கள் செய்த தீமையைக் கடந்து அவர்கள் பிழைப்பதெப்படி? என்பதாம்.

(வி-ரை) அவர்கள் - தோன்றா எழுவாய், எவன் செய்குவர்- பயனிலை, ஏ-அசை-

திலமுந் தயில முநிகர வெங்குந் திகழ்தருசெந்
திலமுந் தயில முருகா வெனுதத் திநகையினித்
திலமுந் தயிலமு தத்தா லுருகிய சித்தவென்னே
திலமுந் தயில கலவினை மேவித் தியங்குவதே.

பதப்பொருள்

திலமும்-எள்ளும்	இன்-இனிய
தயிலமும்-எண்ணெயும்	த்திலம்-முத்தானது
நிகர-ஒப்பாக	உந்து-செலுத்துகின்ற
எங்கும்-எவ்விடங்களிலும்	அயில்-நுகரப்பட்ட
திகழ்தரு-நிறைந்து விளங்குகின்ற	அமுதத்தால்-அதர அமுதத்தால்
செந்தில - திருச்செந்திற்பதியோனே!	உருகிய-குழைந்த
முந்து - ஆயுதவருக்கங்களின்முதன்மையான	சித்த - இருதயத்தையுடையோனே!
அயில - வேலாயுதத்தையுடையவனே!	என்-என்ன காரணம்?
முருகா-குமாரக்கடவுளே!	ஏதிலம்-(வழியடிமையாகிய யாம்) அயலோர்போல
எனுது-என்று துதித்து ஓலமிடாது	முந்தயில்-முற்சனனத்தினுல் வந்த
அத்தி-தெய்வயானை நாயகியினது	அகல-பெரிதான
நகை-தந்தமாகிய	வினை மேவி-தீவினையுற்று
	தியங்குவது-வருந்துகின்றது

(க-ரை) தெய்வயானை நாயகியின் அதரபானத்தா லுருகு மிருதயனே! எங்கும் எள்ளும் எண்ணெயும்போ னிறைந்து விளங்குகின்றவனே! முருகனே! வேலாயுதனே! செந்திற்பதியோனே! என்று துதியாமல் உனது வழியடிமையாகிய யாம் அயலோர்போலப் பழவினையான் மயங்குகின்றது என்ன? என்பதாம்.

(வி-ரை) தியங்குவது-எழுவாய், என்-பயனிலை, ஏ-அசை. (62)

தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்
தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்
தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவெற்புநி
தியங்காப் பொறியுண் டைபண்டு யப்போர் செய்தசேவகனே.

பதப்பொருள்

தியங்கா-மயங்காத	கா-இனியாவது காத்தருளும்
பொறியுண்டெனும் - ஐம்பொறி களையுடைய	பொறிஉண்டு-பிரமலிபியடைந்து
தனு-உடல்	அயன் கைப்படாது-பிரமதேவன் சிருஷ்டிக்குள் ஆகாமற் பிறப்பொழியும்படி
தீதலும்-வேகின்றதும்	திர-நிலைபெற்ற
மேதியை-எருமைக்கடாவை	வெற்பு-கிரவுஞ்சகிரியை
ஊர்தி-வாகனமாகவுடைய யமன்	நிதியம்-சங்கநிதியும் பதுமநிதியும்
அங்கா-(என்னைக்கொண்டுபோய்) வாயைத் திற என்றும்	கா-கற்பகத்தருவும்
பொறி - யான் செய்த பாவத்திற் காகத் தீயை	பொறியுண்டை-செல்வத்திரளையு முடைய பொன்னுலகானது
உண்-தின் என்றும்	பண்டு-பூர்வத்தில்
தவம் இலியே என்று-நற்றவத்தை ச்செய்யாத பாவியே என்றும்	உய-பிழைக்கும்படி
செப்பலும்-சொல்லுதலும்	போர் செய்த-போரினைச் செய்து வென்ற
சத்தியம்-உண்மையாதலால்	சேவகனே-வீரனே!

(க-ரை) முன் கிரவுஞ்சகிரியைப் பிளந்து தேவலோகத்தைக் காத்த வீரனே! ஐம்பொறிகளையுடைய வுடல் சாம்பலாவதும், செய்த பாவத்துக்குத் தக்கபடி தீப்பொறியை யூட்டும் யமதண்டனைக்கு நான் உள்ளாவதும் சத்தியம்; இனியாவது இவ்வுடற் சுமை கொள்ளாமற் பிறப்பு அறக் காப்பாற்றவேண்டும் என்பதாம்.

(வி-ரை) தீ-தோன்றா எழுவாய், கா-பயனிலை, ஏ-அசை. (63)

சேவக மன்ன மலர்க்கோமுன் னீசொலத் தெய்வவள்ளி
சேவக மன்ன வதனம் புயகிரி செற்றமுழுச்
சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்
சேவக மன்ன முனிக்கெங்ங னாணித் திகைப்புற்றதே.

பதப்பொருள்

சே-இடபவாகனத்தின்
அகம்-மேல்
மன்னு-நிலைபெற்றுவருகின்ற
அமலர்க்கு-பரமசிவனுக்கு
ஓம்-பிரணவப்பொருளை
முன்-பூர்வத்தில்
நீ சொல-நீ யுபதேசிக்க
தெய்வ-தெய்வீகமாகிய
வள்ளி-வள்ளிநாயகியினது
சே-சிவந்த
அகம் அன்ன - இருதய தாமரை போன்ற
வதன அம்புய-முகாரவிந்தனே!
கிரி-கிரவுஞ்சகிரியை
செற்ற-பிளந்த
முழு சேவக-ஒப்பற்ற வீரனே!
மன்ன-தலைவனே!
திருவாவினன்குடி செல்வ-சிறந்த பழனிப்பதிவாழுங் குமாரக்கடவுளே!
கல்விச் சேவகம் - வேதமோதுந் திறத்தையும்
அன்னம் - அன்னவாகனத்தையுமுடைய
முனி-பிரமா
எங்ஙன்-எவ்விதத்தினாலே
நாணி-வெட்கி
திகைப்புற்றது - அப்பிரணவப் பொருள் தெரியாமல் மயங்கினது?

(க-ரை) வள்ளிநாயகி யிருதயதாமரைபோன்ற வதனம்புயனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்த வீரனே! பழனிப்பதியானே! தலைவனே! பரமசிவனுக்கு உபதேசித்த பிரணவத்திற்கு வேதமோதுந் திறத்தையுடைய பிரமன் பொருள் தெரியாமல் நாணித் திகைப்புற்றிருந்ததெப்படி என்பதாம்.

(வி - ரை) திகைப்புற்றது - எழுவாய், எங்ஙன்-பயனிலை, கு-சாரியை. (64)

திகைப்படங் கப்புயந் தந்தரு ளானெனன் படிங்கணிய
திகைப்படங் கத்தமை யார்செந்தி லாரென்ப டென்னனுய
திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னிகண் ணீர்தரவி
திகைப்படங் கத்தமை யாதெமை யாட்கொளுஞ் சீகரமே.

பதப்பொருள்

திகைப்பள்-மயங்குகிருள் [படி
தங்க - தழுவி யுயிர்பெற்றிருக்கும்
புயம்-தனது புயத்தை
தந்து அருளான் - தந்து கிருபை செய்கின்ருனில்லை
என்பள்-என்கிருள்
திங்கள்-சந்திரனை [ஞ்செய்கிருள்
நியதி கைப்பள்-நித்ய முபாலம்பன
தம்-தமது [தலை
கத்து - இப்படி வருந்தி முறையிடு
அமையார்-க்ஷமித்து இரக்ஷிக்கின் ருரில்லை
செந்திலார்-செந்திற் குமரர்
என்பள்-என்கிருள்
தென்னன்-கூன்பாண்டியனது
உயதி-(சுர)வருத்தத்தின்
கைப்பு-வெப்பம்
அடங்க-தணியும்படி
புகல் - (தமிழ் வேதமாகிய தேவாரத்தை) மொழிந்தருளிய
சே என்பள்-சம்பந்தப் பிள்ளையே என்றுஞ் சொல்லுகிருள்
கன்னி - உனது உயிராகிய பெண்ணனவள்
கண்ணீர் தர - கண்ணீர் சோரும் படியாக (ஆதலால்)
விதி-பிரமனது [படுகின்ற
கைப்படு - கையினுற் சிருஷ்டிக்கப்
அங்கத்து-உடற்பைக்குள்
அமையாது - இவ்வான்மா அமைக் கப்பட்டுச் சனனமுருதபடி
எம்-எம்முடைய
ஐ-குலதெய்வமே!
ஆட்கொளும்-அடிமைகொண்டருளவேண்டும் [ளே!
சீகரமே - அழகிய குமாரக்கடவு

(க-ரை) எங்கள் குலதெய்வமான அழகனே! என்னுயிராகிய பெண்ணனவள் செந்திற்பதியான் யான் முறையிடுங் குறையைத் தணிக்கின்ருனில்லை; அவன் புயத்தைத் தழுவத் தரவுமில்லை என்றும், கூன்பாண்டியன் சுரம் தணித்தவனே என்றும் சொல்லுகிருள். சந்திரனையும் தினந்தோறும் வெறுத்து மயங்குகிருள்; இனி இப்படிப்பட்ட ஜனனமுற்று வருந்தாவண்ணம் ஆண்டுகொள்ள வேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்ரு எழுவாய், ஆட்கொளும்-பயனிலை, ஏ-அசை.

சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ
சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு
சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு
சீகர சிந்துர மால்வினைக் குன்றைச் சிகண்டிகொண்டே.

பதப்பொருள்

சீகரம்-அலைகளையுடைய
சிந்து-சமுத்திரத்தின்கண்
ரவுத்த-இராவுத்தனை
வெம்-கொடிய
சூர-சூரனை
செய-வென்றவனே!
புய-உனது திருப்புயத்தை
வசீகர - வசீகரித்தலில் வாஞ்சையுள்ள
சிந்துர-திலகத்தையுடைய
வல்லி-வள்ளிநாயகிக்குரிய
சிங்கார - அலங்காரத்தையுடையவனே!
சிவ சுத-பரமசிவனது மைந்தனே!
சுசீ-அக்கினியினது
கர-கையிலிருந்தவனே!
சிந்துர-வெள்ளையானையையும்
கந்தர-மேகத்தையும்
வாகன்-வாகனமாகக்கொண்ட இந்திரனது
சிறை-சிறையை
விடும்-களைந்த
சுசீகர-பரிசுத்தனே!
உர-வலிய
மால்-மயக்கத்தைத் தராநின்ற
வினை-இருவினையாகிய
குன்றை-கன்மலையை
சிகண்டிகொண்டு - மயில்வாகனரூடராயென்முன் எழுந்தருளி
சிந்து-சிதறவடி.

(க-ரை) சமுத்திரத்தின்கண் வலிய சூரனை வென்றவனே! அழகிய புயாசலனே! வள்ளிநாயகனே! பரமசிவன் மைந்தனே! அக்கினியின் கையிலிருந்தவனே! இந்திரனது சிறையைக் களைந்த பரிசுத்தனே! நீ மயிலேறிவந்து என் வினையாகிய குன்றைப் பொடிபடுத்த வேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ - தோன்றா எழுவாய், சிந்து - பயனிலை, ஏ- அசை. (66)

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே.

பதப்பொருள்

சிகண்டி-மயில்வாகனத்தை
தத்த-சதிபாய்ந்து செல்லும்படி
தமர-முழங்குகின்ற
வாரி-சமுத்திரத்தின்கண்
விட்டு-நடத்தி
அ-அந்த
திதி-திதியினுடைய [கூட்டங்களை
புத்ர ராசி-பிள்ளைகளாகிய அசுரக்
கண்டித சேதித்தவனே!
தத்த-தந்தத்தையுடைய
நக பூதர - பாம்புபோன்ற திருச்செங்கோட்டுக்கதிபனே!
தெய்வ-தெய்வீகமான
வள்ளிக்கொடிச்சி - குறமாதாகிய வள்ளிநாயகியை
கண்டு-பார்த்து
இதத்து-இதமாக
அத்தம் மலர்-உன் கைகளாகியமலரை [பி
மேல் குவித்து-சென்னிமேற்கூப்
இடை - பெண்ணே! உன் இடையானது [தக்க
செப்பு - சிறப்பித்துச் சொல்லத்
உரு-வடிவமாகிய
வஞ்சி-வஞ்சிக்கொடியே!
கண்-விழி
தித-நிலைபெற்ற
தத்து-ஆபத்துகளெல்லாம்
அகல்-நீங்குகின்ற
தபோபலம் - (விரகாக்கினியைத் தணித்தலால் நான் செய்) தவத்தின்பயனே [க்கும்
என்னும்-என்று நலம்புனைந்துரை
சேகரனே-தலைவனே!

(க - ரை) சமுத்திரத்தின்கண் மயிலேறிச் சென்று அசுரர் கிளையை மாய்த்தவனே! திருச்செங்கோட்டு மலையாதிபனே! வள்ளிநாயகியை நோக்கிச் சென்னிமேற் கைகூப்பி, உன் இடை வஞ்சிக் கொடியே! உன் கண்கள் என் தவப்பயனே என்று நலம் பாராட்டுங் குமாரக்கடவுளே! என்பதாம். (67)

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுநந் த்ரியம்பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சீவனென்றே.

பதப்பொருள்

சே-(அடியார்களைக்) காத்தலில்
கரவா-வஞ்சித்த லில்லாத
ரண-யுத்தத்தில் வலிதங்கிய
வேல்-வேலாயுதத்தையுடைய
வீர-வீரனே!
வேடச்சிறுமி - குறச் சிறுமியாகிய வள்ளிநாயகியினது
பத-பாதத்தை
சேகர-முடியிற்றரித்தவனே!
வாரணம்-தெய்வயானை
மேவும்-தழுவும் [யுடையவனே!
புயாசல - மலைபோன்ற புயத்தை
தீவினையின்-கொடிய வினையின்
சேகு-வயிரத்தை
அர-சங்கரிப்பவனே!
ஆரண-வேதம் பூசிக்கின்ற
வெற்பாள-திருச்செங்கோட்டு மலை
நாளும்-நாடோறும் [க்கதிபனே!
த்ரியம்பகனார் - திரிநேத்திரங்களை யுடைய பரமசிவனது [வின்
சே - இடபவாகனமாகிய விஷ்ணு
கர-கையிலிருக்கின்ற
வாரணம்-சங்குக்கும்
நின்-உனது
கையில்-திருக்கரத்திலிருக்கின்ற
வாரணம் - கொடியாகிய கோழிக்கும்
சீவனென்றே - இரவு நீடியாமல் விடிதலைக் காட்டித் தொனி செய்தலாலுங் கூவுதலாலும் பிராண னென்றாகவே யிருக்குமோ?

(க-ரை) அடியார்களைக் காக்கும் வேலாயுதத்தை யுடையவனே! வள்ளிநாயகி பாதசேகரனே! தெய்வயானை தழுவும் புயனே! வயிரமான வினையை யொழிப்பவனே! திருச்செங்கோட்டு மலையை யுடையவனே! பரமசிவனுக்கு இடபவாகனமாகிய விஷ்ணுவின் கையிலிருக்கின்ற சங்கும் உனது கரத்தி லிருக்கின்ற கொடியாகிய கோழியும் பொழுது விடிதலைக் காட்டித் தொனிசெய்தலுங் கூவுதலு மொன்றா யிருத்தலால் அவற்றிற்குப் பிராணனு மொன்றாகவே யிருக்குமோ என்பதாம்.

(வி-ரை) சீவன்-எழுவாய், ஒன்றே-பயனிலை, ஏ-அசை. (இவ்விரண்டு கவியும் குளகம்.) (68)

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்த செவ்வேள்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெ னாதிடையே
சீவன சத்துரு வெய்தியெய் தாப்பழி சிந்திப்பதே.

பதப்பொருள்

சீவன்-பிராணன்
அசத்து-சத்தல்ல ஆகையால் (சீவனும் தனுவு மியைந்திருக்கும் போதே)
உருகு-இளகத்தக்க
அன்பால்-பக்தியினால்
பிறப்பு-சனனம் [ஒழியும்படி
அற-(சத்து இன்னதென் றறிந்து)
தேவர்-தேவர்கள்
உய்ய-பிழைக்கும்படியாய்
சீவன் - சீவகாரணனை பரமசிவனால் [ய
அசத்து-ஆட்டுவாகனத்தை யுடை
உருமிக்கும் - வெப்பத்தைத் தருகின்ற [அக்கினியினது
மெய்யோன் - தேகத்தையுடைய
கையில்-கரத்தில்
சேர்த்த-சேர்க்கப்பட்ட
செவ்வேள்-குமாரக்கடவுளே!
சீ-பிரகாசம் பொருந்திய [டைய
வனசத்து - தாமரைத் தவிசையு
உருச் செய்யாள் - சிவந்த திருமேனியையுடைய மகாலட்சுமிக்கு
மருக-மருகனே! [னிக்காமல்
எனாது-என்றுள்ளத்திருத்தித்தியா
இடையே-மத்தியில்
சீவன்-சீவனானது (சத்தாகியபரத்தையும் அசத்தாகிய தன்னையு மறிவதுவிட்டு)
அசத்து-அசத்தாகிய
உரு-(மலபாண்டமாகிய) உடலை
எய்தி-அடைந்து [பெரும்பழிகளை
எய்தாப் பழி-அதற்கு ஏற்கத்தகாத
சிந்திப்பது - (என்னிருதயம்) சிந்தித்துக்கொண்டு அவமே காலங் கழிக்கின்றது.

(க-ரை) சீவன் அசத்தாயிருந்தும் அவ் அசத்தைப்பற்றிவருந் தேகாதி முதலிய பிறப்பொழியும்படி சத்தாகிய பரனே! தேவர்களைக் காத்த செவ்வேளே! இலக்குமியின் மருகோனே! என்று அன்பினாலுருகித் துதியாமல் அத்தேகம் பிழைத்தற்குரிய சீவனத்தைப்பற்றி அடாத பழியை யென்னிருதயஞ் சிந்தித்துக்கொண்டிருக்கின்றது என்பதாம்.

(வி-ரை) இருதயம்-தோன்றா எழுவாய், சிந்திப்பது-பயனிலை, ஏ-அசை. (69)

சிந்தூர வித்தக வாரும் புகர்முகத் தெய்வவெள்ளைச்
சிந்தூர வித்தக வல்லிசிங் காரசெந் தூர குன்றஞ்
சிந்தூர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
சிந்தூர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே.

பதப்பொருள்

சிந்தூர-திலதந் தீட்டிய
இத்தகவு-இத்தகமைப்பாடு
ஆரும்-நிறைந்திருக்கின்ற
புகர்-புள்ளி பொருந்திய
முக-முகத்தையுடைய
தெய்வ-தெய்வீகமான
வெள்ளைச்சிந்தூர - அயிராவதத்தினிடம் வளர்ந்த
வித்தக-அற்புதமான
வல்லி-தெய்வயானைக்கு
சிங்கார-இனிமையானவனே!
செந்தூர - செந்திற்பதிக்கு நாயகனே!
குன்றம்-கிரவுஞ்சகிரியை
சிந்து-பொடிசெய்த
உர-வல்லவனே!
வித்தக-சர்வக்கியனே!
முத்திக்கும்-மோக்ஷத்திற்கும்
ஆய்-ஆராய்ந்தருள்செய்
நின்ற-அடியவர்கட்கெல்லாந் தாய் போல நின்ற
செல்வ-செல்வனே!
துஞ்சா-கண்ணுறங்காமல் முழங்குகின்ற
சிந்து-சமுத்திரமும்
இங்கு-இவ்விடத்தில் (இடைவிடாமல்)
இளம்-இமைதங்கிய
திங்களும்-குளிர்ந்த சந்திரனும்
ரவி-சூரியனுடைய
தகனம் போலும்-காந்தியைப்போலத் தகிக்கின்றது.

(க-ரை) சிந்தூரந் தீட்டும் புகர்முகத்தையுடைய அயிராவதத்தினிடம் வளர்ந்த தெய்வயானை நாயகனே! முத்திக்கு வித்தகனே! கிரவுஞ்சகிரியைத் தகர்த்த செந்தில் நாயகனே! நிறைந்த செல்வனே! சமுத்திர முழங்கியும், சந்திரன் வெப்பத்தைத் தந்தும் என்னை வருத்துவதை நீ யாய்ந்தருள் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், ஆய்-பயனிலை, ஏ-அசை. (70)

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள்
திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே.

பதப்பொருள்

திங்களும்-சந்திரனையும்
மாசுணமும்-அரவத்தையும்
புனைவார்-தரித்துக்கொள்ளுகின்ற பரமசிவனது
செல்வன்-புதல்வனும்
என்-என்னுடைய
ஐயிரு திங்களும்-பத்துமாத மென்னுங் காலவளவுக்குட்பட்டுத் தாயின் கர்ப்பத்திலுறும் பிறவித் துன்பத்தையும்
மா மிகவும்
சுணமாக்கும்-நீறாகத்தக்க மகத்துவம் பொருந்திய
பதாம்புயன் - திருவடித் தாமரையை யுடையவனுமாகிய குமாரக்கடவுளது
செந்தில்-திருச்செந்திற் பதியை
அன்னாள் - ஒத்து விளங்காநின்ற
இம்மங்கையினுடைய
திங்கு-தீமைகளை
அளும்-உண்டாக்கும்
மாசு - (ஆத்மகோடிகள் செய்யும் பாவங்களாகிய) குற்றத்தை
உள்-ஆராய்கின்ற
நமன்போல்-யமனையொத்த
விழியும்-கண்ணையும்
செழும்-செழுமை தங்கிய
கரும்பும்-கன்னலும்
திம்-தித்திப்பான
களும்-தேனும்
மாசுண-(ஒப்பாகாமையால்) குற்றமுறும்படி செய்கின்ற
நன்றான-மிகவு மினிமையான
மாற்றமும்-மொழியையும் [ல்
தீட்டின்-எழுத வுன்னாற்கூடுமானா
நன்று-நன்மையாகும்.

(க-ரை) சந்திரனையுஞ் சர்ப்பாபரணத்தையுந் தரித்த பரமசிவனது மைந்தனும், என் பிறவியை மாற்றித் தமது திருவடியையருளும் குமாரக்கடவுளது செந்தூரை யன்ன இம்மங்கையினது யமனையொத்த கண்ணையும், தேனினுங் கன்னலினு மினிய மொழியையும் உன்னா லெழுதக்கூடுமானால் ஆகும்; கூடாததான் மடலூர்தனன்றன்று என்பதாம்.

(வி-ரை) மடலூர்தல் - தோன்று எழுவாய், நன்று - பயனிலை, ஏ-அசை. (71)

தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே.

பதப்பொருள்

தீட்டப்படா-எழுதப்படாது
இனி-இனிமேல்
உன்னால்-உன்னாலே
என்-என்னுடைய
சென்னி-தலையில் விதியை [ந்த
கறை-உதிரமுதலியவற்றா னிறை
பிறப்பில்-கருவிற் சனித்தலினால்
தீட்டப்படு-அசுசியை யடைகின்ற
ஆவியவர் - உயிர்களையுடையவரை ப்போல
அல்லன் யான்-யான் ஆகேன்
திக்கு-எட்டுத் திக்குகளிற்சென்று
நால் மருப்பு-தனது நான்கு கொம்புகளையும்
தீட்டு-கூர்மையிடுகின்றதும்
அ-அந்த
படா-பட்டமும் [திய
வித-சித்திர விதங்களும் பொருந்
முகாசலன்-முகத்தையுடைய மலை போன்ற அயிராவதத்தி லேறுகின்ற இந்திரனது
சிறை-சிறையை
விட்டவன்-நீக்கி யாண்ட குமாரக் கடவுளினுடைய
தாள்-திருவடித்தாமரையை
தீட்ட-அடைய
படா-ஒருகாலு மழிவில்லாத
இவனையே-இப்படிப்பட்ட முருகனையே
நினைவன்-உள்ளத்தி லிருத்தித் தியானிப்பேன் (ஆதலால்)
திசாமுகனே-பிரமனே!

(க-ரை) பிரமாவே! இனி என்னை யுதிரம் நிறைந்த கருக்குழியி லழுந்துவோரைப்போல் நினையாதே; இந்திரனது சிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாததாமரையை யடையும்பொருட்டு அவனையே தியானித்துக்கொண்டிருக்கிறேன்; ஆதலால், எனது தலை யுன்கையா லினி யெழுதப்படாது என்பதாம்.

(வி-ரை) சென்னி-எழுவாய், தீட்டப்படா-பயனிலை, ஏ-அசை.

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறுமம்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந்
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே.

பதப்பொருள்

திசாமுக-நான்குதிக்கு முகங்களையுடைய
வேதன்-பிரமனும்
ஐயன்-அவனது பிதாவாகிய விஷ்ணுவும்
பாற்கரன்-சூரியனும்
திங்கள்-சந்திரனும்
தங்கள்-தங்கடங்கள்
அவதி-ஆயுசு முடிந்து
சாம்-இறக்கின்ற
உகவேதனையீறிலும்-யுகாந்தத்தில் துன்புறுங் காலத்திலும்
ஈறிலர்-அழியார்கள்
சீறும்-கோபித் தொலிக்கின்ற
அம்போதி - சமுத்திரத்தின்கண் தோன்றி
சாமுக-சாமுகத்தையுடையவனும்
வேதனை - தேவர்கட்குத் துன்பத்தை விளைக்கின்றவனுமாகிய சூரனை
வென் கண்ட-புறங்காட்டச்செய்த
வேலன் - வேலாயுதத்தையுடைய முருகன் வாசஞ்செய்கின்ற
தினைப்புன-தினைப்புனங்களையும்
தந்தி-யானைகளின்
சாமுக-கூட்டங்களையும்
வேதனை-மூங்கில்களையும்
நண்ணு-பொருந்தியிருக்கின்ற
தண்-குளிர்ச்சி பொருந்திய
கார்-மேகங்கள் தவழாநின்ற
வரை-பழமுதிர்சோலைமலையை
சேர்பவர் - அடைந்து இடைவிடாமற் றியானித்தவர்.

(க-ரை) சமுத்திரத்தின்கண் சூரனைவென்ற வேலாயுதப் பெருமானுறைந்தருளிய சோலைமலையை யடைபவர் பிரமா விஷ்ணு சந்திர சூரியர்களெல்லாமழியும் யுகாந்தகாலத்தினுந் துன்பமின்றி நித்தியராயிருப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) சேர்பவர்-எழுவாய், ஈறிலர்-பயனிலை, ஏ-அசை. (73)

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென் றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே.

பதப்பொருள்

சேர-சேரராசனது
பொருப்பு-கொல்லி மலைச்சாரலையும் வெள்ளிமலைச் சாரலையுமுடைய
அடவி-வனத்தில் வாழ்கின்ற
தென் - தேன்மொழியையுடைய வள்ளிநாயகிக்கு
இறைவன்-காதலனே!
திரை-அலையானது
சிறையை-கரையை
சேர்-அழியும்படி
அப்பு-மோதுகின்ற
ஓர்-ஒப்பற்ற
உப்பு-உவர்க்கடலை
அட-வற்றும்படி வேல் விட்ட
வல்லவன்-வல்லவனே!
சூரை-சூரனை
சிகரியுடன்-கிரவுஞ்சகிரியுடன்
சேர-அடியோடு
பொரு-போர்செய்து
பட-அழியும்படி
வென்று-ஜெயித்து
அண்டர்-தேவர்களால்
ஏத்திய-துதிசெய்யப்பட்ட
சேவகன்-வீரனே!
வான் சேர் அப்பு - ஆகாய கங்கையை
ஒருப்பட-ஒன்றாக
வேணியில்-சடையின்கண்
சேர்த்தவன்-அடக்கித் தரித்த பரமசிவன்
செய்தவமே-செய்தவமாகிய மைந்தனே.

(க-ரை) கொல்லிமலை வெள்ளிமலைச் சாரலையுடைய வனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகிக்குக் காதலனும், சமுத்திரத்தை வேலால் வற்றும்படி செய்தவனும், சூரனையுங் கிரவுஞ்சகிரியையும் நிர்மூலமாக அழித்துத் தேவர்களால் துதிக்கப்பட்டவனும், கங்காதரராகிய பரமசிவன் செய்தவமென்னு மைந்தனுமாகிய, குமாரக்கடவுளே என்பதாம். (74)

செய்தவத் தாலஞ்சு சீரெழுத் தோதிலந் தீதலருஞ்
செய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுரைக் கேற்றுருப்போய்ச்
செய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதென் னேம்வினையே
செய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் செம்மல்கொண்டே.

பதப்பொருள்

செய்தவத்தால்-அழகிய தவத்தினாலாவது
அஞ்சு சீரெழுத்து-சிறந்த பஞ்சாக்ஷரத்தை
ஓதிலம்-துதிக்கின்றோமில்லை
தீது-தீமை
அலரும்-விளையும்
செய்-நரகபூமி
தவ-அழிந்துபோகவும்
தாலம்-உலகெல்லாம்
சுகம்-நன்மையை
பெற-அடையவும்
சேய் உரைக்கு - சம்பந்தப்பிள்ளையாக அவதரித்துத் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்தினால்
ஏற்று உரு போய்-ஆணுரு மாறி
செய்த-சிவந்த
அ தாலம்-அப் பெண்ணுருவாகிய பனை
சுவைக் கனி-இனியபழத்தை
ஈன்றது-தந்தது
என்னேம் - என்று துதிக்கின்றோமில்லை
வினையே செய்து-தீவினையே புரிந்து
அவத்தால்-வந்ததுன்பத்தினால்
அஞ்சுகின்றனம் - அச்சமுற்றிருக்கின்றனம்
மும்மலச்செம்மல்கொண்டு - மும்மலமாகிய போர்வையைத் தரித்துக்கொண்டு.

(க-ரை) நெஞ்சமே! உலகத்தார் நரகமெய்தாமலின்பத்தை யடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக் கொடுக்கவும் சம்பந்தராயவதரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த குமாரக்கடவுளைத் துதியாமலும், அவரது பஞ்சாக்ஷரத்தை யனுஷ்டிக்காமலும், தவத்தில் முயலாமலும், தீவினைத்தொடர்பால் மும்மலப் பிணிப்புண்டு யாம் அவத்தில் முயன்று அஞ்சுகின்றனம் என்பதாம்.

(வி-ரை) யாம்-தோன்றா எழுவாய், அஞ்சுகின்றனம்-பயனிலை, (இவ்விரண்டு கவியும் குளகம்.) (75)

செம்மலை வண்டு கடாரங்க மாவென்ற திண்படைவேற்
செம்மலை வண்டு வசவார ணத்தனைச் செப்பவுன்னிச்
செம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதெண் டீங்கையில்வாய்
செம்மலை வண்டு விருப்புறு மோவிது தேர்ந்துரையே.

பதப்பொருள்

செம்-சிவந்த நிறத்தையுடைய
மலை-கிரவுஞ்சகிரியையும்
வண்டு-சங்கினங்கள்
உகள்-உலாவுகின்ற
தரங்கம்-கடலின்கண்
மா-மாவடிவாய் நின்றசூரனை
வென்ற-செயித்த
திண்-திண்ணிய
படைவேல் - வேலாயுதத்தை யுடைய
செம்மலை-கடவுளை
வண்-வளப்பமிகுந்த
துவசவாரணத்தனை -கோழிக்கொடியையுடைய குமாரக்கடவுளை
செப்ப-புகழ்ந்து பாட
உன்னி-நினைத்தும்
செம்மலை - மனதைப் புதைத்துவிடாதே
வண்டு-குற்றம்
தவு-நீங்கிய
அம்-அழகிய
தமிழ்ப்பாண-தமிழ்ப்பாணனே!
தெள்-தெளிந்தும்
தீம்-இனிப்புற்றும்
கையில்-காதில்
வாய்-வாய்ப்பினும்
செம்மலை-பழமையாகிய பூவை
வண்டு-சுரும்பினங்கள்
விருப்புறுமோ-இச்சிக்குமோ
இது-இதை
தேர்ந்து-ஆராய்ந்து
உரை - அக்கடவுளைப் பலகாலும் புகழ்ந்து பாடு.

(க-ரை) குற்றமின்றி யின்னிசை பாடும் பாணனே! வண்டுகள் அன்றலர்ந்த மலர்களை விட்டுப் பழமையாகிய மலர்களை விரும்புமா? அத்தன்மையள் யானென்றறிந்து நீ கிரவுஞ்சகிரியையும் சமுத்திரத்தில் மாவடிவாய் நின்ற சூரனையும் வென்ற கோழிக்கொடியோனுன கந்தசுவாமியினது திருப்புகழைக் குறைவின்றிப் பலகாலும் புகழ்ந்து பாடுவாயாக என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்று எழுவாய், உரை-பயனிலை, ஏ-அசை. (76)

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்படுமாறு செறிந்தலகைத்
தேரை விடப்பணித் தென்றோடி யென்றுந் திரிபவரே.

பதப்பொருள்

தேரை-தேவர்களெல்லாங் கூடிச் செய்த தேரை
விட-அச்சு முறியும்படி
டணி-செய்து
ஏறு-இடபவாகனத்தின்மேல்
ஏறி-இவர்ந்து
முப்புரம்-திரிபுரத்தை
செற்ற-நகைத்தெரித்த
பிரான்-பரமசிவனுக்கு
தேர்-பிரணவப்பொருள் தெளியச் செய்த
ஐ-சுவாமியே!
விள்-சொல்லத்தக்க
தப்பு-குற்றத்தால்
அணி-நெருங்கிய
சூராரி-சூரசங்காரனே!
என்க-என்று துதிக்கக்கடவீர்கள்
தெரிவையர்பால் - காம வாஞ்சையால் பரத்தையரிடத்தில்
தேரை-தேரையானது
விட-விஷத்தையுடைய
பணி-பாம்பினது
வாய்-வாயில்
படுமாறு-அகப்பட்டாற்போலும்
செறிந்து-சிக்கிக்கொண்டு
அலகைத் தேரை-பேய்த்தேரென்னுங்கானலை
விடு-ஊறுகின்ற
அப்பு-சலமானது
அணித்து என்று-சமீபமா யிருக்கின்றதென்று
என்றும் ஓடி-எப்போதும் ஓடியோடி
திரிபவரே-அலைந்து திரிகின்றவர்களே!

(க - ரை) பாம்பின்வாய்ப்பட்ட தேரைபோல மாதாது மயக்கத்தில் அகப்பட்டுக் கானலை நீரென்றெண்ணிச் செல்பவர்போல் அவர்கள் பொய்யின்பத்தை நம்பி வருந்துவோரே! அதைவிட்டுத் தேவர்கள் கட்டிச் சமைந்த தேரை முறித்து இடபமேறித் திரிபுரமெரித்த பரமசிவனது சுவாமியே! சூரசங்காரனே! என்று துதியுங்கள் என்பதாம்.

(வி-ரை) நீங்கள்-தோன்றா எழுவாய், என்க-பயனிலை. (77)

திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைபட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்பு நெஞ்சே.

பதப்பொருள்

திரி-நீ யென்றுந் திரிவாயாக
புரத்து-பூரநாளில்
அப்பு-கடல் சூழ்ந்த
புவி-பூவுலகத்தை
தர-பெற்றருளும்படிக்கு
தோன்றி-அவதரித்த உமாதேவி
சிலை - தனதுள்பாகமாகிய இடது கரத்தால் மேருவாகியவில்லை
பிடிப்ப - பிடித்துக்கொள்ளச் செய்து
திரிபுரத்து-முப்புரத்தின்மேல்
அப்புத்தலைபட - விஷ்ணுவாகிய பாணத்தைப் பிரயோகஞ் செயயும்பொருட்டு
நாண் - தனது பாகமாகிய வலது கரத்தால் வாசுகியாகிய நாணை
தொடும்-ஏறிட்ட
சேவகன்-பரமசிவனதுயை
கோத்திரி-திருச்செங்கோட்டுமலை
புரத்து-நகரமாகக்கொண்ட
அ புத்திர-அந்த மைந்தனே!
மால் மருக-திருமால் மருகோனே! என்றும்
திருக்கை-திருக்கையென்னு மீனையுடைய
அம்போதி-சமுத்திரத்தின்கண்
ரிபு-அசுரராகிய சத்துருக்களது
ரத்தப் புத்துறை-இரத்தங்களையே புதிய வுறையாகத் தோய்ந்த
ஆயுத என-வேலாயுதத்தை யுடையவனே! என்றும்
செப்பு-புகழ்ந்து சொல்லி
நெஞ்சே-மனமே!

(க-ரை) நெஞ்சமே! பூரநாளிற் பிறந்த லோகமாதாவாகிய பார்வதி வில்லைப் பிடித்துக்கொள்ள நாணேறிட்டுத் திரிபுரத்தின் மேல் விஷ்ணுவாகிய பாணப்பிரயோகஞ் செய்த பரமசிவனது மைந்தனாகிய திருச்செங்கோட்டு மலையாதிபனே! திருமால் மருகோனே! சமுத்திரத்தில் அசுரரை வதைத்த வேலாயுதனே! என்று சொல்லிக்கொண்டு நீ திரிவாயாக என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், திரி-பயனிலை, ஏ-அசை. (78)

செப்பா ரமுதலை மன்னை திகனங் குரும்பைமுலை
செப்பா ரமுதலை கண்கா னகைமுருந் தீரிருகண்
செப்பா ரமுதலை வாவியிற் சென்றபி ரான்மருகன்
செப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே.

பதப்பொருள்

செப்பு-சொல்லானது
ஆர் அமுது-ஆரமுதம்போலும்
அல்-இருள்நிறமும்
ஐ-அழகும்
மன்-நிலைபெற்ற
ஓதி-கூந்தலானது
கனம்-மேகம்போலும்
குரும்பை-குரும்பையொத்த
முலை-தனமானது
செப்பு-செப்புப்போலும்
ஆர-முத்துகளையுடைய
முது-பழமையாகிய
அலை-கடல்போலும்
கண்-விழியானது
கால்-ஒளிதங்கிய
நகை-பல்லானது
முருந்து-மயிலிறகினடிபோலும்
ஈர் இருகண் - நான்கு கண்களையுடைய
செ-சிவந்த
பார முதலை-பெரிய முதலைவாயிற் சிக்கிய யானையை
வாவியில்-தடாகத்தின்கண்
சென்ற-இரட்சிக்கும்படி விரைந்துபோன
பிரான்-திருமாலின்
மருகன்-மருகோனும்
செப்பார-மிகவும் தன்னைப் புகழ்ந்து துதிப்பவர்களது
முதலை-பிறப்பின் மூலத்தை
வேர் களைவான் - நிர்மூல மாக்குவோனுமாகிய குமாரக்கடவுளது
வரைச்சீரினுக்கு - மலையில் வாழு மங்கைக்கு.

(க - ரை) தடாகத்தின்கண் முதலைவாயிற் சிக்கிய யானையை ரக்ஷித்த திருமால் மருகோனுந் தன்னைத் துதிப்பவர்களது பிறப்பையொழிப்பவனுமான குமாரச்கடவுளினது மலையில்வாழு மங்கைக்கு மொழி-அமுதமும், கூந்தல்-மேகமும், தனம்-செப்பும், கண்-கடலும், நகை-மயிலிறகினடியும் போன்றிருக்கின்றன என்பதாம்.

(வி-ரை) செப்பு முதலிய-எழுவாய், ஆரமுதமுதலிய-பயனிலை, ஏ-அசை. (79)

சீராம ராம சிவசங்க ராநுந் திருமுடிக்குச்
சீராம ராம துகரத் துழாயென்பர் தெண்டிரைமேற்
சீராம ராம னிறந்திறக் கத்தொட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே.

பதப்பொருள்

சீ-இலக்குமிக்கு நாயகனை
ராம-அழகிய
ராம-திருமாலே!
சிவசங்கரா-பரமசிவனே!
நும்-உங்கள்
திருமுடிக்கு - அழகிய சென்னிகளுக்கு
சீர்-சிறந்த தன்மையாவது
ஆம்-கங்காசலத்தோடே
அரா-அரவாபரணமும்
மதுகர-தேன்பொருந்திய
துழாய்-திருத்துழாய் மாலையும்
என்பர்-என்று சொல்லுவார்கள்
தெள்-தெளிந்த
திரைமேல் - அலையையுடைய கடலின்கண்
சீரா-கவசத்தை
மாராம-மாமரமாய் நின்ற சூரனை
நிறம்-மார்பை
திறக்க-பிளக்கும்படி
தொட்ட - தனது மெய்யிற் புனைந்த
சேய் கழற்கு-முருகக்கடவுளது திருவடிக்கு
சீர் ஆம்-சிறப்பா யமைந்திருக்கும்
அரா-நெருங்கிய
மன்-நிலைபெற்ற
இமையோர்-தேவர்களுடைய
மகுட-கிரீடமணிந்த
சிகாவிம்பம்-வட்டவடிவாகிய தலைகள்.

(க-ரை) பரமசிவனே! உமது திருமுடிக்குக் கங்கையும் பாம்பும் மாலையாம்; திருமாலே! உமது திருமுடிக்குச் சிறந்த திருத்துழாய் மாலிகையாம்; மெய்யிற் கவசத்தை யணிந்து சமுத்திரத்தின்கண் சூரனை வென்ற குமாரக்கடவுள் திருவடிக்கோ தேவர்களது முடித் தலைகளே மாலையாம் என்பதாம்.

(வி - ரை) சிகாவிம்பம் - எழுவாய், சீராம் - பயனிலை, ஏ- அசை. (80)

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்செவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி வூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி யானல மன்றிலுந் தென்றலுமே.

பதப்பொருள்

சிகாவல-மயில்வாகனனே!
அன்பர் - தனக்கன்புள்ள அடியார்க்கு
இதப்பாடு செய்யும் - இன்னருள் செய்கின்ற
செவ்வேல - அழகிய வேலாயுதத்தையுடையவனே!
இலஞ்சி காவல-இலஞ்சிப்பதியைக் காத்தளிப்பவனே!
வன்பரி ஊரார்-என்னை யலர்தூற்று மிவ்வூரினராகிய கொடியவர்களும்
மதன்-மன்மதனும்
நித்திலம்-முத்து விளைகின்ற
சலராசி-சமுத்திரமும்
கா-சோலையும்
அலவன்-சந்திரனும்
பரியங்கம்-கட்டிலும்
குழல்-புள்ளாங்குழலும்
பெற்ற-என்னைப் பெற்றவளாகிய
தேமொழி - இனிய மொழியையுடைய
வஞ்சி-தாயின்
காவு-காவலும்
அல-இவையெல்லாம் பெரிதல்ல
வன்-வலிய
பரியானலம் - வடவாமுகாக்கினி போன்று வருத்துகின்றன
அன்றிலும் - (காமசின்னமாகிய) அன்றிற்பட்சியும்
தென்றலும்-(தேராகிய) தென்றற் காற்றும்

(க-ரை) மயில்வாகனனே! அன்பர்க்கருளும் வேலாயுதனே! இலஞ்சிப் பதியோனே! எனக்குப் பகைவராகிய வூராராலும், காமனாலும், கடலாலும், சோலையினாலும், கட்டிலினாலும், வேய்ங்குழலாலும், தாயின் காவலாலும் உண்டாகுமிடர் பெரிதல்ல. அன்றிலும் தென்றலுமே வடவாமுகாக்கினிபோன் றிருக்கின்றன. ஆகையால், எனக்கருள் செய்ய இதுசமயம் என்பதாம்.

(வி-ரை) அன்றிலும், தென்றலும் - எழுவாய், பரியானலம்-பயனிலை, ஏ-அசை. (81)

தென்றலை யம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலை யம்புய மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலை யம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலை யம்பு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே.

பதப்பொருள்

தென்-வண்டுக ளிசைபாடுகின்ற
தலை-சிரசின்கண்
அம்பு-கங்கையை
புனைவார்-அணியும் பரமசிவனது
குமார-மைந்தனே!
திமிர-இருள் நிறமுடைய
முந்நீர்-கடல்சூழ்ந்த
தென்-அழகிய
தலை-பூதேவிக்கும்
அம்புயம்-செந்தாமரைப்பூவில் வாசஞ் செய்கின்ற
மின்-சீதேவிக்கும்
கோ-நாயகனாகிய திருமாலினது
மருக-மருகோனே!
செழு-செழுமைதங்கிய
மறை தேர் - நான்கு வேதங்களூந் துதிக்கின்ற
தென்றலை - தெற்கின்கண்ணதாகிய
அம்-அழகிய
புசக-பாம்புபோன்ற
பூதர-திருச்செங்கோட்டுமலையாதிபனே!
எரி-அக்கினியை
சிந்தி-கொட்டிக்கொண்டு
மன்றல்-வாசனை தோய்ந்த
தென்றல்-தென்றற்காற்றானது
ஐ அம்பு - என் தேகத்தில் பஞ்சபாணங்களூம்
படு-தைத்த
நெறி-புண்வழியே
போய்-நுழைந்து
உயிர்-என்னுயிரை
தீர்க்கின்றது-(வருத்தி) நீக்குகின்றது.

(க-ரை) கங்கையைச் சூடிய பரமசிவனது மைந்தனே! பூதேவி சீதேவிகளின் நாயகனான திருமால் மருகோனே! வேதங்கள் துதிக்கின்ற பாம்புபோன்ற திருச்செங்கோட்டு மலையில் வாழ்பவனே! காம பாணந் தைத்த புண்வழியே தென்றற்காற்று என்னுடலில் நுழைந்து உயிரை வருத்துகின்றது என்பதாம்.

(வி-ரை) தென்றல்-எழுவாய், தீர்க்கின்றது-பயனிலை, ஏ-அசை.

தீரா கமல சனிகித போக மெனத்தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாதமெதன் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத்திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே.

பதப்பொருள்

தீரா-நீங்காமல்
கமல-விஷ்ணுவினது நாபிக்கமலத்தில்
ச-சனித்த பிரம்மா
விகிதபோகம் என - எழுதிய தலைவிதிப் பிராப்தமென்று
தெளிந்தும்-அறிந்திருந்தும்
தீ-என்னறிவானது
ராகம்-இச்சையினால்
அலம என - இனிய பயனுடையோம் அல்லேம் என்று
கருதாது-சிந்தியாதது
என்-என்ன காரணம்?
சேய்-குமாரக்கடவுளே!
அவம்-பயனின்மையான
நூல்-சாஸ்திரங்களை
தீர்-நீங்கிய
ஆகம-பரிசுத்தமான ஆகமமுரைத்தோனே!
லகு-(அக்கினியானவன் இப்பொறி) அற்பமானது
காம்-கையில்
பொறுப்பன்-தாங்கிக் கொள்வேன்
என-என்று சொல்ல
திருக்கண் - உனது சிறந்த விழியினாலே
தீ-அவ்வக்கினியினது
ராகம்-காந்தியோடுற்ற சிவந்த நிறமெல்லாம்
அலமரவே-வருத்தமுற்றே
கருக-கருகும்படி
சிவந்தவனே-கோபித்தவனே!

(க-ரை) குமாரக்கடவுளே! பரிசுத்த வேதாகம மொழிந்தோனே! இக்கனற்பொறி லகுவானது, நான் காத்திற்றாங்கிக்கொள்வேன் என்று வன்மை பேசின அக்கினியின் வீறடங்கி யுடல் கருகக் கோபித்த விழியை யுடையவனே! கமலோற்பவனான பிரம்மா விதியினனுபவர் தவறாதென்று தெளிந்தும், எனதறிவானது ஆசை பயன் படுவதன்று என்று கருதாததென்ன? என்பதாம்.

(வி-ரை) அறிவு-எழுவாய், கருதாததென்-பயனிலை, ஏ-அசை.()

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே.

பதப்பொருள்

சிவ-ஏகவஸ்துவான
சிவ-பரமசிவனிடத்தில்
சம்-உற்பவித்த
கர-திருக்கரத்தில்
வேலாயுத-வேலாயுதத்தையுடைய முருகோனே!
தினை-தினைப்புனத்தையுடைய
வஞ்சி-பெண்ணாகிய
குறிஞ்சி-குறிஞ்சிநிலத்தில்
வசி-வாசஞ் செய்கின்ற வள்ளிநாயகியினது
வசம கரவா - பக்கத்தைவிட்டகலாத
மயில்வீர-மயிலேறுஞ் சேவகனே!
செகம்-உலகத்தின்கண்
திரு-சிறந்த
கண்-விழியினால்
சிவ-கோபி
சிவ-கோபி
சங்கர-எல்லாரையு மழிக்கின்ற
மாவை-சூரனுருக்கொண்ட மாமரத்தை
எனும்-என்று வேலாயுதத்தையேவும்
திறலோய்-வீரனே!
பொறை வாசி-மிகுந்த பொறுமையென்னும் பாணத்தின்
வசி வசம்-கூர்மையினிடத்தில்
கர-கோப முதலிய
மான் பட்ட -மிருகங்கள் விழுந்துவிட்டன
ஒளி - உனது திருவருளாகிய பிரகாசம்
சேர்ந்தபின் - என்னிற் கலந்தவுடனே.

(க-ரை) ஏகவஸ்துவான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகனே! மயிலேறும் வீரனே! மாவடிவாய் நின்ற சூரனை வென்ற வீரனே! நின்றிருவருளின் பிரகாசத்தினால் எனது கோபமென்னும் மிருகம் பொறுமையென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மையதாயிற்று என்பதாம்.

(வி-ரை) காமான் - ஏழுவாய், பட்ட - பயனிலை, ஏ-அசை, ஆ-அசை. (84)

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத்திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னாரி யென்னுமிச் சேறுபுக்கே.

பதப்பொருள்

சேந்த-கந்தனே!
மராத்துடர்-கடப்ப மாலிகையைப் புனைந்த
தானவர் சேனையை - அசுரர் கூட்டங்களை
தெள்-தெளிந்த
திரை-அலையையுடைய கடலினிடத்தில்
கண் சேந்து-விழிகள் சிவந்து
அ-அந்த
மராத்துடன் - மாமரமாய் நின்ற சூரனுடன்
கொன்ற-வதைசெய்த
செவ்வேல-சிவந்த வேலாயுதத்தையுடையோனே!
திருமுடிமேல்-அழகியசிரசின்கண்
சே-இளமையான
இந்து-சந்திரனையும்
அம்-கங்காசலத்தையும்
அரா-சர்ப்பத்தையும்
துள்-துள்ளலை
தர-கொடுக்கும்படி
சூடி-தரித்த பரமசிவனது
மைந்த-புதல்வனே!
திளைத்து-மூழ்கி
இளைத்தேன் - மெலிந்து வருந்தினேன்
சே-என்னைக் காத்தருள்வாய்
தமரா-சுற்றத்தாராக
துடர்-பற்றிய
இல்-மனை வாழ்க்கையும்
நாரி-பெண்ணையும்
என்னும்-என்று சொல்லப்பட்ட
இச்சேறு-இந்தச் சேற்றில்
புக்கு-பிரவேசித்து.

(க-ரை) கடப்பமாலையைப் புனையுஞ் சேந்தனே! சமுத்திரத்தின்கண் மாமரமாய்நின்ற சூரனோடு அசுரர்களையை யழித்த வேலாயுதனே! சந்திரனையும் கங்கையையும் சர்ப்பாபரணத்தையும் தரித்த பரமசிவனது மைந்தனே! என்னைச் சூழ்ந்திராநின்ற சுற்றத்தார் மனைவி மனை என்னுஞ் சேற்றில் மூழ்கி வருந்துகின்றேன்; இனியாகிலும் என்னைக் காப்பாற்றவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், சே-பயனிலை, ஏ-அசை. (85)

சேறலைத் தாறலைக் கப்பா லெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்
சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே.

பதப்பொருள்

சேறு-சேற்றை
அலைத்து-உழக்கி
ஆறு-ஆற்றினின்றும்
அலைக்கு அப்பால் |எழுந்து-அலைகளுக்குமேலெழும்பி
செழும்-செழுமைதங்கிய
கமுகில்-கமுகமரத்தில்
சேல்-சேற்கெண்டையானது
தலை-அக் கமுகின் தலையிலிருக்கி
தாறு-குலைகளை [ன்ற
அலைக்கும்-அலைக்காநின்ற வளப்பத்தையுடைய
செந்திலாய் - திருச்செந்தில் நாயகனே!
சிந்தை-என் மனமானது [ல்
தீ நெறியில் - கொடிய மார்க்கத்தி
சேறலை-செல்லுதலையும்
தாறு-அளவுபடாத [லையும்
அலை - அஞ்ஞானவிருளை யடைத
தீர்க்கும்-நீக்கியருளுகின்ற
குமார-குமாரக்கடவுளே!
திரிய-மாறுபடும்படி
வினை-இருவினையாகிய
சேறு-சேற்றின்கண்
அலைத்து-துன்பப்படுத்தி
ஆறு அலைக்கத் தகுமோ-வழிபறிப்போர்போ லென்னுயிரைக் கவரத்தகுமோ?
மெய்த்திறம்-உனதருளி னுண்மைத்திறத்தை
கண்டும்-கண்டு அதுவே பற்றாயிருக்க எண்ணுகிற என்னை.

(க-ரை) சேற்றை யுழக்கி யாற்றினின்று மலைகளுக்கு மேலெழும்பிக் கமுகின்குலையை யலைக்குஞ் செந்திற்பதியோனே! அடியார்களது அக்கியானவிருளை நீக்கி அவரை நன்னெறியிற் செலுத்துங் குமாரக்கடவுளே! உன் அருளின் திறத்தைக் கண்டறிந்த என்னை இருவினைச் சேற்றி னுட்படுத்தலாகுமோ? என்பதாம். [தவிர்த்தாளவேண்டுதல்-குறிப்பு.]

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், ஆறலைக்கத்தகுமோ-பயனிலை.

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் செந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்செந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே.

பதப்பொருள்

திறம்-நமது வெற்றியை
பாடுவர்-துதிக்கின்றார்
தண்-தண்ணிய
புன-புனத்தில் வாழும்
தெய்வமே-தேவதையே!
என்பர்-என்று அழைக்கின்றார்;(அவர் யாரெனில்)
சேதத்து-கேட்டையுடைய
மாந்திறம்-வலி பொருந்திய மாமரமாய் நின்றசூரன்றன் கிளையோடு
பாடு-அழிந்தான்
உவர்-உவர்ப்பையுடைய
முது-பழமையாகிய
நீர்-கடலின்கண்ணே [படி]
என-என்று (தேவர்கள் சொல்லும்
காய்பவர்-கோபித்தவராகும்
செம்-சிவந்த
தினைமேல்-தினைப்புனத்தின்கண்
திறம்பாள்-நீங்காதிருக்கின்றவளாகிய வள்ளிநாயகியே! உனது
துவர்-பவழம்போன்ற
இதழ் கண்டு - அதரத்தைப் பார்த்துக்கொண்டே [றார்
உருகாநிற்பர் - மனமுருகி நிற்கின்
செப்புற-ஏதோவொரு வார்த்தை சொல்லுவதற்காகவே
செந்தில்-செந்திற்பதியென்னும்
தம்பாடு-தம்மிடத்தில்
வரில்-வருவாராளுல்
இவர்-இப்பேர்ப்பட்டவர்
வல்லவர்-சாமர்த்தியரே
நம்-நமது
செயல்-உபசாரச்செய்கையை
கொள்ள-பெற்றுக்கொள்வதற்கு.

(க - ரை) நாயகியே! சமுத்திரத்தின்கண் சூரன் கிளையோடு அழிந்தான் என்று தேவர்கள் சொல்லும்படி வதைத்தவர், வந்து ஏதோவொரு வார்த்தை சொல்லும்பொருட்டு இங்கே நமது வெற்றியைப் புகழுகின்றார்; புனத்தெய்வமே! என்று அழைக்கின்றார்; தினைப்புனத்திலிருக்கும் உனது பவழநிறம்போன்ற இதழைப்பார்த்து மனமுருகி நிற்கின்றார். இவர் தமது செந்திற்பதியில் வருவாராளுல் நாம் செய்யும் உபசாரத்தைப்பெற வல்லவர்தாம் என்பதாம்.

(வி-ரை) இவர்-எழுவாய், வல்லவர்-பயனிலை. (87)

செயலங் கைவாளை யிறைகோயிலைச்சிவனாரமுதைச்
செயலங் கைவாளை முனிகொண்டல் வாளியைத் தேவர்பிரான்
செயலங் கைவாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
செயலங் கைவாளை யுகள்செந்தில் வாழ்பவள் சேல்விழியே.

பதப்பொருள்

செயல்-சேற்றிலுண்டாகின்ற
அம்-அழகிய
கை-ஒப்பற்ற
வாள்-ஒளிபொருந்திய
ஐ-சிரேஷ்டமான
இறை-பிரம்மாவின் [யையும்
கோயிலை - ஆலயமாகிய தாமரை
சிவனார்-பரமசிவனுண்ட
அமுதை-விஷத்தையும்
செய-வெற்றிபொருந்திய
லங்கை-இலங்காபுரியினது
வாளை-பிரகாசத்தினழகை
முனி-கோபித்த [ஸ்ரீராமரது
கொண்டல்-மேகநிறத்தை யுடைய
வாளியை-பாணத்தையும்
தேவர்பிரான் - தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனது
செயல்-போர்புரிகின்ற
அங்கை-அங்கையிற்பற்றிய
வாளை-வாளாயுதத்தையும்
முனை-கூர்மைபொருந்திய
வேலை-வேலாயுதத்தையும்
அன்ன-ஒத்து விளங்காநின்றன
இ சேய் உறையும்-இக்குமாரக்கடவுள் அமர்ந்தருளிய
செய்-வயலை யுழுகின்ற
அலம்-கலப்பையை
கை-கோபித்து மோதி
வாளை-வாளைமீன்கள் [டைய)
உகள்-புரளுகின்ற (வளப்பத்தையு
செந்தில்-திருச்செந்திற்பதியில்
வாழ்பவள்-வாழும் பெண்ணினது
சேல்-சேற்கெண்டைபோன்ற
விழி-கண்களிரண்டும்.

(க-ரை) குமாரக்கடவுள் அமர்ந்தருளிய திருச்செந்திற்பதியில் வாழும் பெண்ணினது கண்கள் பிரம்மாவுக்கு உறைவிடமாகிய தாமரையையும், இலங்கையை யழித்த ஸ்ரீராமரது பாணத்தையும், பரமசிவனுண்ட நஞ்சையும், இந்திரன் கைவாளையும் ஒத்து விளங்குகின்றன என்பதாம்.

(வி-ரை) விரி-எழுவாய், அன்ன-பயனிலை, ஏ-அசை. (88)

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனோற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே.

பதப்பொருள்

சேலை-அசோகமரத்தை
இலார் - இல்லிடமாகவுடைய அமணர்கள்
உந்து-உயர்ந்த
அ-அந்த
வன்-வலிய
சூலம்-கழுவில்
ஏற-ஏறி யழியும்படிக்கு
சினத்தவன்-சம்பந்தப் பிள்ளையாய்த் தேவாரம்பாடி ஜெயித்தவன்
கண்-விழியானது
சேல்-சேற்கெண்டைக்கும்
ஐயில்-வேலுக்கும்
ஆர்-ஒப்பாகிய
உந்தி-கான்யாற்றையுடைய
வன உற்பவை - வனத்தி லுற்பவித்த வள்ளிநாயகிக்கு
அரசு-தலைவனான குமாரக்கடவுள்
இந்திரியச் சேலை-பஞ்சேந்திரியச் செய்கைகளை
இலார்-நீக்கிய தபோதனர்கட்கும்
உம்பர்-தேவர்கட்கும்
ஆப-துன்பத்தை விளைத்த
ரிபு-சத்துருவாகிய சூரனை
குற-குற்றும்படி
சிக்கெனும்-இறுக்கிக் கட்டிய
இச்சேலையில்-பீதாம்பரக் கச்சையில்
ஆரும்-மாதர்களெல்லாம்
திறை இட்டன-கப்பமாகச் சமர்ப்பித்தார்கள்
தங்கள்-தங்கடங்கள்
சித்தங்கள்-இருதயங்களை.

(க-ரை) சம்பந்தப்பிள்ளையா யவதரித்துச் சமணரைக் கழுவேறும்படி செய்தவனும், வள்ளிநாயகிக்குத் தலைவனுமாகிய குமாரக் கடவுள் தேவர் முதலியோரை வருத்திய சூரனை வெல்லும்படி அழகிய அரையிற் கட்டிய பீதாம்பரக் கச்சையினிடத்தில் மாதர்களெல்லாருந் தங்கடங்கள் இருதயங்களைக் கப்பமாகச் சமர்ப்பித்தார்கள் என்பதாம்.

(வி-ரை) ஆரும்-எழுவாய், திறையிட்டனர்-பயனிலை, ஏ-அசை.

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்திரி கின்றதென்னர்ச்
சித்தத் தரங்கத்தர் சந்ததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே.

பதப்பொருள்

சித்த-இருதயமானது
தரங்கத்தர்-நிலைப்படாமலலைபோற் புரளுந் தன்மையை யுடையவர்
சித்தி-மோக்ஷத்தை
எய்த-அடையும்படி
திரிகின்றது-அலைந்து திரிகின்றது
என்-என்ன காரணம்?
அர்ச்சித்து-பூசைசெய்தே
அத்தர்-சுவாமியாகிய
அங்கத்தர் - எலும்பை மாலையாக வணிந்த பரமசிவனது
சந்ததியே-மைந்தனே!
செந்திலாய் - திருச்செந்திற் பதியோனே!
சலராசி-சமுத்திரத்தின்கண் [யை
தத்தரம் - தங்கள் தங்கள் வலிமை
கத்து-ஆர்ப்பரித்துச் சொல்லிய
அரக்கரை-அசுரரை
செற்ற-செயித்த
கந்தா-முருகனே!
திங்கள்-சந்திரன்
இஞ்சி-மதிலின்கண்
தத்து-தவழுகின்ற [ய
அரங்கத்தர்-திருவரங்க நாதருடை
சேய்-பிள்ளையாகிய (பிரம்மாவின்)
ஆரணம்-வேதம் பூசிக்கின்ற
தந்தி-பாம்புபோன்ற [வாழும்
கிரி - திருச்செங்கோட்டு மலையில்
ஐ-சுவாமியே!

(க - ரை) திருச்செந்திற்பதிக்கு அதிபனே! சமுத்திரத்தின்கண் அரக்கரை மாய்த்தோனே! கந்தனே! வேதம் பூசித்த திருச்செங்கோட்டு மலையில் வாழ்கின்றவனே! பரமசிவனது மைந்தனே! சித்தநிலையற்றவர்கள் வெளிப்பூசை செய்து மோக்ஷத்தை யடையும்படி அலைந்து திரிகின்றது என்ன காரணம்? என்பதாம்.

(வி - ரை) திரிகின்றது - எழுவாய், என் - பயனிலை, ஏ-அசை. (90)

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே.

பதப்பொருள்

சேடி-தோழியே!
இன்று-இன்றையத்தினம்
திகிரி-சக்கராயுதத்தை
வலம்-வலதுகரத்தில்
புரி-தரித்த
மாற்கு-விஷ்ணுவுக்கு
அரியார்க்கு-அறிதற்கரிதான பரமசிவனுக்கு
உபதேசஞ் சொன்ன - ஓங்காரப் பொருளை யுபதேசித்தருளிய
திகிரி-சுவாமிமலை யென்னுந் திருவேரகத்தையும்
வலம்புரி-சங்கினங்கள்
செய்-வயல்களின்கண்
ஆர்-நிறைந்திருக்கின்ற
இலஞ்சி-திருவிலஞ்சிப்பதியையும்
செந்தூர்-திருச்செந்தூரையும்
கன-மேகங்கள் தவழாநின்ற
தந்தி-பாம்புபோன்ற
கிரி-திருச்செங்கோட்டு மலையையும்
வலம் திருவலத்தையும்
புரிவேறும்-மற்றை ஸ்தலங்களையும்
படைத்தருள்-தனக்கு உறைவிடமாகக்கொண்டருளிய
சேய்-குமாரக்கடவுளது
தணியில்-திருத்தணிகையில்
திகிரி-மூங்கிலானது
வலம்புரி-நந்தியாவட்டத்தை
சூடியவா-சூடிய விதத்தின் குறி
நன்று-நன்றாக விருக்கின்றது.

(க-ரை) தோழியே! பரமசிவனுக்கு உபதேசித்த சுவாமிமலை, திருவிலஞ்சி, திருச்செந்தூர், திருச்செங்கோட்டுமலை, திருவலம், இவை முதலாகிய பல வேறுஸ்தலங்களிலும் உறைந்தருளிய குமாரக் கடவுளது திருத்தணிகைமலையில் மூங்கிலின்மேல் நந்தியாவட்டத்தைச் சூடியிருக்குங் குறி நன்றாயிருக்கின்றது என்பதாம்.

(வி-ரை) சூடியவா-எழுவாய், நன்று-பயனிலை, ஏ-அசை. (91).

சேடி வணங்கு வளைத்தோ ளெனப்புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கொடியிடை யாரையென் செப்புமுலை
சேடி வணங்கு தலைக்களி றீந்தது செல்லநில்லே.

பதப்பொருள்

சேடு-அழகியதாகும்
இ-இந்த
அணங்கு-மங்கையினது
வளை-வளையலையணிந்த [மகிழ்ந்து
தோள் என - தோளென்று மிகவு
புணர்-முன் வேண்டினகாலத் தெ
ன்னை மணம்புணர்ந்த
சேய-முருகனே!
வடசேடி-வடக்கின் கண்ணதாகிய
விஞ்சையருலகம்
வணங்கு-வழிபடத்தக்க
திருத்தணி-திருத்தணிகைக்கு
காவல-தலைவனே!
நின்-நினது
செருக்கால்-செருக்கினால்
சேடி-கர்வித்திருக்கின்ற
வணங்கு-துவளாநின்ற
கொடி-கொடிபோன்ற
இடையாரை - இடையையுடைய
பரத்தையரை
என் செப்பு - நிந்தித்துப் பேசவே
ண்டிய காரணமென்ன விருக்
கின்றது?
முலைச்சேடு-எனது கொங்கையின்
திரக்ஷியை [யாகும்படி
இவணம்-இப்படித்திரட்சியின்மை
குதலை-மழலைச்சொல்லையுடைய
களிறு-என் பாலன்
ஈந்தது-தந்துவிட்டது (ஆதலால்)
செல்ல-என்னிடத்து வராமற்செ
ல்லும்படி
நில்-தூரமாக நில்லு.

(க-ரை) தணிகைமலையில் வாழ்வோனே! பண்டென்னை மிகவு மழகுடையவளென்று மணம் புணர்ந்த சேயோனே! நீ இப்போது கலந்த களிப்பான் மிகுதியடைந்த பரத்தையரை யான் நிந்தித்துப் பேசவேண்டிய காரணம் என்ன விருக்கின்றது? எனது யௌவன பருவத்தை இம்மழலைச் சொல்லையுடைய பாலகன் வேறுபடுத்தினனாதலால் அப்பரத்தையர்பாற்றானே செல், என்பால் வரவேண்டியதில்லை என்பதாம்.

(வி-ரை) ஈ-தோன்றா எழுவாய், நில்-பயனிலை, ஏ-அசை. (92)

செல்லலை யம்பொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடிரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே.

பதப்பொருள்

செல்-மேகத்தை
அலை-அசைக்கின்ற
அம்-அழகிய
பொழில்சூழ்-சோலைசூழ்ந்த
செந்திலான் - திருச்செந்திற் பதியையுடையவன்
அறியான்-அறிகின்றானில்லை
இறை-பரமசிவனது
கை-கரத்தில்
செல்லல்-போகாதே
ஐயம்-பிச்சைக்கு
பொழில் எங்கணும்-உலகமெங்கும்
ஏற்ப-இரக்கும்படியாய்
என-என்று
தெறித்த-தமதிரத்தத்தைப் பிரமகபாலத்தில் தெறித்தவரும்
செல்லல்-துன்பத்தையும்
ஐயம்-பயத்தையும்
பொழில் - பெருமையையுமுடைய
லங்கைக்கு-இலங்காபுரிக்கு
அருள்-உண்டாக்கினவருமாகிய
திருமால்-ஸ்ரீராமரது
நிறம்போல்-நீலநிறத்தைப்போல
செல்-நடக்கின்ற
அல்-இராக்காலத்தில்
ஐ அம்பு-மன்மதனது பஞ்சபாணமானது
ஒழி-அழியும்படி
லாகவம்-மிகவு நொய்யதான
மாது உயிர்-மங்கையினுயிரை
சேதிப்பது-வதைக்கின்றதை.

(க - ரை) பரமசிவனது கையிலிருக்கின்ற பிரம்மகபாலத்தில் தமது இரத்தத்தைப் பலியாக வார்த்தவரும், இலங்காபுரியைச் செயித்தவருமான விஷ்ணுவின் நிறம்போல் இருண்ட இராக்காலத்திற் காமபாணங்கள் இம்மங்கையின் உயிரைப் பிளக்கின்றதைச் செந்தில் நாயகன் அறியானோ? என்பதாம்.

(வி - ரை) செந்திலான் - எழுவாய், அறியான் - பயனிலை, ஏ- அசை. (93)

சேதிக் கனைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரங்கஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கொடெற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமா மறலி திறலினையே.

பதப்பொருள்

சேது-சிவந்த
இக்கனை - கருப்பு வில்லையுடைய மன்மதனை
துகளதாக்கும் - சாம்பலாகும்படி யெரித்த
நோக்கினன் - நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனது
செல்வ-மைந்தனே!
செந்தில் சே-திருச்செந்தூர் முருகனே!
திக்கு அனைத்தும் - திசைகளெல்லாம்
நிலைபெற - நிலைபெற்றிருக்கும்படியாயும்
சூர்-சூரனுடைய
அங்கம்-உடலை
சீரங்கம்-திருவரங்கத்தில் வாசஞ்செய்கின்ற
மால்-விஷ்ணுவினது
சே-பிள்ளையாகிய பிரம்மா
திக்க-திகைக்கும்படி
னைத்து-அழித்து
உவரி-சமுத்திரத்தில்
தோய்-மூழ்கிய
அயில் கொடு - வேலாயுதத்தைக் கொண்டு
என் சேர்க்க வந்தால்-என்னை யமபடாள் கட்டிக்கொண்டு போக வந்தால்
சேதி-கண்டிப்பாயாக
கனைத்து வரும் - கனைத்துக்கொண்டு வராநின்ற
மாமறலி-பெரிய யமனது
திறலினை-உக்ர வல்லமையை.

(க-ரை) கருப்புவில்லையுடைய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனது மைந்தனே! திருச்செந்திற்பதியில் வாழ்கின்ற சுவாமியே! நீ பிரமன் திகைக்கவும், திக்குகளெல்லா நிலைபெறவும், சூரனை வென்று சமுத்திரத்திற்றோய்ந்த வேலாயுதத்தினாலே, என்னைக் கட்டிக்கொண்டுபோக வரும் யமனது வலியைச் சேதிக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், சேதி-பயனிலை, ஏ-அசை. (94)

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியைவென் றேய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே.

பதப்பொருள்

திறவு-திறவுகோல்
ஆ-ஆனவனே!
அனக-பாவமற்ற
புரி-கைலாயத்தினது
வாசல்-கதவை
நீக்க-திறக்க
சிகரி-கிரவுஞ்சகிரியினது
நெஞ்சம்-மார்பை
திறவு-பிளந்து
ஆ-ஆச்சரியமாக
வனச - தாமரையில் வாசஞ் செய்கின்ற
முனியை-பிரமனையும்
வென்றேய்-செயித்தவனே!
தென் திசை-தெற்கின்கண்ணதாகிய
திருச்செந்தில்-திருச்செந்தூரில்
தவா-நீங்காதமர்ந்தருளுகின்ற
வன-அழகிய
மயிலோய் - மயில்வாகனத்தை யுடையவனே!
அந்த காலம் - என்னுடல் கெடும் அனித்தியகாலத்தில்
என் சிந்தை-எனது சிந்தனையை
வைக்க - ஒருவழிப்படுத்திச் சேர்ப்பதற்கு
திறவாவன - அடைக்கல ஸ்தானமெவையெனில்
நின்-நினது
திரு ஆன - சிறப்பையுடையனவாகிய
தண்டை-தண்டையை யணிந்த
திருவடி-திருவடியே.

(க-ரை) கயிலாயத்தின் கதவு திறக்கும்படி செய்கின்றவனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்து பிரம்மாவையும் வென்றோனே! தெற்கின் கண்ணதாகிய திருச்செந்தூரில் வாழும் மயில்வாகனனே! என் அனித்திய காலத்தில் உனது தண்டையணிந்த தாளே யென் சிந்தையை வைக்கும் அடைக்கல ஸ்தானமாம் என்பதாம்.

(வி-ரை) திருவடி-எழுவாய், திருவாவன-பயனிலை, ஏ-அசை. ()

திருக்கையம் போதிக ளோகஞ் சமோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவபத்
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே. [க்

பதப்பொருள்

திருக்கை-திருக்கையென்னு மீனையுடைய
அம்போதிகளோ - சமுத்திரங்களோ!
கஞ்சமோ-தாமரையோ!
நஞ்சமோ-விஷமோ!
திருமால்-விஷ்ணுவினது
திருக்கை - திருக்கரத்தி லிருக்கின்ற
அம்போ-பாணமோ!
செய்ய-சிவந்த
வேலோ-வேலாயுதமோ!
விலோசனம்-கண்
தென்னன்-கூன்பாண்டியனது
அங்கத் திருக்கை-முதுகின் கூனை
அம்போருகம் - தாமரை மலர்போன்ற
கைந்நீற்றின் - கரத்திற் றரித்த திருநீற்றினால்
மாற்றி-நீக்கி
தென் நூல்-தமிழ் நூலாகிய [கும்
சிவபத்தி - சிவபத்தியை விளைவிக்
ருக்கு-ருக்குவேதசாரமாகிய (தேவாரத்தை)
ஐயம் போக-பரசமய நூல்களினுலுண்டாகுஞ் சந்தேக நிவர்த்தியாக
உரைத்தோன் - சம்பந்தப்பிள்ளையா யவதரித்துத் திருவாய்மலர்ந்தருளிய குமாரக்கடவுளது
சிலம்பில்-மலையின்கணிருக்கின்ற
சிறுமிதற்கு - சிறியாளாகிய கன்னிக்கு.

(க-ரை) முன் சம்பந்தமூர்த்தியா யவதரித்துத் திருநீற்றாற் சமணமதம் பூண்டிருந்த பாண்டியனது கூனை மாற்றியும், எச்சமயம் பெரிதோ என்னு மையமற்றுச் சைவமே பெரிது என்று நம்பும்படி தமிழ்வேதமாகிய தேவாரத்தை மொழிந்தருளிய குமாரக்கடவுளது மலையின்கண் வாழும் கன்னியினது கண் சமுத்திரமோ! தாமரையோ! விடமோ! அம்போ! வேலோ! என்பதாம்.

(வி-ரை) விலோசனம்-எழுவாய், சமுத்திரமுதலிய - பயனிலை, ஏ-அசை. (96)

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்வீர் செந்திணைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் ரேன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீரடிக்கே.

பதப்பொருள்

சிறு-சிறிதான
உமிக்கும்-குற்றுமியையாயினும்
மரநிகர்வீர்பகிர-பிறர்க்கிட்டுண்ண மனங் கூடாமன் மரம்போன் றிருப்பவரே!
சிதை-அழிந்துபோவதும்
உயிர்-பிராணனுக்கு
துச்சில்-ஒதுக்கிடமுமாகிய இவ் வுடலின்கண் [காலையினும்
துமி-ஒருதும்ம லுண்டாகும் அக்
குமர-குமரனே!
சரணம்-உனக்கடைக்கலம்
என்னீர்-என்று சொல்லுங்கள்
உய்வீர்-பிழைப்பீர்கள்
செம்-சிவந்த [ஞ்செய்த
திணைமேல்-திணைப்புனத்தில் வாச
சிறுமிக்கு-வள்ளிநாயகிக்கு
மரபு-தமது மரபின் வழிகளை
உரைத்து-எடுத்துரைத்து [னும்
நின்ரேன் - குறையிரந்து நின்றவ
சிலை-வில்லையுடைய
வேட்டுவன்-வேடத்திருமேனியை யுடைய கண்ணப்ப நாயனூர்
எச்சில் - ஊண் முதலியவற்றை முன் ருசிபார்த்து நிவேதித்த எச்சிலை
து-உவப்புடனே யுண்டவராகிய
மிக்கும்-மேன்மையாக
அரவு-சர்ப்பாபரணத்தை
அணி-தரித்த
முடியான்-முடியையுடைய பரமசிவனது
மகன் - மைந்தனுமாகிய குமாரக் கடவுளினது
சீரடிக்கு-சிறப்பையுடைய திருவடியைக் கருதிக்கொண்டே.

(க - ரை) சிற்றுமியும் ஈயாமல் மரம்போன் றிருப்பவர்களே! நீங்கள் பிழைப்பதெப்படி? நீர் தும்முங்காலையிலாவது திணைப்புனத்தின்கண் வள்ளியம்மையினிடத்துத் தமது மரபையோதி நின்றவனும், கண்ணப்ப நாயனூர் நிவேதித்த எச்சிலை யினிதாகக்கொண்ட பரமசிவன் மைந்தனுமாகிய கந்தசுவாமியின் திருவடியைக் கருதிக் குமரனே சரணம் என்றீரானுல் பிழைப்பீர்கள் என்பதாம்.

(வி-ரை) நீர்-தோன்ருு எழுவாய், உய்விர்-பயனிலை, ஏ-அசை.

சீரங்க ராக மறமோது திகிரி செங்கைகொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்தினைமேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ்நூற்
சீரங்க ராக விநோதவென் பார்க்கில்லை தீவினையே.

பதப்பொருள்

சீரம்-கலப்பையையும்
கரா-முதலையினது
கம்-தலையை
அற-அறும்படி
மோது-அமர்செய்த
திகிரி-சக்கரத்தையும்
செம்-சிவந்த
கை-கரத்தில்
கொண்ட-தரித்திருக்கும்
சீரங்கர் - திருவரங்கத்தையுடைய திருமாலும்
ஆகமர் - ஆகமவேதத்தை யருளிய பரமசிவனும்
உகந்த-விரும்பத்தக்க
தேசிக-அழகனே!
செம்-சிவந்த
தினைமேல்-தினைப்புனத்தில் வாழும்
சீர்-சிறந்த வள்ளி நாயகியினது
அங்கராக-சாந்தணிந்த
தனம் கிரி-தனமாகிய மலையை
தோய்-தழுவிய
கந்த-குமாரக்கடவுளே!
செந்தமிழ் நூல்-செவ்விய தமிழ்ப் பநுவலின்
சீரங்க - சீர் முதலிய எட்டுறுப்புக் குரிய பாவலனே!
ராக விநோத - கீதத்தி லுல்லாசனே!
என்பார்க்கு - என்று நாடோறுந் துதிக்கின்றவர்கட்கு
தீவினை இல்லை-கொடியவினை சேராது.

(க-ரை) கலப்பை யாயுதத்தையும், சக்கராயுதத்தையுமுடைய திருமால் மருகோனே! சுந்தரனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகியைத் தழுவுங் கந்தனே! இயலிசை முதலிய தமிழ் நூற்குரிய விநோதனே! என்று துதிப்பவர்கட்குத் தீவினை யில்லை என்பதாம்.

(வி-ரை) தீவினை-எழுவாய், இல்லை-பயனிலை, ஏ-அசை. (98)

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வநந்தா தெடுத்தனஞ் செந்தினைமேல்

தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கநகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெருஞ் செல்வனுக்கே.

பதப்பொருள்

தீ-அக்கினியானவன்
வினையற்ற-தீக்ஷண்ணியமாகத் தகிக்கின்றதன் செய்கை யற்றதுபோல்
சினம் தீர்-கோபநீங்கிய
அகத்துள்-நமது சாந்த இருதயத்துள்
மெய்-உண்மையாகிய
தீபம்-ஞானவிளக்கை
நந்தம் தீவினை - நம்முடைய தீவினையாகிய
அல்-இருளானது
தவ-கெடும்படி
நந்தாது-அவிந்துபோகாமல்
எடுத்தனம்-ஏற்றி வைத்தோம்
செம்-சிவந்த
தினைமேல்-தினைப்பயிர் விளைவில்
தீ-தீய்ந்து போகும்
வினை அற்ற-செய்கையில்லாத
புன-புனத்தில் வாழும்
மான் - மான்போன்ற கண்ணையுடைய வள்ளியம்மைக்கு
கொழுநன்-நாயகனாகிய
செழும்-செழுமைதங்கிய
கனகத்தீவினை - பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற மோக்ஷ வுலகத்தை
அற்ற-பாசபந்தங்க ணீங்கிய
அடியார்க்கு-தமதடியார்கட்கு
அருள்-கொடுத்தருள்கின்ற
பெரும்-பெரிய
செல்வனுக்கு-அருணிறைந்த செல்வனுக்கு.

(க-ரை) வளப்பமிகுந்த தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளியம்மைக்கு நாயகனும், பற்றற்ற அடியார்கட்கு மோக்ஷவுலகத்தை யளிப்பவனுமாகிய குமாரக்கடவுளுக்கு நமது சாந்த இருதயத்தகழியி லுண்மையாகிய ஞானவிளக்கை ஏற்றி வைத்தோம் என்பதாம்.

(வி-ரை) யாம்-தோன்றா எழுவாய், எடுத்தனம்-பயனிலை, ஏ-அசை.

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னார்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்தசெல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே.

பதப்பொருள்

செல்-அங்குசென்று
வந்தி-வணக்கஞ்செய்
கழுமலம் - குமாரக்கடவுளானவர் முன் சம்பந்தப் பிள்ளையா யவதரித்தருளிய சீகாழிப்பதியின் கண்
நெஞ்சமே-இருதயமே!
அவன்-அவரது
தெய்வ-தெய்வீகமாகிய
மின்-தெய்வயானை
ஊர்-ஏறிவருகின்ற
செல்-மேகவாகனமானது
வந்து-வந்து
இகழும்-(பிறரால்) இகழப்படும்
நமது-நம்முடைய
இன்மை-இல்லாமை யாவும்
தீர்க்கும்-நீக்கிவிடும்
வெம்-கொடிய
கூற்றுவற்கு-யமனுக்கு
செம்-நம்மேல் நடப்பதாகிய
வந்தி-கொடுமையை
கழும்-துடைத்துவிடும்
திருக்கையில்-(முருகக் கடவுளது) திருக்கரத்தின்
வேல்-வேலாயுதமானது
தினைகாத்த-தினைப்புனங் காவல்பூண்ட
செல்வி-வள்ளிநாயகியினது
செல்வம்-பெருஞ்சிறப்பாக
திகழும்-(நிறைந்து) பிரகாசிக்கின்ற
மணவாளன் - நாயகனாகிய கந்தசுவாமியானவர்
திருவடி நல்கும்-உனது திருவடித் தாமரையை நமக்குத் தந்தருளுவார்.

(க-ரை) நெஞ்சமே! தெய்வயானையினது வாகனமாகிய மேகம் நமது வறுமையைத் தவிர்க்கும்; குமாரக்கடவுளது வேலாயுதம் நமக்கு வரும் யமதண்டனையை நீக்கிவிடும்; வள்ளிநாயகிக்கு மணவாளராகிய கந்தசுவாமி தமது திருவடித்தாமரையைத் தந்தருளுவார்; ஆதலால், நீ அக்கடவுள்முன் சம்பந்தப்பிள்ளையா யவதரித்த சீகாழியிற்சென்று அவரை வணங்கு என்பதாம்

(வி-ரை) நீ-தோன்றா எழுவாய், வந்தி-பயனிலை, ஏ-அசை. (100)

கந்தரந்தாதி மூலமும் விருத்தியுரையும்

முற்றிற்று.

கந்தரந்தாதியின்

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
உ	
உண்ணாமுலை	5
சி	
சிகண்டிதத்த	124
சிகாவல	138
சிகைத்தோகை	108
சிக்குற	75
சித்தத்தரங்க	147
சித்திக்க	89
சித்திரமிக்	107
சிந்தாகுல	57
சிந்துரவித்தக	127
சிலைமத	29
சிவசிவசங்கர	141
சிறுமிக்கு	154
சிறைவர	36
சிற்றம்பலத்தை	95
சீ	
சீகரசிந்து	123
சீதனங்கோடு	26
சீயனம்போதி	54
சீரங்கராக	155
சீராமராம	137
சீர்க்கை	94
சீலங்கன	115
சீவனசத்து	126
செ	
செகம்புரவார்	64
செச்சையவா	93
செந்திலகத்	41
செப்பத்தமதிலை	117
செப்பாரமு	136
செப்புங்கவச	12
செம்மலைவண்டு	133
செயதுங்க	56
செயலங்கை	145
செய்தவத்	132
செய்யம்சேந்	100
செருக்கும்பராக	103
செல்லலை	150

செய்யுள்	பக்கம்
செல்வந்திகழு	156
செவிக்குன்ற	70
செவ்வந்தி	21
செற்றைறவரும்	59
சென்னிய	15
சே	
சேகரவாரண	125
சேடிவணங்கு	149
சேதகமொன்று	106
சேதனந்தந்து	90
சேதாம்பல	101
சேதிக்கனே	151
சேந்தமரா	142
சேமரவிக்	97
சேயவன்	105
சேரப்பொருப	131
சேரிக்குவடு	49
சேர்ப்பதுமால	116
சேலையிலாருங்	146
சேவகமன்ன	121
சேவற்கொடி	46
சேறலைத்தா	143
தி	
திகழுமலங்கற்	79
திகிரிவலம்புரி	148

செய்யுள்	பக்கம்
திகைப்படங்க	122
திக்கத்தி	33
திக்கரச	118
திங்களுமாசுண	128
திசாமுக	130
திடம்படு	104
திதத்தத்தத்	111
தித்தவித்தார	19
தித்திக்குங்	109
திமிரத்திமிர	23
தியங்கா	120
திரளக்க	31
திரிகையிலா	91
திரிபுரத்தப்பு	135
திருக்கை	153
திருத்துள	92
திருவாவி	9
திலமுந்தயில	119
திவாகர	43
திறம்பாடுவர்	144
திறவாவனக	152
தினகரரக்க	61
தினைவேத்தி	53
தீ	
தீட்டப்படா	129
தீதாவசவ	88

செய்யுள்	பக்கம்
தீதோமரணங்	112
தீத்தன்பரவை	114
தீராகமல	140
தீவாகந்தரி	96
தீவிலங்கங்கை	110
தீவினையற்ற	155
தீனந்தினத்து	99
தெ	
தெண்டன்	98
தெய்வமணம்	84
தெளிதரு	67
தென்றலையம்பு	139
தென்னவனங்	113
தே	
தேசம்புகல	102
தேங்காவன	38
தேடிக்கொடும்	72
தேமொழி	17
தேரைவிடப்	134
வா	
வாரணத்தானை	1

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1937